# தொழில் துறை

# பெருந்தொழில்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022 - 2023

## மானியக் கோரிக்கை எண். 27


## தங்கம் தென்னரசு

தொழில் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2022



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

# தொழில் துறை

# பெருந்தொழில்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022-2023

### பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1-16 |
| 1. | வழிகாட்டி நிறுவனம் | 17-60 |
| 2. | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 61-108 |
| 3. | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 109-152 |
| 4. | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 153-172 |
| 5. | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் | 173-184 |
| 6. | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் | 185-200 |
| 7. | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | 201-216 |
| | முடிவுரை | 217-219 |

# தொழில் துறை

# பெருந்தொழில்

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2022-23

## முன்னுரை

**"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை"**

தளராத ஊக்கம் எங்கு இருக்கிறதோ, அங்கு பொருள்வளம் தேடிச் செல்லும் என்றார் வள்ளுவப் பெருந்தகை.

தமிழ்நாடு அரசு, தளர்வில்லாத ஊக்கத்தோடு செயல்படுவதனால்தான், முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி, நமது மாநில பொருளாதாரத்தை வலுவடையச் செய்துள்ளது.

எனவே தான், பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தற்போது தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாக விளங்கி வருகிறது. இந்திய அளவில், இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது. 2020-21-ஆம் நிதியாண்டில், நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில், தமிழ்நாடு 9.47% பங்களிப்பை அளித்துள்ளது.

தமிழ்நாட்டின் பொருளாதாரம் 19.02 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 2021–22ம் நிதியாண்டில் 21.79 லட்சம் கோடி ரூபாயாக வேகமாக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கான, 2030–31–ஆம் நிதியாண்டிற்குள், தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சியடைய செய்யவேண்டும் எனில், பொருளாதார வளர்ச்சியில், உற்பத்தித் துறை முக்கிய பங்கு வகித்தால் மட்டுமே சாத்தியமாகும். தமிழ்நாடு ஒரு வலுவான உற்பத்திச் சூழல் அமைப்பினைக் கொண்டுள்ள மாநிலமாக விளங்குகிறது. 2020–21–ஆம் நிதியாண்டில், 48.1 பில்லியன் டாலராக இருந்த (மாநில உள்நாட்டு உற்பத்தியில் 18%), மாநில உற்பத்தித் துறையின் பங்களிப்பை, 2030–31–ஆம் நிதியாண்டில், 250 பில்லியன் டாலர் (மாநில உள்நாட்டு உற்பத்தியில் 25%) அளவிற்கு உயர்த்துவதற்கான வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்த இலக்கினை அடைய 23 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்திடவும், 46 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1. கண்ணோட்டம்

தொழிலகங்களின் வருடாந்திர கணக்கெடுப்பு (Annual Survey of Industries) புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாடு, தொடர்ந்து மிகவும் தொழில்மயமான மாநிலமாக, தனது முன்னணி இடத்தைத் தக்க வைத்துக்கொண்டு வருகிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட, அதாவது 2018-19-ம் ஆண்டிற்கான புள்ளி விவரங்களின்படி, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை (38,131) மற்றும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை (25.82 இலட்சம் பணியாளர்கள்) ஆகிய அளவீடுகளின் தரவரிசையில் அகில இந்திய அளவில், தமிழ்நாடு முதல் நிலை வகிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மொத்த உற்பத்தி (9.33 இலட்சம் கோடி ரூபாய்), மொத்த மதிப்புக் கூட்டு (1.81 இலட்சம் கோடி ரூபாய்) மற்றும் முலதன மூதலீடுகள் (4.27 இலட்சம் கோடி ரூபாய்) ஆகிய அளவீடுகளில், அகில இந்திய அளவில், தமிழ்நாடு மூன்றாம் நிலை வகிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் (மின்சார வாகனங்கள் உட்பட), ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள்,

இரசாயனங்கள் (இரப்பர் மற்றும் நெகிழி உட்பட), மின்னணு பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் கட்டுருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் போன்ற துறைகளில், கணிசமான அளவில் தொழிற்சாலைகள் அமையப்பெற்றுள்ள காரணத்தால், தமிழ்நாடு அகில இந்திய அளவில் ஒரு உற்பத்தி மையமாக விளங்குகிறது.

**ASI–2018–19ன் அளவீடுகளின் படி தமிழ்நாட்டின் துறைவாரியான செயல்திறன்**

| துறை | தரவரிசையில் தமிழ்நாடு | உற்பத்தி (ரூ. கோடியில்) | அகில இந்திய உற்பத்தியில், தமிழ்நாட்டின் பங்களிப்பு (சதவீதத்தில்) | முதலிடம் பெற்ற மாநிலம் | முதலிடம் பெற்ற மாநிலத்தின் உற்பத்தி அளவு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் & உதிரிபாகங்கள் | முதலிடம் | 1,90,165.31 | 26.67 | தமிழ்நாடு | 1,90,165.31 |
| ஆயத்த ஆடைகள் | முதலிடம் | 52,147.05 | 34.06 | தமிழ்நாடு | 52,147.05 |
| தோல் மற்றும் அதன் தொடர்புடைய பொருட்கள் | முதலிடம் | 16,507.02 | 27.02 | தமிழ்நாடு | 16,507.02 |
| ஜவுளி | இரண்டாமிடம் | 96,555.03 | 22.05 | குஜராத் | 1,06,952.63 |
| இயந்திரங்கள் | இரண்டாமிடம் | 75,489.32 | 18.24 | மஹாராஷ்டிரா | 1,06,048.19 |
| மின்னணுவியல் | இரண்டாமிடம் | 47,561.76 | 19.60 | உத்தர பிரதேசம் | 65,517.06 |
| கட்டுருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் | இரண்டாமிடம் | 29,993.11 | 13.15 | மஹாராஷ்டிரா | 53,809.70 |
| ரப்பர் மற்றும் நெகிழிப் பொருட்கள் | மூன்றாமிடம் | 37,540.60 | 10.74 | மஹாராஷ்டிரா | 54,493.42 |
| உணவு பதப்படுத்துதல் | ஐந்தாமிடம் | 85,686.17 | 7.20 | மஹாராஷ்டிரா | 1,70,998.64 |
| இரசாயனங்கள் | நான்காமிடம் | 35,825.98 | 4.36 | குஜராத் | 2,91,562.14 |

மேலும், ஏப்ரல் 2021–ல் 124.5 ஆக இருந்த தமிழ்நாட்டின் தொழில் உற்பத்திக் குறியீடு, நவம்பர் 2021 வரையில் 136.3 ஆக உயர்ந்து, 9.5 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளது. இதே காலகட்டத்தில், 124.6 ஆக இருந்த இந்தியாவின் தொழில் உற்பத்திக் குறியீடு 129.6 என்ற அளவிற்கு உயர்ந்தாலும், 4 சதவீதம் என்ற குறைந்த அளவிலான வளர்ச்சி விகிதத்தை மட்டுமே அடைந்துள்ளது.

அகில இந்திய அளவில், தமிழ்நாடு ஒரு வலுவான ஏற்றுமதி மையமாகவும் செயல்பட்டு வருகிறது. ஏப்ரல் முதல் டிசம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டின் ஏற்றுமதி மதிப்பு 1.90 இலட்சம் கோடி ரூபாய் ஆகும். கடந்த ஆண்டு, இதே காலகட்டத்தில், அதாவது ஏப்ரல் முதல் டிசம்பர் 2020 வரை மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை கணக்கிட்டால், 43 சதவீதம் வளர்ச்சியை தமிழ்நாடு பதிவு செய்துள்ளது. 2021–22–ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.40 சதவீதம் ஆக உள்ளது.

ஹீண்டாய், ப்யூஜோ, BMW, டெய்ம்லர், கேட்டர்பில்லர், அசோக் லேலண்ட், TVS, ரெனால்ட் நிஸ்ஸான், ஃபாக்ஸ்கான், டெல்டா, டெல், HP, சால்காம்ப், சியட், சாம்சங், மிச்செலின், MRF, கிரண்ட்ஃபோஸ்,

வெஸ்டாஸ், நார்டெக்ஸ், ஹிட்டாச்சி மற்றும் L&T போன்ற பெரிய தொழில் நிறுவனங்கள், தங்களது உற்பத்தித் திட்டங்களை தமிழ்நாட்டில் அமைத்துள்ளன. சமீபத்தில், ஓலா எலக்ட்ரிக், டாடா எலெக்ட்ரானிக்ஸ், ஃபர்ஸ்ட் சோலார் மற்றும் பெகாட்ரான் போன்ற புதிய நிறுவனங்களையும் தமிழ்நாடு ஈர்த்துள்ளது.

இவை மட்டுமின்றி, தமிழ்நாடு அதிக அளவில் பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்த்து வரும் மாநிலமாகவும் திகழ்கிறது. 80–க்கும் மேற்பட்ட குளோபல் பார்ச்சூன் 500 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. 2019–ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் இது 33.33 சதவீதம் வளர்ச்சி ஆகும். அதே நேரத்தில், தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் தங்களது முதலீடுகளை அதிகரித்துள்ளன. உலகளாவிய முதலீட்டு மையமாக தமிழ்நாட்டின் மீது முதலீட்டாளர்கள் வைத்துள்ள பெரும் நம்பிக்கையை இந்த புள்ளி விவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

## 2. முதலீடுகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்மிகு தலைமையின் கீழ், உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீடுகளுக்கு உகந்த இடமாக தமிழ்நாடு

தன்னைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. உற்பத்தித் துறையில் மதிப்புச் சங்கிலியை பெருமளவில் அதிகரிப்பது மற்றும் மாநில மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிப்பது ஆகியவை இம்முதலீடுகளின் முக்கிய இலக்காகும்.

2021–22–ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு அரசு, 68,375 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் மற்றும் 2.05 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கும் வகையில் 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது. மின்னணுவியல், மோட்டார் வாகன உதிரிபாகங்கள், தடையில்லா வர்த்தகக் கிடங்கு மண்டலங்கள் (FTWZ), தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்பச் சேவைகள், பொது உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், காலணி, மருந்துகள் மற்றும் ஜவுளிகள் போன்ற துறைகளில் மட்டுமின்றி, மரச்சாமான்கள் உற்பத்தி, மின்வாகனங்களுக்கான மின்னேற்று உட்கட்டமைப்பு போன்ற புதிய துறைகளிலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தின் சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு மாவட்டங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏப்ரல் 2000 முதல் டிசம்பர் 2021 வரை 36.90 பில்லியன் அமெரிக்க டாலர் அந்நிய நேரடி முதலீடுகளை பெற்று, அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்கும் முதல் 5 முன்னணி மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் ஜூலை முதல் டிசம்பர் 2021 வரை 12,000 கோடி ரூபாய் அந்நிய நேரடி முதலீடுகளை நமது மாநிலம் ஈர்த்துள்ளது. ஏப்ரல் முதல் டிசம்பர் 2021 வரையிலான காலத்தில் அந்நிய நேரடி முதலீடுகள் 41 சதவீதம் அதிகரித்துள்ளது.

3. உள்கட்டமைப்பு

தொழில் நிறுவனங்களுக்கான நிலங்கள் கையிருப்பு அடிப்படையில், தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. மேலும் தமிழ்நாட்டில், மாநிலம் முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் தொழில் கட்டமைப்புகளை மேம்படுத்த, கோயம்புத்தூர், பெரம்பலூர், மதுரை, வேலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில், புதிய தொழில் பூங்காக்களை அமைத்திட தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. அது மட்டுமின்றி, கீழ்க்கண்ட துறை

சார்ந்த பூங்காக்களை அமைத்திடவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது:–

- காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில், மருத்துவ சாதனங்கள் பூங்கா
- மணப்பாறை, திண்டிவனம் மற்றும் தேனி ஆகிய இடங்களில் உணவுப் பூங்காக்கள்
- மாநல்லூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் முறையே மின் வாகனங்களுக்கான பூங்கா மற்றும் வருங்கால நகர்திறன் பூங்கா
- பிள்ளைப்பாக்கம் மற்றும் மாநல்லூரில் மின்னணுவியல் உற்பத்தித் தொகுப்புகள்
- விருதுநகரில் ஒருங்கிணைந்த ஆடை மற்றும் ஜவுளிப் பூங்கா
- பனப்பாக்கத்தில் தோல் காலணிகள் மற்றும் உப பொருட்களின் உற்பத்தித் தொகுப்புகள்
- சென்னை, நந்தம்பாக்கத்தில் நிதி நுட்ப நகரம்

2030ம் ஆண்டில், 100 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு ஏற்றுமதி என்ற இலக்கினை அடைந்திட தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டில் உள்ள ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தேவையான பொது உள்கட்டமைப்பு வசதிகளை தொழிலகங்கள் மற்றும்

தொழிற் கூட்டமைப்புகளின் பங்களிப்புடன் உருவாக்கிட 100 கோடி ரூபாயில், சிறப்பு நிதியம் உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இந்த நிதியத்தின் மூலம் திறன் மையங்கள், சோதனை மையங்கள், ஏற்றுமதிக் கிடங்குகள் மற்றும் உள்நாட்டு கொள்கலன் கிடங்குகள் போன்ற ஏற்றுமதிக்குத் தேவையான பொது உள்கட்டமைப்புகள் நிறுவப்படும்.

4. **விமான நிலையத் திட்டங்கள்**

அரசாணை (நிலை) எண்.2, மனிதவள மேம்பாட்டுத் துறை, நாள் 10.01.2022- படியும், அரசாணை (நிலை) எண்.24, பொது (சிறப்பு-ஆ) துறை, நாள் 11.01.2022-ன்படியும், "விமான போக்குவரத்து" தொடர்பான பொருண்மைகள் போக்குவரத்துத் துறையிலிருந்து தொழில் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாணைகளைத் தொடர்ந்து, நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வதற்கும், நிலங்களை கையகம் செய்து விமான போக்குவரத்துத் துறைக்கு வழங்குவதற்கும், தொழில் துறை தற்போது முகமை துறையாக செயல்படுகிறது.

## 5. சர்வதேச மற்றும் தேசிய அளவிலான அங்கீகாரம்

கீழ்க்கண்ட பல்வேறு கணக்கெடுப்புகள், தமிழ்நாட்டின் செயல்திறன் மற்றும் முன்னணி நிலைக்கான அங்கீகாரம் ஆகியவற்றினை எடுத்துக் காட்டுகிறது.

- தமிழ்நாடு அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாக வழிகாட்டி (Guidance) நிறுவனம் ஆசிய ஓசியானிய மண்டலத்தின் **"சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு முகமைக்கான"** விருதை வென்றுள்ளது. ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதார அமைச்சகத்தில் நடத்தப்படும் வருடாந்திர முதலீட்டிற்கான சந்திப்பு (AIM) 2022–ன் போது இவ்விருது வழங்கப்பட்டது. வழிகாட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இந்த பெருமைமிகு அங்கீகாரம் சர்வதேச அரங்கில் தமிழ்நாடு பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்றுள்ளதை வெளிப்படுத்துகிறது.
- "The Financial Times" மற்றும் "The Economist" இதழ்களின் ஆராய்ச்சி அலகான FDI intelligence–ன் படி உலகளவில், மின்னணு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளில், தென் கொரிய நகரமான சியோலுக்கு அடுத்ததாக சர்வதேச

அளவில், **சென்னை இரண்டாவது இடத்தில் உள்ளது.**

- ஒன்றிய அரசின், தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை (DPIIT) வெளியிட்டுள்ள "தொழில் பூங்கா அறிக்கை அமைப்பு 2.0" (Industrial Park Rating System – IPRS 2.0) அறிக்கையின் படி, தொழில் நிலங்கள் கையிருப்பு அடிப்படையில், அகில இந்திய அளவில் தமிழ்நாடு **முதலிடத்தில்** உள்ளது.
- இந்தியா டுடே நிறுவனத்தின் 2021ம் ஆண்டிற்கான "மாநிலங்களில் சிறந்த மாநிலம்" (State of States) கருத்துக்கணிப்பில், தொடர்ந்து நான்காவது வருடமாக, அகில இந்திய அளவில் சிறப்பாகச் செயல்படும் பெரிய மாநிலங்களில், தமிழ்நாடு **முதலிடத்தில்** உள்ளது.
- ஒன்றிய அரசின் வர்த்தம் மற்றும் தொழில் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட "LEADS 2021" குறியீடுகளின்படி தமிழ்நாடு, அகில இந்திய அளவில் **நான்காமிடம்** பிடித்துள்ளது. சென்ற வருடம், அதாவது LEADS 2020 குறியீடுகளின்படி ஐந்தாம் நிலை வகித்த தமிழ்நாடு, தற்போது நான்காமிடத்திற்கு முன்னேறியுள்ளது.

- "ப்ராஜெக்ட்ஸ் டுடே" நிறுவனத்தின் 86–வது கணக்கெடுப்புகளின் படி, 2021–22–ம் நிதியாண்டில் 1.73 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, அகில இந்திய அளவில் தமிழ்நாடு **மூன்றாவது** இடத்தைப் பிடித்துள்ளது.
- ஒன்றிய அரசின் நிதி ஆயோக் வெளியிட்ட ஏற்றுமதித் தயார் நிலைக் குறியீடு 2021 வெளியீட்டின்படி, அகில இந்திய அளவில், தமிழ்நாடு **நான்காவது** இடத்தைப் பிடித்துள்ளது.

## 6. நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள்

நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது 2015ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொது சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றோடு ஒன்று தொடர்புடைய 17 இலக்குகளைக் கொண்ட தொகுப்புகள் ஆகும். சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றில் 2030ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியை அடையும் நோக்கில் இது உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்து நீடித்த மற்றும் நிலையான இலக்குகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருந்தாலும், 8 மற்றும் 9வது இலக்குகள் தொழில்துறையை சார்ந்தாக இருப்பதால்,

அவை மீது இத்துறையால் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

8–வது நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கானது, நிலையான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல், உற்பத்தி திறனை அதிகரித்தல், தொழில்நுட்ப புத்தாக்கங்களை அதிகரித்தல், வேலைவாய்ப்புகள் உருவாக்கல் மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. 9–வது நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கானது, தொழிலகங்கள், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது. இது முதலீடு, தொழில்நுட்ப புத்தாக்கம் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகள் ஆகியவற்றை ஊக்குவித்து, நீடித்த நிலையான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைய உதவுகிறது.

நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கிற்கான இந்திய குறியீடு 3.0 அறிக்கையின்படி, 74 புள்ளிகளுடன் தமிழ்நாடு இரண்டாம் இடம் வகிக்கின்றது. இது தேசிய அளவான 66 புள்ளிகளை காட்டிலும் மிகவும் அதிகமாகும். 8வது நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கை பொருத்த வரையில், 71 புள்ளிகளுடன் 5ம் இடத்தையும், 9வது நீடித்த

மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கை பொருத்தவரையில் 71 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தையும் பெற்று, தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

**Blank Page**

# 1. வழிகாட்டி நிறுவனம்

## 1.1 அறிமுகம்

வழிகாட்டி நிறுவனம் (முன்பு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்), தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஈர்ப்பதற்காக 1992–ல் பதிவு பெற்ற இலாப நோக்கமற்ற சங்கமாகத் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல், பல்வேறு தொழில் திட்டங்கள் வாயிலாக ஐந்து இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கும் மேலான முதலீடுகளை பல்வேறு துறைகளில் ஈர்த்துள்ளது. தமிழ்நாட்டில் முதலீடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றிற்கான சூழல் அமைப்பினை மாற்றி அமைத்திடுவதற்கான முயற்சிகளை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

## 1.2 கொள்கை இலக்கு

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, தொழில் முனைவோர்க்குத் தேவைப்படும் தகவல்களை அளிப்பதும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்க தேவையான உதவிகளை வழங்குவதுமே, வழிகாட்டி நிறுவனம் துவக்கப்பட்டபோது அதன் நோக்கமாக இருந்தது.

தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம் 2018–ன் மூலமாக, பெரிய தொழில் நிறுவனங்களுக்கு, ஒற்றைச் சாளர முறையில் பல்வேறு துறை / நிறுவனம் சார்ந்த தொழில் அனுமதிகளை குறிப்பிட்ட கால வரம்பிற்குள் வழங்குவதற்கும், சிறப்பு ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் வழங்குவதற்கான முகமையாக செயல்படவும் வழிகாட்டி நிறுவனத்திற்கு சட்டபூர்வமான பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, மாநில அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு முகமையாக விளங்கும் வழிகாட்டி நிறுவனம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தெற்கு ஆசியாவிலேயே முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கும் பொருட்டு பின்வரும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது:–

- **முதலீடு ஊக்குவிப்பு** – உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் முதலீடுகளை ஊக்குவித்தல்; முதலீடு வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றை முதலீடுகளாக உருமாற்றி, அதன் மூலம் மாநிலத்தில் அதிக அளவிலான வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் குறிப்பிட்ட நாடுகளுக்கான தனி அமைவுகள் மூலம் முதலீட்டினை ஊக்குவித்தல்.

- **முதலீடுகள் மேற்கொள்வதற்கான ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்ட பின் வழங்கப்படும் சேவைகள் –** தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முனைந்திடும் முதலீட்டாளர்களுக்கு அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்குதல், ஒற்றைச் சாளர இணையதளம் மற்றும் தொழில் தோழன் (Biz Buddy) போன்ற இணைய தளங்களை நிர்வகித்தல், ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகள் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து வைத்தல்.
- **வணிகம் புரிதலை எளிதாக்குதல் –** பல்வேறு துறைகளில் சட்டம் மற்றும் சட்ட ரீதியிலான நடவடிக்கைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் வணிகம் புரிதலை மிகவும் எளிமையாக்குதல்.
- **வெளிப்புற ஈடுபாடுகள் –** சர்வதேச முதலீட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு, உலகளாவிய முதலீட்டுச் சந்தையில் தமிழ்நாட்டினை நிலைநிறுத்துதல், இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக முகவர்கள், இருதரப்பு மற்றும் பலதரப்பு முகமைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

- **கொள்கை மற்றும் ஆராய்ச்சி –** பண்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, தொழில் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் அதனை நடைமுறைப்படுத்த தேவையான பரிந்துரைகளை வழங்குதல்; மாநிலத்தின் பொருளாதாரம், தொழில் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றின் குறியீடுகளை கூர்ந்து கண்காணித்தல்; அரசின் சிந்தனைக் களமாக செயல்படுதல்.
- **மண்டலங்களைச் சென்றடைதல் –** மாவட்ட / மண்டல அளவில் தற்போதுள்ள முதலீட்டாளர்கள், தொழில் அமைப்புகள் மற்றும் முதலீடுகளை மேற்கொள்ளக் கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு மாநிலத்தில் மாவட்ட / வட்டார அளவில் தேவையான பல்வேறு உதவிகள் வழங்குதல், முதலீட்டாளர்களுடன் தொடர்புகள் மேற்கொண்டு, அவர்களின் குறைகளை "தொழில் தோழன்" இணையம் மூலம் தீர்த்துவைத்தல்.
- **ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு –** முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை அறியச் செய்திட, சமூக ஊடகங்கள், மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாக மாநிலத்தின் முதலீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்த தகவல்களை பரவச் செய்தல்.

## 1.3 முதலீட்டு மேம்பாடு

வழிகாட்டி நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தவிர்த்து, அனைத்து நிறுவனங்களின் முதலீடுகளை மாநிலத்திற்கு ஈர்த்திடுவதற்கான முகமையாகும். மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள், இரசாயனங்கள், மின்னணுவியல் மற்றும் வன்பொருள், கனரக பொறியியல், தோல் பொருட்கள், ஆடைகள், நிதிச் சேவைகள், தகவல் தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் போன்ற துறைகளிலும், வளர்ந்து வரும் துறைகளான வான்வெளி மற்றும் பாதுகாப்பு, வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள், ESDM, மருத்துவ சாதனங்கள், மின் வாகனங்கள், உயிரி தொழில் நுட்பம், மருந்துகள், பெட்ரோ கெமிக்கல்ஸ் மற்றும் சிறப்பு இரசாயனங்கள், காலணி, தொழில் நுட்ப ஜவுளி, தகவல் தரவு மையங்கள் மற்றும் நிதி நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கியமான துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பது வழிகாட்டி நிறுவனத்தின் முக்கியப் பணியாகும்.

குறிப்பிட்ட நாடுகள் மற்றும் துறைகளுக்கான பிரத்யேக அமைவுகள் மற்றும் முதலீட்டு மாநாடுகள் நடத்துதல் போன்ற நன்கு கட்டமைக்கப்பட்ட

அணுகுமுறைகள் மூலம், முதலீட்டு மேம்பாட்டு நடவடிக்கைகளை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

### 1.3.1 குறிப்பிட்ட நாடுகளுக்கான அமைவுகள்

கடந்த கால மற்றும் தற்போதைய முதலீட்டு வரத்துகளின் அடிப்படையில், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, சீனா, கொரிய குடியரசு, ஜப்பான், ஐக்கிய அரபு நாடுகள், இந்தோனேசியா, சிங்கப்பூர் மற்றும் தைவான் ஆகிய நாடுகள் முதலீடுகளை ஈர்ப்பதற்கு கவனம் செலுத்த வேண்டிய முக்கிய நாடுகளாக வழிகாட்டி நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. தைவான் நாட்டு முதலீட்டாளர்களுக்குத் தேவையான, முதலீட்டுச் சேவைகள் புரிந்திடுவதற்காகவே, ஒரு முழுநேர வழிகாட்டி நிறுவன ஊழியர் தைவானிலேயே பணியமர்த்தப்பட்டுள்ளார். வெவ்வேறு நாடுகளிலுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முதலீடுகளை ஈர்த்திடுவதற்கு ஏதுவாக, வழிகாட்டி நிறுவனத்தில் உள்ள மேலாளர்களுக்கு, நாடுவாரியாக பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவை தவிர, தலைநகரில் உள்ள பல்வேறு ஒன்றிய அரசு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுடன் இணைந்து செயல்

புரியும் வகையில், புதுதில்லியில் ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு அமைவு அமைக்கப்பட்டுள்ளது.

### 1.3.2 துறை / பிரிவு வாரியான முதலீட்டுக் குழுக்கள்

மோட்டார் வாகனங்கள், உணவு பதப்படுத்துதல், மின்னணுவியல் மற்றும் வன்பொருள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள் உற்பத்தி, கனரக பொறியியல், ஜவுளி மற்றும் ஆடை, இரசாயனங்கள், தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் மருந்துகள் போன்ற 12 மிக முக்கியமான துறைகளில், முதலீடுகளை ஈர்த்திடுவதற்காக வழிகாட்டி நிறுவனத்தில் 6 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்துறைகளில் முதலீட்டிற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றை முதலீடுகளாக மாற்றி, அதன் மூலம், மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை அதிக அளவில் உருவாக்குவது இக்குழுக்களின் பொறுப்பாகும்.

#### 1.3.2.1 நிதிநுட்பப் பிரிவு

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், 13.08.2021 அன்று 2021–2022–ஆம் அண்டிற்கான திருத்த வரவு செலவு திட்ட அறிக்கையை சட்ட பேரவையில்

சமர்ப்பித்து ஆற்றிய உரையின் போது அறிவித்ததற்கிணங்க நிதி நுட்பம், தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள், உலகளாவிய செயல்திறன் மையங்கள் மற்றும் தகவல் தரவு மையங்கள் ஆகிய துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், அத்திட்டங்களுக்குத் தேவையான ஆதரவுச் சேவைகள் அளிப்பதற்காகவும், வழிகாட்டி நிறுவனத்தில் பிரத்யேகப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் வெளிநாட்டு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகம், சிங்கப்பூர் ஃபின்டெக் அசோசியேஷன் போன்ற பல்வேறு நிறுவனங்களுடன் இந்த நிதி நுட்பப் பிரிவு இணைந்து, தமிழ்நாட்டில் நிதி நுட்பச் சூழல் அமைப்பை மேம்படுத்திடவும், வளர்ச்சி அடையச் செய்திடவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மாநிலத்தில் உள்ள நிதி நுட்ப நிறுவனங்கள், இன்குபேட்டர்கள் மற்றும் முதலீட்டு மூலதன நிதி வழங்கிடும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றி, தேவையான ஆதரவுச் சேவைகளையும், உதவிகளையும் அளித்திட இப்பிரிவு முனைப்புடன் பணியாற்றி வருகிறது.

### 1.3.2.2 ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு

தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021–ல் அறிவித்திருந்தபடியே, வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு பிரத்யேக ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பல்வேறு பங்குதாரர்களை கலந்தாலோசிக்கும் வகையிலான ஏற்பாடுகள், ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கு ஆதரவு சேவைகளை வழங்குதல், அவர்களின் ஏற்றுமதி தொடர்பான சந்தேகங்களுக்கு தெளிவு வழங்குதல், ஏற்றுமதி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல் போன்ற சேவைகளையும் இந்தப் பிரிவு வழங்கி வருகிறது.

### 1.3.3 முதலீட்டு மாநாடுகள்

வழிகாட்டி நிறுவனம், 2021–22–ஆம் ஆண்டில், 5 முதலீட்டு மாநாடுகள் உள்ளிட்ட பல முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. சீரான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பரவலான தொழில் வளர்ச்சி என்ற குறிக்கோளுடன் நடத்தப்பட்ட இம்மாநாடுகளில், ஏற்றுமதி மேம்பாடு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாடு ஆகிய கருப்பொருள்களும் அடங்கியிருந்தன. அது

மட்டுமின்றி, முதன் முறையாக சென்னைக்கு வெளியே மாநிலத்தின் முக்கிய நகரங்களான கோயம்புத்தூர், தூத்துக்குடி போன்ற இடங்களிலும் முதலீட்டு மாநாடுகள் நடத்தப்பட்டன.

துபாயில் நடைபெற்ற உலகக் கண்காட்சி நிகழ்வில் பங்கேற்பதற்காக ஐக்கிய அரபு நாடுகளுக்கு 2022 மார்ச் மாதம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் உயர்நிலைக் குழுவை தலைமை ஏற்று நடத்திச் சென்றார்கள். இந்த அரசுமுறை பயணத்தின் போது, அந்நாட்டின் பல்வேறு துறைகளின் அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக சங்கங்களின் நிர்வாகிகளுடன் இக்குழு சந்திப்புகளை மேற்கொண்டது.

துபாய் பயணத்தின் ஒரு அங்கமாக, உலக கண்காட்சியில், 2022 மார்ச் 25 முதல் 31 வரை நடைபெற்ற தமிழ்நாடு வாரத்தில், தமிழ்நாட்டிற்கான அரங்கினையும், அரங்கினில் உள்ள கண்காட்சியையும் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு முறைப் பயணமாக ஐக்கிய அரபு நாடுகளுக்குச் சென்ற போது, அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வின் கடைசி வாரத்தில், முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டுச்

சங்கங்கள் பெருமளவில் பங்கேற்றனர். இதன் மூலம், தொழில் முனைவோர் கவனத்தினை தமிழ்நாடு அரங்கு ஈர்த்தது.

ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதாரத் துறை அமைச்சர், வெளிநாட்டு வர்த்தகத் துறை அமைச்சர், வர்த்தக சங்க நிர்வாகிகள் ஆகியோரையும் சந்தித்து, தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார்கள்.

துபாயிலும், அபுதாபியிலும் வாழும் புலம் பெயர் தமிழ் சொந்தங்களைச் சந்தித்து, சொந்த மண்ணான தமிழ்நாட்டில் முதலீடு செய்திடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். முபாதலா, ADQ போன்ற நிறுவனங்களைச் சந்தித்து, வளர்ந்து வரும் துறைகளான எரிசக்தி, சரக்குப் போக்குவரத்துத் திட்டங்கள், உள்கட்டமைப்புத் திட்டங்கள், தரவு மையங்கள் மற்றும் மின்னணுவியல் போன்ற திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

இது போன்ற முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளின் மூலம், 2021-2022-ஆம் ஆண்டில் 68,405.54 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 2,05,802 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில், 130 முதலீட்டுத் திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள், தூத்துக்குடியில் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்ட இந்தியாவின் முதல் சர்வதேச அறைகலன் பூங்காவில் மேந்கொள்ளப்படவுள்ள 2,845 கோடி ரூபாய் முதலீடுகளும் அடங்கும். பூங்காவிற்கு அடிக்கல் நாட்டிய அன்றே, இம்முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஐக்கிய அரபு நாடுகளின் அரசு முறை பயணத்தின்போது, 6,100 கோடி ரூபாய் முதலீடுகள் என்ற அளவில் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 77 திட்டங்களை நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 6 திட்டங்கள் வணிக உற்பத்தியைத் துவக்கியுள்ளன.

## 1.4 முதலீடு செய்வதற்கான சூழலை எளிதாக்குதல் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்டபின் வழங்கப்படும் சேவைகள்

### 1.4.1 மின்னணுமயமாக்கப்பட்ட நிர்வாக முயற்சிகள்

நிர்வாகத் திறனை அதிகரிப்பதற்கு என, கடந்த வரவு செலவு திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட ஐந்து முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாக, தரவுகளை மையப்படுத்திய ஆளுமை (Data centric governance) முன்னிலைப்படுத்தப்பட்டது.

ஒற்றைச் சாளர இணையதளம், நிலத் தகவல் இணையதளம், தொழில் நண்பன் (Biz Buddy) மற்றும் மேம்படுத்தப்பட்ட இணையதளங்கள் போன்ற மின்னணுமயமாக்கப்பட்ட நிர்வாக முயற்சிகளை மேற்கொள்ளுவதில், தொழில் துறை முன்னணியில் உள்ளது.

#### 1.4.1.1 ஒற்றைச் சாளர இணையதளம்

24 துறைகளைச் சார்ந்த 100 சேவைகளை, மின்னணு வடிவில் அளித்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒற்றைச் சாளர இணைய தளம் 2.0–வைத் துவக்கி வைத்தார்கள். 2022ம் ஆண்டு இறுதிக்குள், கூடுதலாக மேலும் 100 சேவைகள் வழங்கிட, அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. அது மட்டுமின்றி,

விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தல், விண்ணப்பங்களின் தற்போதைய நிலையை கண்காணித்தல், விண்ணப்பிக்கப்பட்ட ஒப்புதல்களின் நிலையை அறிதல், வழங்கப்படும் சேவைகளின் விரிவான பட்டியல் மற்றும் முகப்பு பெட்டி (dash board) போன்ற சிறப்பு அம்சங்களை உள்ளடக்கிய ஒற்றைச் சாளர கைபேசி செயலியையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

2022 மார்ச் 31–ம் தேதி வரை, 540 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 361 விண்ணப்பங்களுக்கு முழுமையாக அனுமதிகள் அளிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த இணைய தளம் தொழிலகங்களிடையே மிகவும் பிரபலம் அடைந்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கிடையேயும் இந்த இணையதளம் பிரபலமடைந்துள்ளது. இந்த ஒற்றைச் சாளர இணையதளம் மூலம், 2022 மார்ச் 31ம் தேதி வரையில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் குறித்த 6,838 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில், 5,512 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

### 1.4.1.2 தமிழ்நாடு விரிவான நிலத் தகவல் இணையதளம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு நிலத் தகவல் இணையதளத்தை 7.3.2022 அன்று துவக்கி வைத்தார்கள். இந்த இணையதளம், தொழில் புரியத் தேவைப்படும் நிலங்களை விற்போரையும், அந்நிலங்களை வாங்குவோரையும் இணைத்திடும் சேவை வழங்கும் தளமாகும். தொழில் புரிவதற்கு ஏதுவான நிலம் வாங்கிட விரும்புவோர், அவர்களது தேவைகளின் அடிப்படையில், தொழில் நிலத் தொகுப்புகளை இந்த இணையதளத்தில் பார்வையிடுவது மட்டுமல்லாமல், நிலம் விற்போரிடமும் தொடர்புகள் மேற்கொள்ளலாம். இந்நிலத் தொகுப்புகளின் ஆவணங்கள் விவரம் அளிக்கப்பட்டிருப்பின் நம்பகத்தன்மையை சரிபார்த்திடவும், இந்த இணையத்தில் பதிவு செய்யப்பட்ட சட்ட ஆலோசகர்கள் மூலம் தேவையான சட்ட ஆலோசனைகளை பெற்றிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 1.4.1.3 வழிகாட்டி நிறுவனத்தின் புதிய இணையதளம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வழிகாட்டி நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட புதிய இணையதளத்தை (www.investingintamilnadu.com) துவக்கி

வைத்தார்கள். இந்த புதிய இணையதளம், ஒற்றைச் சாளர இணையதளத்துடன் இணைப்பு, தற்போது வளர்ந்து வரும் துறைகள் உட்பட அனைத்துத் துறைகள் குறித்த முழு விவரங்கள், தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதற்குத் தேவையான அனுமதிகள், நடைமுறைகள் மற்றும் ஒப்புதல்கள் போன்ற விவரங்களுடன் பயனாளிகளுக்கு உதவக்கூடிய பன்முகத் தன்மையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

### 1.4.1.4 தொழில் தோழன்

தொழில் தோழன் (Biz Buddy) என்பது முதலீட்டாளர்களுக்கும், மாநில அரசுக்கும் இடையிலான அரசு–வணிக சேவைகளை எளிதாக்கிடும் நோக்கத்தில் வடிவமைக்கப்பட்ட ஒரு தொழில் உதவி இணையதளம் ஆகும். தொழில்–தோழன் இணையதளத்தின் முக்கிய நோக்கங்கள் –

- முதலீட்டாளர்களுக்கு ஒரு நெறிப்படுத்தப்பட்ட தீர்வு முறையை உருவாக்கி, விரைவான தீர்வுகளை அளித்தல்
- திட்டங்கள் அமைத்திட்டபின் தேவைப்படும் சேவைகளைச் சிறப்புற அளிப்பதன் மூலம்

மாநிலத்தில் தொழில் முதலீட்டிற்கான சூழலை மேம்படுத்துதல்

2022 மார்ச் 31 வரையில், 244 உதவி அழைப்புகள் வரப்பெற்று, அவற்றில் 232 உதவி அழைப்புகளுக்கு தீர்வு அளிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தொழில் முனைவோரின் செயலாக்க நேரம் 85 சதவிகித அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது.

### 1.4.2 ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்களின் பிந்தைய பராமரிப்புச் சேவைகள்

ஒரு திட்டத்தினை நிறுவுவதற்கு முந்தைய காலகட்டம் முதல், நிறுவப்பட்டதற்கு பிந்தைய காலகட்டம் மற்றும் பிந்தைய பராமரிப்பு வரையிலான திட்ட காலம் முழுவதற்கும், முதலீட்டாளர்களுக்குத் தேவையான ஆதரவுச் சேவைகள் வழங்கிட, வழிகாட்டி நிறுவனத்தில் பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

#### 1.4.2.1 மண்டலத் தொடர்புக் குழு

திட்டங்களுக்கான ஆதரவுச் சேவைகள் மற்றும் பிந்தைய பராமரிப்புச் சேவைகள் அளித்திடும் பொருட்டு, மாநிலம் முழுவதற்குமான ஒரு மண்டலத் தொடர்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, முதலீட்டாளர்கள்,

தொழிலகங்கள் மற்றும் தொழில் கூட்டமைப்புளுக்கு, களத்தில் தேவைப்படும் ஆதரவுச் சேவைகள் அளிப்பதோடு மட்டுமின்றி, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற குழுக்களுடன் இணைந்து "தொழில் தோழன்" இணையதளம் மூலம் சிக்கல்களைத் தீர்த்து வைத்திடும் வகையில் செயலாற்றுகிறது.

### 1.4.2.2 திட்ட மேலாண்மை மற்றும் ஆதரவுச் சேவைகள் குழு

தற்போது உள்ள முதலீட்டாளர்கள் மற்றும் புதிய முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளக் கூடிய அனுமதி மற்றும் ஒப்புதல்கள் தொடர்பான எந்தவொரு சிக்கலையும் உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்காக வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு திட்ட மேலாண்மை மற்றும் ஆதரவுச் சேவைகள் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒற்றைச் சாளர இணையதளம் மற்றும் தொழில் தோழன் ஆகிய இணைய தளங்களையும் இக்குழு நிர்வகிக்கின்றது.

### 1.4.2.3 வணிகம் புரிதலை எளிதாக்குதல் தொடர்பான சீர்திருத்தங்கள்

வணிகச் சீர்திருத்தங்கள் மூலம், முதலீட்டுக் சூழலை மேம்படுத்தி, அதன் மூலம், மாநிலத்தின்

போட்டித்தன்மையை வெகுவாக அதிகரித்திட, தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. 300–க்கும் மேற்பட்ட வணிகம் புரிதலை எளிதாக்கும் நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டுள்ளது மட்டுமின்றி, 165 தேவையற்ற சட்டங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக, 200 இணக்கங்கள் கண்டறியப்பட்டு, அவை மதிப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 1.5 வெளிப்புற ஈடுபாட்டுக் குழு

சர்வதேச முதலீட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றி, தமிழ்நாட்டினை ஒரு உலகளாவிய முதலீட்டு மையமாக நிலைநிறுத்திடும் வகையில், வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு வெளிப்புற ஈடுபாட்டுக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. முதலீடுகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளின் தூதர்கள், முக்கிய தொழில் அமைப்புகள், தூதரகங்கள் ஆகியவற்றுடன் இக்குழு இணைந்து செயலாற்றி வருகின்றது. முக்கிய நாடுகளுக்கென்று, வட்ட மேசை அமைப்புகளை உருவாக்கி, அந்நாடுகளின் தொழில் நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் மற்றும் துணைத் தூதரகங்கள் ஆகியவற்றுடன் பல சந்திப்புகளை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

### 1.5.1 சர்வதேச ஒத்துழைப்புக்கான நிறுவன ஏற்பாடுகள்

தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்திடவும், உலக அளவில், தமிழ்நாட்டைப் பற்றிய கண்ணோட்டத்தினை மேம்படுத்துவதற்கென பொருத்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், திறன் வாய்ந்த பல்வேறு நிறுவனங்களுடன் வழிகாட்டி நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றி, அந்தந்த நாடுகளைச் சார்ந்த முதலீட்டாளர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வது போன்ற திறம் வாய்ந்த செயல்பாடுகள் மூலம், அந்த நாடுகளில் இருந்து முதலீடுகளை ஈர்க்க வழிகாட்டி நிறுவனம் வழிவகை செய்கின்றது.

- அமெரிக்க நாட்டுக்கான அமைவாக பணிபுரிந்திட, அமெரிக்காவில் உள்ள அமெரிக்கத் தமிழ் தொழில் முனைவோர் சங்கத்துடன் (ATEA) தமிழ்நாடு அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கோண்டுள்ளது. அது மட்டுமின்றி, புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு போன்ற துறைகளில், புத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக, அமெரிக்க தமிழ் தொழில் முனைவோர் சங்கத்துடன் (ATEA), வழிகாட்டி நிறுவனம், ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம்

மேற்கொண்டுள்ளது. டிஜிட்டல் ஆக்ஸிலரேட்டர் திட்டம் மூலம், புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள புத்தொழில்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ், இரண்டு தொகுப்புகளாக நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

- அமெரிக்கா – தமிழ்நாடு இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திடும் வகையில், US–India Strategic Partnership Forum உடன் வழிகாட்டி நிறுவனம், ஒரு நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ஜப்பான் நாட்டில் இருந்து முதலீடுகளைப் பெருமளவு ஈர்க்கும் வகையில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கனகாவா மற்றும் ஹிரோஷிமா மாகாணங்களுடன், பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரக நாடுகளுடனான வர்த்தக உறவுகளை வலுப்படுத்தவும், அந்நாடுகளில் இருந்து, முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்த்திடவும், வணிகத் தலைவர்கள் மன்றம் மற்றும் துபாயைச் சேர்ந்த ITEC உடன் நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- மேலும், ஜெர்மனி மற்றும் கொரிய குடியரசு ஆகிய நாடுகளுடனும், ஆலோசனை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.5.2 மேம்பட்ட உற்பத்தி மையத்தில் உலகப் பொருளாதார மன்றத்துடனான ஒத்துழைப்பு

2020 அக்டோபர் மாதம் முதலே, மாநிலத்தில், ஒரு மேம்பட்ட உற்பத்தி மையத்தை அமைப்பதற்கு, வழிகாட்டி நிறுவனம், உலகப் பொருளாதார மன்றத்துடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது. இந்த இணை செயல்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய முயற்சிகள் பின்வருமாறு:–

- 50–க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து, மேம்பட்ட உற்பத்தி தொடர்பாக கலந்தாலோசித்தல்.
- மேம்பட்ட உற்பத்தி மையத்தின் திட்டங்களை வடிவமைத்திடும் வகையில், மேம்பட்ட உற்பத்தி மையத்தின் இணையத் தலைவராக பணியாற்றுதல் மற்றும் அதன் வழிகாட்டும் குழுவின் முயற்சிகளுக்குத் தலைமை தாங்குதல்.
- உலகப் பொருளாதார மையத்தின் "நகரும் இந்தியா" தளத்தினைப் பயன்படுத்துவதன் மூலம்,

தமிழ்நாட்டின் மின்வாகனக் கொள்கையை ஆதரித்தல்

- Industry 4.0 தொடர்பாக, மாநிலத்தின் தயார் நிலையை அறியும் வகையில், ஆய்வுகள் மேற்கொள்ளுதல்

## 1.6 கொள்கைக் கட்டமைப்பு

தொழிலகங்களுக்கு வசதிகள் அளிப்பதற்கான முயற்சிகளாக, வணிகம் புரிதலை எளிதாக்கும் சட்டம் மற்றும் விதிகள் இயற்றப்பட்டு, தொடர்ந்து நிகழ்நிலைப்படுத்தப்பட்டு வருவதுடன், தமிழ்நாடு தொழில் கொள்கை 2021, மின்னணுவியல் மற்றும் மின்னணு வன்பொருள் கொள்கை 2020, மின் வாகனக் கொள்கை 2019 மற்றும் வான்வெளி மற்றும் பாதுகாப்புக் கொள்கை 2019 போன்ற கொள்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. முதலீடுகளுக்கான தொழில் திட்டக் கருத்துருக்களுக்குத் தேவையான வசதி சேவைகளை அளிப்பதுடன், வழிகாட்டி நிறுவனம் இந்த கொள்கைகளின் கீழ் ஊக்கத்தொகை வழங்க ஒப்புதல் அளிக்கக் கூடிய துறைகளுக்கிடையேயான குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் செயலாற்றி வருகிறது.

நிதி நுட்பச் சூழல் அமைப்பின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகவும், மாநிலத்தில் இருந்து ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்திலும், கடந்த 2021–2022–ஆம் நிதியாண்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு நிதி நுட்பக் கொள்கை 2021 மற்றும் தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை ஆகியவற்றை வெளியிட்டார்கள். தூத்துக்குடியில் உள்ள சர்வதேச அறைகலன் பூங்காவில் முதலீடுகளை ஊக்குவித்திடும் வகையில், தமிழ்நாடு அரசு, அறைகலன் பூங்காவில் முதலீடுகள் மேற்கொள்ளவிருக்கும் முதலீட்டாளர்களுக்கான ஒரு சிறப்புத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

## 1.7 2022–2023ஆம் நிதியாண்டிற்கான செயல் திட்டம்

பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மூலம் மாநிலத்தில் முதலீட்டுச் சூழலை மேம்படுத்தவும், புதிய முதலீடுகளை மாநிலத்திற்கு ஈர்த்திடுவதையும், வழிகாட்டி நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 1.7.1 முதலீடு ஊக்குவிப்பு

- பல்வேறு துறைகளில், உயர் மதிப்புக் கூட்டல் பிரிவுகளில் ஈடுபடும் நிறுவனங்களை அடையாளம் கண்டு, அவர்களை அணுகி, அந்நிறுவனங்கள், மாநிலத்தில் உற்பத்தி அலகுகளை நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளுதல். இதன் மூலம், இங்குள்ள தொழிலகங்களில் மதிப்புக் கூட்டல் மேற்கொள்ளப்படுவதோடு, தற்போதுள்ள பணியாளர்களின் திறன் மேம்படுத்தப்படும்.

- ஒன்றிய அரசின் உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகைத் திட்டத்திற்கு (Production Linked Incentive Scheme – PLI) விண்ணப்பித்துள்ள திட்டங்களையும், அத்திட்டத்தின் கீழ் பயன் பெற்ற நிறுவனங்களையும் அணுகி, தங்கள் உற்பத்தி நிறுவனங்களை தமிழ்நாட்டில் நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல். குறிப்பாக, செமி–கண்டக்டர், Display Fab, மின்னணுவியல், மின் வாகனங்கள், மோட்டார் வாகனங்கள், மேம்பட்ட வேதியியல் மின்கலன்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் போன்ற

துறைகளில் ஈடுபட்டுள்ள தொழிலகங்களை ஈர்க்க முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, நிதி நுட்பத் திட்டங்கள் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் மீது சிறப்பு கவனம் செலுத்தி, அத்தகைய திட்டங்களை மாநிலத்திற்கு ஈர்த்தல்.
- பல்வேறு துறைகளில், மிகப் பெரிய நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம், மூலப்பொருட்களின் கொள்முதல் மற்றும் உற்பத்திப் பொருட்களை விநியோகித்தல் இணைப்புகளை மேம்படுத்துதல்
- தற்போது மாநிலத்தில் உள்ள விநியோகச் சூழல் அமைப்பினை வலுப்படுத்துவன் மூலம், விநியோகம் செய்யும் நிறுவனங்களுக்கான செலவினங்களைக் குறைத்து, முதலீடுகளை ஈர்க்க ஒரு மிகச் சிறந்த மையமாக மாநிலத்தை உருவாக்குதல்
- உள்நாட்டில் நடைபெறும் முதலீட்டு மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் சர்வதேச சாலைக் காட்சிகளிலும் சந்தைப்படுத்துதல்

நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு, தமிழ்நாட்டின் முதலீட்டுத் திறன்களை காட்சிப்படுத்தி, மாநிலத்தில் முதலீட்டு வளர்ச்சியினை அதிகரிக்கச் செய்தல். கோவிட் 19 தொற்று காரணத்தினால் கடந்த இரு ஆண்டுகளாக அயல்நாட்டுப் பயணங்கள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலையை மாற்றி, சிறந்த முதலீட்டு மையமாக தமிழ்நாட்டினை உலகறியச் செய்தல்.

### 1.7.2 வணிகம் புரிதலை எளிதாக்குதல்

- கூடுதல் சேவைகள் மற்றும் ஒருங்கிணைப்புகளை இணையதளத்தில் சேர்ப்பதன் மூலம், முதலீட்டாளர்களுக்கு ஒற்றைச் சாளர இணையதளம் வழங்கும் பயன்களை அதிகரித்தல்

- முதலீட்டாளர்களுக்கு ஒழுங்குமுறை இணக்கச் சுமையை வெகுவாகக் குறைத்திடும் பொருட்டு, பழமையான சட்டங்கள், விதிகள் மற்றும் இணக்கங்களைத் திரும்பப் பெறுதல் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளச் செய்தல்.

- தொழிலகங்கள் உடனான ஆலோசனைகளின் அடிப்படையில், தமிழ்நாடு வணிகம் புரிதலை

எளிதாக்கும் சட்டம் மற்றும் விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.

- தமிழ்நாடு நிலத் தகவல் இணையதளத்தில் தகவல்களை அவ்வப்போது நிகழ்நிலைப்படுத்துல் மற்றும் கூடுதல் சேவைகளை வழங்குதல் மூலம், நிலம் வாங்குபவர்கள் மற்றும் நிலம் விற்பவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சேவைகளை மேம்படுத்துதல்.
- பலதரப்பட்ட துறைகளில் உள்ள தொழிலகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில், சிப்காட் மற்றும் பிற தனியார் நில மேம்பாட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றி, முறையான சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் தொழில் உள்கட்டமைப்புக்களுடன், துறை சார்ந்த தொழில் பூங்காக்களை உருவாக்குதல்.
- திட்டங்களை உடனடியாக துவங்கும் வகையில் ஆயத்த தொழிற்கூடங்கள் (Plug & Play) அமைத்துத் தரும் தனியார் தொழில் துறை உட்கட்டமைப்பு மேம்பாட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுதல்.

- உள்ளூர் பணியாளர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில் கூட்டமைப்புக்களுடன் இணைந்து, திறன் மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.

### 1.7.3 விரைவில் வெளியிடப்பட உள்ள கொள்கைகள்

மாநிலத்தில் பல்வேறு துறைகளின் வளர்ச்சியினை விரைவுபடுத்திடும் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக உயிர் அறிவியல் வளர்ச்சிக் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தோல் மற்றும் காலணிக் கொள்கை மற்றும் மின் வாகனக் கொள்கைக்கான மேம்பாடுகள் போன்றவற்றை வழிகாட்டி நிறுவனம் வடிவமைத்து வருகின்றது. இந்தக் கொள்கைகள் வடிவமைக்கப்பட்டு, அது குறித்த ஆலோசனைகளும், விவாதங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **23.11.2021** அன்று நடைபெற்ற முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு மாநாட்டில் “தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை **2021**”–ஐ வெளியிட்டார்கள்

Blank Page




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் **23.11.2021** அன்று நடைபெற்ற
" முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு" மாநாட்டில் தொழில் நிறுவனங்களுடன்
புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன

Blank Page



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **25.03.2022** அன்று துபாய் பன்னாட்டு நிதி மையத்தில், ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைச்சர்களை சந்தித்து தமிழகத்தில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்கள்.

Blank Page



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **25.03.2022** அன்று
துபாய் உலக கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கினை திறந்து வைத்தார்கள்

**Blank Page**




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் **28.03.2022** அன்று அபுதாபியில் லூலூ நிறுவனத்தின் ரூ.**3500** கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

**Blank Page**




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **28.03.2022** அன்று அபுதாபியில் முபாதாலா முதலீட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் (உட்கட்டமைப்பு) திரு.சையத்அரார் அவர்களை தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து சந்தித்து பேசினார்கள்

Blank Page



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **28.03.2022** அன்று அபுதாபியில் ADQ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி, திரு.முகம்மது அல்சுவைதி அவர்களை, தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வது தொடர்பாக சந்தித்து பேசினார்கள்

**Blank Page**

## 2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுதல், மேம்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல் ஆகியவற்றில் தமிழ்நாடு அரசின் ஒரு முன்னோடி நிறுவனமாக விளங்கி வருகிறது. 1971–ம் ஆண்டில் துவங்கப்பட்ட சிப்காட் நிறுவனமானது கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதோடு, பாதுகாப்பான சுற்றுச்சூழலுடன் கூடிய பசுமைத் தொழில் பூங்காக்களை உருவாக்கி வெற்றிகரமாக இயங்கி வருகிறது. உலகளவில் முதல் 500 பெரிய நிறுவனங்களில், 80 தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ளன. சிப்காட் நிறுவனம் 35,034 ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைத்துள்ள தொழிற்பூங்காக்கள் மூலம் 2,911 தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், 1.40 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டினை ஈர்ப்பதற்கும், 7.09 லட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்குவதற்கும் கருவியாக இருக்கின்றது.

தமிழ்நாட்டின் தொழில் மேம்பாட்டில் நீண்ட காலமாக முக்கிய பங்காற்றி வரும் சிப்காட் நிறுவனத்தின் மூன்று முதன்மையான குறிக்கோள்களாவன:–

(i) உலகத்தரத்திலான தொழில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

(ii) திறன் வாய்ந்த தொழிற் பூங்கா ஆளுமை மற்றும் மேலாண்மை அமைப்பு முறை உருவாக்குதல்

(iii) நீடித்த நிலைப்பெறத்தக்க தொழில் சூழல் அமைப்பை மேம்படுத்துதல்



சிப்காட் நிறுவனம் தனது தொழில் பூங்காக்களில், சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு, நீர் வழங்குதல், நிர்வாக அலுவலகம் மற்றும் பொதுவான வசதி, திடக்கழிவு மேலாண்மை, பசுமைச் சூழல் உருவாக்கம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை அளித்து வருகின்றது. மேலும், சிப்காட் நிறுவனமானது அதன் தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான வீட்டுவசதிகள், புத்தாக்க மையங்கள், வணிக வசதி மையங்கள், ஆயத்த தொழிற்கூட வசதிகள் போன்ற சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழக அரசின் தொலைநோக்கு திட்டங்களுக்கு ஏற்ற வகையில், சிப்காட் நிறுவனம் புதிதாக உருவாக்கப்படும் தொழிற்பூங்காக்களில் நிலைபெறத்தக்க மற்றும் விரிவான தொழில் சூழல் அமைப்பை ஏற்படுத்த முனைந்து வருகிறது. துறைவாரியான தொழில் நிறுவனங்களின் தேவை அடிப்படையிலும், குறிப்பிட்ட தொழிற்சாலைகள் ரீதியான மண்டலங்கள் அடிப்படையிலும் தொழில் பூங்காக்களை உருவாக்க தேவையான விரிவான திட்ட அறிக்கையினை தயாரிப்பதற்கு, அனுபவமிக்க தொழில்

வல்லுநர்கள் மற்றும் மேலாண்மை ஆலோசகர்களை சிப்காட் நிறுவனம் பணியமர்த்தியுள்ளது.

சிப்காட் நிறுவனம், தனது வெளிப்படையான நில ஒதுக்கீட்டுக் கொள்கைகளின் மூலமாகவும், தடையற்ற இணையவழிச் சேவைகள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்யும் செயல்பாடுகளின் மூலமாகவும், தொழில் நிறுவனங்களுக்கு தொழில் செய்ய ஏதுவான வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. இதன் மூலம், சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் தொழில் செய்வதற்கு உகந்த சூழலை மேம்படுத்துவதுடன், தொழில் தொடங்குவதற்கு ஏற்ற மாநிலமாக தமிழ்நாட்டை முதலீட்டாளர்கள் கருதுவதற்கு முக்கிய காரணமாகவும் அமைந்துள்ளது.

தொழில் பூங்காக்களை திறமையாக நிர்வகிக்கும் முறைகளின் மூலம் சிப்காட் நிறுவனம், முதலீட்டாளர்களுக்கு ஏற்ற வகையில் நிலத்தை திரும்ப ஒப்படைத்தல் மற்றும் நில உள்குத்தகை மூலமாக தனது தொழில் பூங்காக்களில் உள்ள தொழில் மனைகளின் திறன்மிகு பயன்பாட்டினை மேற்கொண்டு வருகிறது. மேலும், தனியாருடன் கலந்து பேசி நிலம் கையகப்படுத்தும் கொள்கை மூலம், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, புதிய நிலங்களை


திறம்பட பெற்று வருகிறது. மேலும், பங்கேற்பு கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மூலம் தொழில் பூங்காக்களில் இணக்கமான கட்டமைப்பு வசதிகளை சிப்காட் நிறுவனம் திறம்பட உருவாக்கி வருகிறது.

நிலையான வளர்ச்சி குறிக்கோள்களுடன், உலகத்தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் மாநிலத்தில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மற்றும் நிலைக்கத்தக்க தொழில்மயமாக்கலில் சிப்காட் நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், சிப்காட் நிறுவனத்தால் நீர் மேலாண்மை மற்றும் கழிவுநீர் மறுசுழற்சி, நீர்நிலைகளை புத்தாக்கம் செய்தல், தொழிற்பூங்காக்களில் பெருமளவு பசுமைச்சூழலை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு வகையான முன்னெடுப்புகளின் மூலம் சிப்காட் தனது தொழிற் பூங்காக்களை பசுமையாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், மாசற்ற பாதுகாக்கப்பட்ட பகுதியாகவும் மாற்றியமைத்து வருகிறது.

## 2.1 தற்போதுள்ள தொழிற்பூங்காக்களின் நிலை மற்றும் விரிவாக்கத் திட்டங்கள்

### 2.1.1 தற்போதுள்ள சிப்காட் தொழிற்பூங்காக்கள்

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் சிப்காட் நிறுவனம், தமிழகமெங்கும், 15 மாவட்டங்களில், சுமார் 35,034 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்து, அடிப்படை வசதிகள் மற்றும் துணை உள்கட்டமைப்பு வசதிகளுடன் 6 சிறப்பு பொருளாதார மண்டலங்களை உள்ளடக்கிய 24 தொழில் பூங்காக்களை உருவாக்கியதன் மூலம், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.



| வரிசை எண் | தொழிற் பூங்கா | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| **வடதிசைத் தொகுப்பு** | | |
| 1 | இராணிப்பேட்டை (சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) | 1,421 |
| 2 | கும்மிடிப்பூண்டி | 1,478 |
| 3 | கடலூர் | 2,625 |
| 4 | இருங்காட்டுக்கோட்டை | 1,844 |
| 5 | பிள்ளைப்பாக்கம் | 1,131 |
| 6 | திருப்பெரும்புதூர் (சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) | 2,452 |
| 7 | சிறுசேரி | 783 |
| 8 | ஒரகடம் (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 3,074 |
| 9 | செய்யாறு | 2,954 |
| 10 | மப்பேடு | 122 |
| 11 | தேர்வாய்க்கண்டிகை | 1,127 |
| 12அ | வல்லம் – வடகால் | 1,456 |
| 12ஆ | வானூர்திப்பூங்கா , வல்லம் – வடகால் | 234 |
| 13 | திண்டிவனம் | 694 |
| 14 | மாநல்லூர் | 692 |
| **மேற்கு திசைத்தொகுப்பு** | | |
| 15 | பெருந்துறை (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 2,623 |
| **வடமேற்கு திசைத் தொகுப்பு** | | |
| 16 | ஓசூர் | 2,093 |
| 17 | பர்கூர் (சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 1,379 |
| 18 | குருபரப்பள்ளி | 157 |
| **தென்திசைத் தொகுப்பு** | | |
| 19 | புதுக்கோட்டை | 421 |
| 20 | மானாமதுரை | 492 |
| 21 | தூத்துக்குடி | 2,326 |
| 22 | நிலக்கோட்டை | 387 |
| 23 | கங்கைகொண்டான் (சிறப்பு பொருளாதார மண்டலம் உட்பட) | 1,992 |
| 24 | மணப்பாறை | 1,077 |
| | **மொத்தம்** | **35,034** |

மேற்கூறிய தொழிற்பூங்காக்களில் ஸ்ரீபெரும்புதூர் (281.85 ஏக்கர்), ஒரகடம் (347.66 ஏக்கர்), பெருந்துறை (172.34 ஏக்கர்), இராணிப்பேட்டை (133.76 ஏக்கர்), கங்கைகொண்டான் (255 ஏக்கர்) மற்றும் பர்கூர் (235.98 ஏக்கர்) ஆகிய இடங்களில் 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு உள்ளது.

மேலும், சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட தயாரிப்பு ரீதியிலான தொழிற்பூங்காக்கள் (Product Specific Industrial Parks): (i) இருங்காட்டுக்கோட்டை ஆடைப்பூங்கா (123.85 ஏக்கர்) மற்றும் காலணி உபகரணங்கள் உற்பத்தி பூங்கா (52.63 ஏக்கர்), (ii) ஒரகடம் – ரெனால்ட் & நிஸ்ஸான் நிறுவனத்திற்கு உபகரணங்கள் உற்பத்தி செய்வோர் பூங்கா (168.73 ஏக்கர்) (Renault & Nissan Vendors Park) (iii) பிள்ளைப்பாக்கம் – ரெனால்ட் & நிஸ்ஸான் நிறுவனத்திற்கு உபகரணங்கள் விற்பனையாளர் பூங்கா (Renault & Nissan Suppliers Park) (80.00 ஏக்கர்) மற்றும் (iv) வல்லம்–வடகால் – இந்தியா யமஹா நிறுவனத்திற்கு உபகரணங்கள் விற்பனையாளர் பூங்கா (67.25 ஏக்கர்).

மேலும், சிப்காட் தொழிற்பூங்காக்களில் தனியார் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்:

ஸ்ரீபெரும்புதூரில் ஃபிளக்ஸ்ட்ரானிக்ஸ் டெக்னாலஜீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், நோக்கியா இந்தியா பிரைவேட் லிமிடெட், செய்யாறு, பர்கூர் மற்றும் திண்டிவனத்தில் செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல மேம்பாட்டாளர் நிறுவனம் (Cheyyar SEZ Developers) மற்றும் சிறுசேரியில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் லிமிடெட் நிறுவனம், சின்டல் இன்டர்னேஷனல் பிரைவேட் லிமிடெட், காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஸ்டீரியா (இந்தியா) லிமிடெட் மற்றும் ஹெக்சாவேர் டெக்னாலஜிஸ் லிமிடெட் ஆகியன.

சிப்காட் நிறுவனத்தின் சீரிய அணுகுமுறையினாலும், நடைமுறைக்கு உகந்த கொள்கைகளை கடைபிடிப்பதன் மூலமாகவும், பல பன்னாட்டு மற்றும் உள்நாட்டின் பெரிய தொழில் நிறுவனங்களை உள்ளடக்கிய, விரிவான குறிப்பிட்ட துறைவாரியான சூழல் அமைப்பினை உருவாக்கியுள்ளது.

மேலும், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வாகனங்கள் உற்பத்தி தொகுப்பில் (Automotive Clusters) திருவாளர்கள் ஹுண்டாய் மோட்டார்ஸ் லிமிடெட், இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட், எய்ச்சர் மோட்டார்ஸ் லிமிடெட், ரெனால்ட் நிஸ்ஸான் ஆட்டோமோடிவ் இந்தியா பிரைவேட் லிமிடெட், டைம்லர் இந்தியா கமர்ஷியல் வெகிக்கிள்ஸ் பிரைவேட் லிமிடெட், ராயல் என்ஃபீல்ட், மோபிஸ் இந்தியா லிமிடெட், மான்டோ ஹெல்லா எலக்ட்ரானிக்ஸ் ஆட்டோமோடிவ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஸ்விங் ஸ்டெட்டர் இந்தியா லிமிடெட் மற்றும் பல நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் ஸ்ரீபெரும்புதூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மின்னணு உற்பத்தி தொகுப்பில் (Electronics Clusters) திருவாளர்கள் ஃபாக்ஸ்க்கான் இந்தியா டெவலப்பர் பிரைவேட் லிமிடெட், ஃபிளக்ஸ்டிரானிக்ஸ் டெக்னாலஜீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பி. லிமிடெட், டெல் இந்தியா பிரைவேட் லிமிடெட், சால்காம்ப் மேனுபேக்சரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், சன்மினா எஸ்சிஐ டெக்னாலஜீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்,

நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க் மற்றும் பல நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பொது பொறியியல் தொகுப்பில் (General Engineering Clusters) திருவாளர்கள் அசோக் லேலண்ட் லிமிடெட், டைட்டான் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டெரெக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், வெக் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், பிரஸ்டிஜ் ஆகிய நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பெருந்துறையில் உள்ள ஜவுளிக் தொகுப்பில் (Textile Clusters) திருவாளர்கள் ஜே.ஜே. மில்ஸ் லிமிடெட், கே.பி.ஆர். மில்ஸ், பிரிமியர் பாலிவீவ் பிரைவேட் லிமிடெட், ஸ்ரீ கண்ணபிரான் மில்ஸ் லிமிடெட் மற்றும் அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் போன்ற முக்கிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடலூரில் உள்ள இரசாயனப் பொருட்கள் தொகுப்பில் (Chemical clusters) திருவாளர்கள் கெம்பிளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட், டான்ஃபாக், டாக்ரோஸ் கெமிக்கல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் டாடா கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆகிய முக்கிய நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இராணிப்பேட்டையில்

குறு, சிறு மற்றம் நடுத்தர தொழில் நிறுவனங்களை (MSME) உள்ளடக்கிய தோல் தொழில் தொகுப்பும் (Leather Clusters) உருவாக்கப்படுள்ளது.

சிறுசேரியில் அமைந்துள்ள வெற்றிகரமான தகவல் தொழில் நுட்பத் தொகுப்பில் (IT Cluster) திருவாளர்கள் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் லிமிடெட், சின்டல் இன்டர்னேஷனல் பிரைவேட் லிமிடெட், காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் இந்திய பிரைவேட் லிமிடெட், ஹெக்ஸ்சாவேர் டெக்னாலஜிஸ் லிமிடெட், ஐகேட் குளோபல் சொலுஷன் பிரைவேட் லிமிடெட், ஜியோ இன்ஃபோகாம் ஆகிய முக்கிய நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

தொழிற்பூங்காக்களில் இயங்கி வரும் பிற பெரிய தொழில் நிறுவனங்கள்: திருவாளர்கள் செயின்ட் கோபைன் இந்தியா பிரைவேட் லிமிடெட், அப்பலோ டயர்ஸ் லிமிடெட், அல்லிசன் டிரான்ஸ்மிஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட், டெல்பி ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட், கெபாரோ இன்ஜினீயரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், மிச்சலின் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஏ.டி.சி டயர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஆம்வே இந்தியா எண்டர்பிரைஸஸ் பிரைவேட் லிமிடெட், மகிந்திரா அண்டு மகிந்திரா

லிமிடெட், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், மைலான் லாபரட்டீஸ், டான்ஃபோஸ் இண்டஸ்ட்ரிஸ் பிரைவேட் லிமிடெட், ஓலா எலக்ட்ரிக் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், ஆட்டோலிவ் இன்ஃபிலேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், கிராஸிம் இண்டஸ்ட்ரிஸ் லிமிடெட், பிரிட்டானியா இண்டஸ்ட்ரிஸ் லிமிடெட், அஞ்சான் டிரக் பிரைவேட் லிமிடெட், சுந்தரம் கிளேட்டன் லிமிடெட், லூகாஸ் டி.வி.எஸ் லிமிடெட், பிலிப்ஸ் கார்பன் பிளாக் லிமிடெட் (PCBL) மற்றும் பல நிறுவனங்கள் தமிழகத்திற்கு நீடித்த நிலையான முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குள், வரவிருக்கும் மற்றும் புதிதாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள தொழிற்பூங்காக்களுக்கான நிலம் உட்பட 45,000 ஏக்கர் அளவிற்கான நிலவங்கியினை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. புதிய தொழில்முனைவோர்களுக்கு தேவையான நிலத்தினை தாமதமின்றி ஒதுக்கீடு செய்வதற்கு போதுமான அளவு நிலங்களை கையகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இது தமிழ்நாட்டின் ஒரு

தனித்த அம்சமாகும். இந்நிலவங்கி, தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்படும்.

## 2.2 முன்னேற்றத்தில் மற்றும் புதிதாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள தொழிற்பூங்காக்கள்

### 2.2.1 முன்னேற்றத்தில் உள்ள தொழிற்பூங்காக்கள்

சிப்காட் நிறுவனம் கீழ்காணும் 9 தொழிற்பூங்காக்களை, 6,625 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கி வருகிறது. இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி இறுதிகட்டத்தில் உள்ளது.

| வ. எண் | தொழிற்பூங்கா | மாவட்டம் | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| **வடதிசை தொகுப்பு** | | | |
| 1 | மாநல்லூர் நிலை II | திருவள்ளூர் | 1,336 |
| 2 | நெமிலி | காஞ்சிபுரம் | 229 |
| 3 | மாம்பாக்கம் | காஞ்சிபுரம் | 185 |
| 4 | திருமுடிவாக்கம் | காஞ்சிபுரம் | 82 |
| **தென்திசை தொகுப்பு** | | | |
| 5 | குமாரலிங்கபுரம் நிலை–I | விருதுநகர் | 1,500 |
| 6 | மணக்குடி | இராமநாதபுரம் | 225 |
| 7 | சக்கரக்கோட்டை | இராமநாதபுரம் | 313 |
| **வடமேற்கு திசை தொகுப்பு** | | | |
| 8 | அதகபாடி | தருமபுரி | 1,733 |
| 9 | சூளகிரி நிலை–I | கிருஷ்ணகிரி | 1,022 |
| | **மொத்தம்** | | 6,625 |

### 2.2.2 புதிதாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள தொழிற்பூங்காக்கள்

மேலும், சிப்காட் நிறுவனம் கீழ்காணும் 29 புதிய தொழிற்பூங்காக்களை சுமார் 29,607 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்க திட்டமிடப்பட்டு அதற்கான நிலத் தெரிவு செய்யும் பூர்வாங்க பணி / நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | தொழிற்பூங்கா | மாவட்டம் | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| வடதிசை தொகுப்பு | | | |
| 1 | மாநல்லூர் நிலை–III | திருவள்ளூர் | 2,433 |
| 2 | செங்காத்தகுளம் | திருவள்ளூர் | 576 |
| 3 | காட்டுப்பள்ளி | திருவள்ளூர் | 771 |
| 4 | மேல்மா | திருவண்ணாமலை | 3,174 |
| 5 | பனப்பாக்கம் | இராணிப்பேட்டை | 1,208 |
| 6 | வல்லபாக்கம் | காஞ்சிபுரம் | 118 |
| 7 | மதுரமங்கலம் | காஞ்சிபுரம் | 881 |
| 8 | கோடூர் | செங்கல்பட்டு | 249 |
| 9 | சூரை | செங்கல்பட்டு | 132 |
| மேற்கு திசை தொகுப்பு | | | |
| 10 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 650 |
| 11 | கரூர் | கரூர் | 200 |
| 12 | நாமக்கல் | நாமக்கல் | 717 |

| வ. எண் | தொழிற்பூங்கா | மாவட்டம் | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| வடமேற்கு திசை தொகுப்பு | | | |
| 13 | சூளகிரி நிலை – II | கிருஷ்ணகிரி | 1,902 |
| 14 | குருபரப்பள்ளி நிலை – II & நிலை – III | கிருஷ்ணகிரி | 105 |
| 15 | நாகமங்கலம் | கிருஷ்ணகிரி | 3,034 |
| 16 | அதகபாடி விரிவாக்கம் | தருமபுரி | 465 |
| 17 | திருப்பத்தூர் | திருப்பத்தூர் | 1,581 |
| தென்திசை தொகுப்பு | | | |
| 18 | இலுப்பைக்குடி | சிவகங்கை | 794 |
| 19 | பூமலைக்குண்டு | தேனி | 468 |
| 20 | சிலாநத்தம் | தூத்துக்குடி | 407 |
| 21 | அல்லிக்குளம் | தூத்துக்குடி | 2,234 |
| 22 | வேலாயுதபுரம் | தூத்துக்குடி | 355 |
| 23 | வெம்பூர் | தூத்துக்குடி | 2,768 |
| 24 | வைப்பார் | தூத்துக்குடி | 1,020 |
| 25 | கங்கைக்கொண்டான் நிலை – II | திருநெல்வேலி | 1,665 |
| 26 | குமாரலிங்கபுரம் நிலை– II | விருதுநகர் | 792 |
| 27 | சின்னக்கோவிலன்குளம் | தென்காசி | 90 |
| 28 | வண்டுவான்சேரி | நாகப்பட்டினம் | 250 |
| 29 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 568 |
| | மொத்தம் | | 29,607 |

நில வங்கியினை துரிதமாக உருவாக்க ஏதுவாக, தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான

நிலஎடுப்புச் சட்டம், 1997–ன் நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது. மேலும், நேரடி பேச்சுவார்த்தை மூலம் நிலம் கையகப்படுத்துவது மற்றும் நில தொகுப்புகள் போன்ற இதர மாற்று வகை நில எடுப்பு முறைகளும் கையாளப்படும்.

**2.3 நில ஒதுக்கீட்டில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களுக்கான ஊக்கத்தொகை**

தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கை 2021–ன்படி சிப்காட் நிறுவனம், "அ" மற்றும் "ஆ" பிரிவு மாவட்டங்களிலுள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீட்டு மதிப்பில் 10 சதவீதம் மீளப்பெறும் (Back–ended) ஊக்கத்தொகையாகவும், "இ" பிரிவு மாவட்டங்களில் (தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்கள்) தொழில் நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீட்டில் 50 சதவீதம் குறைத்து முன்னரே வழங்கப்படும் (front–ended) ஊக்கத்தொகையாகவும் வழங்கி வருகிறது.

**2.4. சிறப்பு முன்னெடுப்புகள்**

**2.4.1 சர்வதேச அறைகலன் பூங்கா**

இந்தியாவிலேயே முதன்முறையாக சிப்காட் நிறுவனத்தால் 1,152 ஏக்கர் பரப்பளவில், 1,000 கோடி

ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பெரிய அளவிலான சர்வதேச அறைகலன் பூங்கா ஒன்று தூத்துக்குடி சிப்காட் தொழிற்பூங்காவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பூங்காவானது ஏற்றுமதி சம்மந்தப்பட்ட அறைகலன் உற்பத்தி நிறுவனங்களை உள்ளடக்கியதாகவும், சுமார் 4,500 கோடி ரூபாய் அளவிலான பன்னாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும், 3.50 லட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலும் அமையப்பெறும். தற்சமயம், இப்பூங்காவிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் பன்னாட்டு முதலீட்டினை ஈர்க்கும் பணி நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 7.3.2022 அன்று சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அன்றைய தினமே சர்வதேச மற்றும் தேசிய முதலீட்டாளர்களுடன் சுமார் 2,800 கோடி ரூபாய் முதலீட்டிற்கான 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

### 2.4.2 மருத்துவ உபகரண தொழிற்பூங்கா

மருத்துவ உபகரணங்கள் மற்றும் அது சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப நிறுவனங்கள் துறை, வளர்ந்து வரும் துறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் துறை சார்ந்த நிறுவனங்களுக்குத் தேவையான

விரிவான சூழல் அமைப்பினை உருவாக்குவதற்காக, காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் மருத்துவ உபகரண தொழிற்பூங்கா ஒன்றினை 350 ஏக்கர் பரப்பளவில் சுமார் 380 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஒன்றிய அரசின் மருத்துவ உபகரண தொழிற்பூங்கா ஊக்குவிப்பு மானிய திட்டத்தின் கீழ் 100 கோடி ரூபாய் அளவிலான மானியத்துடன் சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது.

### 2.4.3 மாபெரும் உணவுப் பூங்கா

தமிழ்நாட்டில் உணவுசார் உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் மணப்பாறை, திண் வனம் மற்றும் தேனி ஆகிய மூன்று இடங்களில் ஒவ்வொன்றுக்கும் சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் உணவுப் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. இந்த உணவுப் பூங்காக்கள், ஒன்றிய அரசின் உணவு தயாரித்தல் மற்றும் பதப்படுத்தும் துறையால் சிறப்பு உணவுப் பூங்காக்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இப்பூங்காக்களுக்கு நிதி உதவி பெறுவதற்காக விவசாய மற்றும் கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கிக்கு (NABARD), விரிவான திட்ட அறிக்கையை சிப்காட் நிறுவனம் சமர்ப்பித்துள்ளது.

### 2.4.4 மின்வாகனப் பூங்கா மற்றும் வருங்கால நகர்திறன் பூங்கா

மின் வாகனத் துறையில் புதிய முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில், மாநல்லூர் சிப்காட் தொழிற்பூங்காவில் 300 ஏக்கர் பரப்பளவில், 167.30 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மின் வாகனப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் அமைத்து வருகிறது. இப்பூங்காவிற்கு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நீடித்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நவீன போக்குவரத்து தீர்வுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், வருங்கால நகர்திறன் பூங்கா ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி சிப்காட் தொழிற்பூங்காவில் 300 ஏக்கர் பரப்பளவில், 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படவுள்ளது. தொழில் நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 2.4.5 மின்னணு உற்பத்தித் தொகுப்பு

பிள்ளைப்பாக்கத்தில் 230 ஏக்கர் மற்றும் மாநல்லூரில் 500 ஏக்கர் பரப்பளவு என இரண்டு மின்னணு உற்பத்தித் தொகுப்புகளை ஏற்படுத்த

சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது. ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை (MEITY)யின் EMC 2.0 திட்டத்தின் கீழ், நிதிஉதவி பெறும் வகையில் மேற்கூறிய மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் அமையும். ஒருங்கிணைந்த மின்னணு உற்பத்தி நிறுவனங்களை உள்ளடக்கியதாக மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் உருவாக்கப்படும், அதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கியதாகவும் அமையும். தற்சமயம் EMC 2.0 திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் மானியம் பெறுவதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 2.4.6 மிகப்பெரும் காலணி மற்றும் துணைப் பொருட்கள் தொகுப்பு

சிப்காட் நிறுவனம், புதிதாக அமையவுள்ள பணப்பாக்கம் தொழிற்பூங்காவில் 250 ஏக்கர் பரப்பளவில், மிகப்பெரும் காலணி மற்றும் துணைப்பொருட்கள் தொகுப்பினை 236 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒன்றிய அரசின் வர்த்தக மற்றும் வளர்ச்சித் (DPIIT) துறையின் பகுதி நிதி உதவியுடன் அமைக்கவுள்ளது. இப்பூங்காவில் ஆயத்த தொழிற்கூடங்கள், கிடங்குகள், வர்த்தக மையம்,

பொருள் வடிவமைப்பு மையம், பரிசோதனைக்கூடம் ஆகியவை அமையப்பெறும்.

### 2.4.7 ஆயத்த தொழிற்கூடங்கள் /தயார் நிலையிலுள்ள தொழிற்கூடங்கள்

வல்லம்–வடகால், பெருந்துறை மற்றும் ஒரகடம் ஆகிய மூன்று சிப்காட் தொழிற்பூங்காக்களில் முறையே 1,50,000 சதுர அடி, 50,000 சதுர அடி மற்றும் 1,00,000 சதுர அடி கொண்ட கட்டுமானத்தில், ஆயத்த மற்றும் தயார் நிலையிலுள்ள தொழிற்கூடங்கள் / சேமிப்பு கிடங்கு வசதிகள், ஒன்றிய அரசின் வணிகவியல் மற்றும் தொழில் துறையின் ஏற்றுமதிக்கான வர்த்தக உள்கட்டமைப்புத் திட்டத்தின் (TIES) கீழ், அங்கீகரிக்கப்பட்ட பகுதி நிதி உதவியான 34.45 கோடி ரூபாய் மானியத்துடன், மொத்த திட்ட மதிப்பீடான 85.20 கோடி ரூபாயில் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான வடிவமைப்பு மற்றும் திட்ட மதிப்பீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், "குறித்த நேரத்தில் உற்பத்தி" என்பதை ஆதரிக்கும் விதமாக சிப்காட் நிறுவனத்தால் முன்மொழியப்பட்ட தயார் நிலையிலுள்ள தொழிற்கூடங்கள் (RBF), 5.00 ஏக்கர் பரப்பளவிலான நிலத்தில் சுமார் 1.50 லட்சம் சதுர அடி கொண்ட

கட்டுமானத்தில் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் சிப்காட் நெமிலி தொழிற்பூங்காவில் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 2.4.8 ஏற்றுமதிக்கான வர்த்தக வசதி மையம்

சிப்காட், சிறுசேரி தொழிற்பூங்காவில் 34.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2.16 ஏக்கர் நிலத்தில், 85,000 சதுர அடி கொண்ட கட்டுமானத்தில், ஏற்றுமதிக்கான வர்த்தக வசதி மையம் அமைக்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் ஏற்றுமதிக்கான வர்த்தக உள்கட்டமைப்புத் திட்டத்தின் (TIES) கீழ், பகுதி நிதி உதவியாக 13.98 கோடி ரூபாய் மானியத்துடன் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் உடன் பணிபுரியும் இடம் (co–working space), மாநாட்டு மையம், ஆலோசனைக்கூடம், இயக்குநர்கள் கூடும் அறைகள்(Executive Board Rooms), பார்வையாளர்கள் மண்டபம் (auditorium), உணவகம் போன்ற வசதிகளை உள்ளடக்கியதாக இருக்கும். இதன் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

### 2.4.9 சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள்

ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காக்களில் சுமார் 67.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு வரும் சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள், நவீன யுகத்திற்குத் தேவையான தொழில்துறை மாற்றத்தை ஊக்குவிக்கும் நோக்குடனும், தொழில்நுட்பத் தலைமையுடனும், தொழில் முனைவோர் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் விதமாகவும் மற்றும் எதிர்காலத்திற்குத் தேவையான திறமைகளை ஒருங்கிணைக்கும் வகையிலும் அமையப்பெறும். புதுமையாளர்கள்/ தொழில் துவக்குநர்கள் (startups) ஆகியோருக்கு உடன் பணிபுரியும் இடம் (co-working space), தொழில் 4.0 உபகரணம், தயாரிப்பு மேம்பாட்டு மையங்கள், முன்மாதிரி தயாரிப்பு வசதி (proto typing facilities) மற்றும் பயிற்சி மையம் போன்ற வசதிகளை இந்த மையங்கள் உள்ளடக்கியதாக இருக்கும். இத்திட்டத்திற்காக, திருவாளர்கள் கோயம்புத்தூர் இன்னோவேஷன் & பிசினஸ் இன்குபேட்டர் மையமானது, தொழில்நுட்ப கூட்டாளராக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட வசதிகள் நடப்பாண்டில் (2022-23) செயல்பாட்டிற்கு வரும்.

### 2.4.10 தொழிற்சாலைகளுக்கு நீர் விநியோகத்தை பெருக்குதல்

#### 2.4.10.1 மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் திட்டம் (TTRO Plant)

இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம், பிள்ளைப்பாக்கம் மற்றும் வல்லம்–வடகால் ஆகிய தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான நீரை தடையின்றி வழங்குவதற்காக, சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் வாரியம் (CMWSSB), கோயம்பேட்டில் நாளொன்றிற்கு 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை எதிர்சவ்வூடுபரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் ஆலையை நிறுவியுள்ளது. இதன்மூலம், மேற்கூறிய ஐந்து சிப்காட் தொழில் பூங்காக்களுக்கும் தற்போது இந்த மூன்றாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், சிப்காட் நிறுவனம் ஓசூர் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்குத் தேவையான நீரை தடையின்றி வழங்கும் வகையில், ஓசூர் மாவட்டம், கெலவரப்பள்ளியில் நாளொன்றிற்கு 20 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை

எதிர்சவ்வூடுபரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் (TTRO) திட்டத்தை, சுமார் 182 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கவுள்ளது. இந்த திட்டத்திற்கு தேவையான இடம் கண்டறியப்பட்டு, கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

### 2.4.10.2 கடல் நீரை நன்னீராக்கும் திட்டம்

சிப்காட் நிறுவனம் தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, 60 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் ஆலை ஒன்றினை சிறப்பு நோக்க முகமை (தமிழ்நாடு நிலையான நீடித்த தொழில் துறை நீர் நிறுவனம்) மூலம் 634 கோடி ரூபாயில் செயல்படுத்த திட்டமிட்டிருந்தது. தற்போதைய தொழிற்சாலைகளின் நீர் தேவை 45 மில்லியன் லிட்டராக மறுமதீப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேவையை 30 மில்லியன் லிட்டர் கடல் நீரை நன்னீராக்கும் ஆலை மூலமாகவும் 15 மில்லியன் லிட்டர் மூன்றாம் நிலை எதிர் சவ்வூடு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் ஆலை மூலமாகவும் ஒப்பந்ததாரருக்கு

உறுதியிட்ட மூலதன ஆண்டுத்தொகை (Hybrid Annuity Model) முறையில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 15 மில்லியன் லிட்டர் மூன்றாம் நிலை எதிர் சவ்வூடு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் ஆலைக்கான விரிவான திட்ட அறிக்கையும், 30 மில்லியன் லிட்டர் கடல் நீரை நன்னீராக்கும் ஆலை திட்டத்திற்கான திருத்திய விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கும் பணி நடைப்பெற்று வருகிறது.

கடலூர் சிப்காட் தொழிற்பூங்காவில் நாளொன்றுக்கு 20 மில்லியன் திறன் கொண்ட மேலும், கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் ஒன்றை சிப்காட் அமைக்கவுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 2.4.11 தண்ணீர் பாதுகாப்புத் திட்டம்

சிப்காட் தொழிற்பூங்காக்களில் உள்ள அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் தடையின்றி நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக, சென்னை IITன் நகரமயமாக்கல், கட்டடம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான அமைப்பு (CUBE) மூலம் ஒரு விரிவான நீர் பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள அனைத்து சிப்காட் தொழில் பூங்காக்களுக்குள்ளும் மற்றும் அதனைச் சுற்றி

அமைந்துள்ள நீர்நிலைகளை புத்தாக்கம் மற்றும் மறுசீரமைப்பு செய்வதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் மாநில தொழில்துறை நீர் கொள்கையை உருவாக்குதல் ஆகியவை அடங்கும்.

### 2.4.12 தொழில் பூங்காக்களை பசுமைமயமாக்குதல்

சிப்காட் தனது தொழில் பூங்காக்களின் பசுமைச் சூழலை மேம்படுத்துவதற்காக, அதன் திறந்தவெளிப் பகுதிகளில், 24.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 5.68 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக 18 தொழிற் பூங்காக்களில் சுமார் 2.65 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும், இரண்டாம் கட்டமாக, திட்டமிடப்பட்ட சுமார் 3.05 இலட்சம் மரக்கன்றுகளில், 31.3.2022 வரை 2.56 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு விட்டன. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூர், பர்கூர் மற்றும் குருபரப்பள்ளி ஆகிய மூன்று தொழிற்பூங்காக்களில், முன்னோடித் திட்டமாக, 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50,000 பனைமரக் கன்றுகளை நடுவதற்கு சிப்காட் நிறுவனம் திட்டமிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட

வனத்துறை மூலம் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

### 2.4.13 தொழிலாளர் குடியிருப்பு வசதி

சிப்காட் நிறுவனமானது தனது தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் மலிவான தங்குமிடத்தை அமைத்து தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன்படி, 670 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வல்லம்–வடகால் தொழிற்பூங்காவில், 18,720 நபர்கள் தங்குமிட வசதி கொண்ட தொழிலாளர் குடியிருப்பு வளாகங்களை ஏற்படுத்தி வருகிறது. ஒன்றிய அரசின், மலிவு வாடகை வீட்டு வளாகங்கள் (ARHC) திட்டத்தின் கீழ் மானியம் மற்றும் வங்கியின் காலக் கடன் மூலம் இத்திட்டத்திற்கான செலவினங்கள் மேற்கொள்ளப்படும்.

மேலும், சிப்காட் தொழிற்பூங்காக்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடத்தை அமைத்துத்தருவதற்கான அவசியத்தை கருத்திற்கொண்டு, சிப்காட் தொழிற்பூங்காக்களில் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, சிறுசேரி (1120 படுக்கைகள்) மற்றும் பர்கூரில்

(1760 படுக்கைகள்) விடுதிகளை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், பெருந்துறை (222 படுக்கைகள்) மற்றும் தூத்துக்குடி (252 படுக்கைகள்) ஆகிய இடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய தங்குமிடங்களை உருவாக்க சிப்காட் திட்டமிட்டுள்ளது.

இந்த முன்முயற்சிகள் மூலம், சிப்காட் நிறுவனமானது அதன் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏதுவான சூழலை உருவாக்க, தங்குமிடங்கள் போன்ற சமூக உள்கட்டமைப்புகளை சாத்தியமான இடங்களில் அனைத்து தொழில் பூங்காக்களிலும் உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

சிப்காட் நிறுவனத்தால் ஏற்கனவே கட்டி செயல்பாட்டிலுள்ள மூன்று தங்கும் விடுதிகள்:– (i) இருங்காட்டுக்கோட்டை – மகளிர் தங்கும் விடுதி (330 நபர்கள்), (ii) ஸ்ரீபெரும்புதூர் ஆண்கள் தங்கும் விடுதி (400 நபர்கள்) மற்றும் (iii) ஸ்ரீபெரும்புதூர் மகளிர் தங்கும் விடுதி (600 நபர்கள்).

சிப்காட் நிறுவனத்தின் நிறுவன சமூகப் பொறுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியதாக, சுமார் 8.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 நபர்கள் தங்கும் வசதிகள் கொண்ட மகளிர் தங்கும் விடுதி, திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தில் சிப்காட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், இதே இடத்தில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்களுக்காக 400 நபர்கள் தங்கும் வசதிகள் கொண்ட விடுதியின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்த நிலையில் உள்ளது.

### 2.4.14 சரக்கு வாகன நிறுத்த வசதிகள்

போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, சிப்காட் நிறுவனம் தொழிற்பூங்காக்களில் சரக்கு வாகன நிறுத்தும் வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. சிப்காட் நிறுவனத்தால் ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் 2 சரக்கு வாகன நிறுத்த வசதிகள் (i) 10.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 190 சரக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளுடன் இருங்காட்டுக்கோட்டையிலும் (ii) 10.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 240 சரக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளுடன் வல்லம்–வடகால் தொழிற்பூங்காவிலும் ஏற்கனவே

கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் பெருந்துறை, கும்மிடிப்பூண்டி, ஒரகடம், திருப்பெரும்புதூர், நிலக்கோட்டை, கங்கைகொண்டான், சிறுசேரி மற்றும் பிள்ளைப்பாக்கம் தொழிற்பூங்காக்களில் சரக்கு வாகன நிறுத்தும் வசதிகளுக்குத் தேவையான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2.4.15 சிப்காட் தொழிற்பூங்காக்களில் தகவல் முறைமை வரைபடம் (GIS MAPPING) மற்றும் புவியியல் தகவல் முறைமைக்கான தகவலமைப்பினை (GEO DATABASE) தயாரித்தல்**

சிப்காட் நிறுவனம், தனது அனைத்து தொழிற்பூங்காக்களிலும், ட்ரோன் வழி சர்வே, முப்பரிமாண படம் மற்றும் தொலை உணர்வு (remote sensing) போன்ற அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தகவல் முறைமைக்கான தகவலமைப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்த தகவலமைப்பானது, சிப்காட் நிறுவனத்திற்கும், தொழில் முதலீட்டாளர்களுக்கும், திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் முடிவெடுப்பதற்கும் உதவிகரமாக விளங்குகிறது. மேலும், சிப்காட் நிறுவனம் புதிதாக அமைக்கப்படவிருக்கும் அதன் தொழிற்பூங்காக்களுக்கான

புவியியல் தகவல் முறைமைக்கான தகவலமைப்பினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

### 2.4.16 நில ஒதுக்கீட்டாளர்கள் செயல்படுத்தாமல் உள்ள திட்டங்களை முறைப்படுத்தல்

சிப்காட் நிறுவனத்தால் நில ஒதுக்கீடு பெறப்பட்ட நிலத்தை நில ஒதுக்கீட்டாளர்கள் உரியபடி பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காகவும், திட்டத்தைச் செயல்படுத்தாமல் உள்ள ஒதுக்கீட்டாளர்களுக்கான நில ஒதுக்கீட்டை முறைப்படுத்து வதற்காகவும் சிப்காட் நிறுவனமானது நில ஒதுக்கீட்டாளரை பின்வரும் 3 வகையினராக வகைபாடு செய்துள்ளது. (i) நில ஒதுக்கீடு பெற்று 3 ஆண்டுகளுக்குள் நிலத்தை பயன்படுத்தாமல் இருப்பவர்கள் (ii) 3 முதல் 7 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால அளவில் நிலத்தை பயன்படுத்தாமல் இருப்பவர்கள் (iii) 7 ஆண்டுகளுக்கு மேல் நிலத்தை பயன்படுத்தாமல் இருப்பவர்கள். நில ஒதுக்கீட்டாளர்களின் வகைப்பாடுகளுக்கேற்றவாறு அவர்களின் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஓராண்டு கால நீட்டிப்பு அளிப்பதற்காக, நிலத்தின் தற்போதுள்ள விலையில் 5 சதவீதம் அபராதம் / நில வித்தியாசத் தொகை பெறப்பட்டு கால நீட்டிப்பு

வழங்கப்படுகிறது. நிலத்தை திருப்பி ஒப்படைக்க விரும்புகிற ஒதுக்கீட்டாளர்கள் அவர்கள் செலுத்திய தொகையில் 1 சதவீத தொகையைக் கழித்துக்கொண்டு மீதமுள்ள தொகையை அவர்களுக்கு திரும்ப அளிப்பதன் மூலம், நிலத்தை சிப்காட் வசம் திருப்பி ஒப்படைக்க அனுமதிக்கப்படுகின்றனர். ஒப்படைக்கப்பட்ட நிலம் புதிய தொழில்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சிப்காட் நிறுவனம், 2 மற்றும் 3 வகைபாட்டில் வரும் 257 நிறுவனங்களுக்கு அபராத அறிவிப்பு வழங்கி வருகிறது. வகைபாடு 2–ன் கீழ் வரும் 106 நிறுவனங்களில், தற்போதுள்ள நிலத்தின் மதிப்பில் 5% அபராதத் தொகையை செலுத்திய 71 நிறுவனங்களுக்கு அவர்களின் திட்டத்தைச் செயல்படுத்த 12 மாதங்கள் கால நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது. 18 நிறுவனங்கள் நிலத்தை திருப்பி சிப்காட் வசம் அளித்துவிட்டனர். மேலும், வகைபாடு–3 இன் கீழ் வரும் 151 நிறுவனங்களில், நில வித்தியாசத்தொகையை செலுத்திய 29 நிறுவனங்களுக்கு திட்டத்தை செயல்படுத்த 12 மாதங்களுக்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டது மற்றும் 6 நிறுவனங்கள் நில வித்தியாசத் தொகையை

செலுத்த முடிவு செய்துள்ளன, 34 நிறுவனங்கள் நிலத்தை திருப்பி சிப்காட் வசம் அளித்து விட்டனர், மீதமுள்ள 2 நிறுவனங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மனைகளை சிப்காட் வசம் ஒப்படைக்க முன் வந்துள்ளனர். ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலங்கள் புதிய தொழில் நிறுவனங்களுக்கு, ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

## 2.5 அரசின் புரிந்துணர்வு ஒப்பந்த நிறுவனங்களுக்கான முகவாண்மை நிறுவனம்

பெருந்தொழில், சிறப்புப் பெருந்தொழில் மற்றும் உயர் சிறப்புப் பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அமைப்பு ரீதியிலான தொகுப்பு சலுகை (Structured Package of Assistance) வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அரசின் முகமையாக சிப்காட் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இதுவரை 38 தொழில் நிறுவனங்களுக்கு 15,433.12 கோடி ரூபாய் அளவிலான தொகுப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. 2021–22 ஆம் நிதியாண்டில் 1031.66 கோடி ரூபாய் அளவிலான தொகுப்பு சலுகைகள் 31.03.2022 வரை 20 தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 2.6 சிப்காட் நிறுவனத்தின் நிதிச்செயல்பாடு

சிப்காட் நிறுவனம் உன்னத நிதிச் செயல்பாட்டுடன் இயங்கி வருவதோடு, 2005–2006ம் நிதியாண்டு முதல் அரசுக்கு தொடர்ந்து ஈவுத்தொகையினை செலுத்தி வருகிறது. 2020–21ம் நிதியாண்டில், 1421.55 கோடி ரூபாய் அளவிற்கு வணிகம் புரிந்து, 472.16 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. இதன் மூலம் 141.65 கோடி (124%) ரூபாயை அரசுக்கு ஈவுத்தொகையாக வழங்கியுள்ளது. கடந்த பல நிதியாண்டுகளில் சிப்காட் நிறுவனம் தமிழக அரசுக்கு தொடர்ந்து செலுத்தி வரும் ஈவுத் தொகைகளில் இந்த ஆண்டு அளித்த ஈவுத் தொகையே அதிகமானதாகும்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **07.03.2022** அன்று தூத்துக்குடியில் அமைக்கப்படவுள்ள சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார்கள்

Blank Page




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **05.04.2022**அன்று விழுப்புரம் மாவட்டம், பெலாக்குப்பம் ஊராட்சியில் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில், செய்யார் SEZ டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் **500** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படவுள்ள காலணி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார்கள்

**Blank Page**



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரில் உள்ள செயிண்ட் – கோபைன் நிறுவனத்தின் மிதவை கண்ணாடி பிரிவு, ஒருங்கிணைந்த ஜன்னல் பிரிவு ஆலையைப் பார்வையிட்டார்கள்.

Blank Page



புவியியல் தகவல் அமைப்பின் மூலம் எடுக்கப்பட்ட சிப்காட் சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்கா

Blank Page



புவியியல் தகவல் அமைப்பின் மூலம் எடுக்கப்பட்ட சிப்காட் இருங்காட்டுக்கோட்டை தொழில் பூங்கா

105

Blank Page



புவியியல் தகவல் அமைப்பின் மூலம் எடுக்கப்பட்ட சிப்காட் ஓசூர் தொழில் பூங்கா

107

Blank Page

## 3. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், தொழில் மூலதன முதலீட்டை ஈர்க்கவும், தனியார் தொழில் முனைவோர் மற்றும் மத்திய/மாநில அரசு நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாண்மை நிறுவனங்கள் மூலம் பெரிய / நடுத்தர தொழில் திட்டங்களை நிறுவ, 1965–ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது. மேலும், பெரும் முதலீடு மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய பெரிய தொழில் மற்றும் கட்டமைப்பு திட்டங்களை மாநிலத்தில் நிறுவ டிட்கோ வழிவகை செய்கிறது.

உற்பத்தி துறை, சேவை துறை மற்றும் கட்டமைப்பு துறைகளைச் சார்ந்த 116 கூட்டாண்மை நிறுவனங்களை டிட்கோ நிறுவனம் நிறுவியுள்ளது. இது தவிர, டிட்கோ நிறுவனம் சமீபத்தில், மேலும் 3 புதிய கூட்டாண்மை நிறுவனங்களான டைடல் நியோ, தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி திறன் மிகு மையம் (TANCAM), திருச்சிராப்பள்ளி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப குழுமம் (TREAT) ஆகியவற்றை உருவாக்கியுள்ளது.

டைட்டன் நிறுவனம், ஸ்பிக், டான்பேஃக், டான்ஃப்ளோரா, JSW ஸ்டீல்ஸ், இந்தியன் ஆயில்–எல்என்ஜி (LNG) முனையம், தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ், மகிந்திரா வேர்ல்டு சிட்டி, அசென்டாஸ் தகவல் தொழில் நுட்ப பூங்கா, டைடல் பார்க், டைசல் பயோ பார்க், மெரைன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலப்மென்ட் பிரைவேட் லிமிடெட் (காட்டுப்பள்ளி துறைமுகம்), எல்&டி கப்பல் கட்டுமானம் லிமிடெட், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை, சென்னை வர்த்தக மையம் மற்றும் இராமானுஜன் தகவல் தொழில்நுட்ப நகரம் போன்றவை பிரபலமாக செயல்பட்டு வரும் டிட்கோவின் கூட்டாண்மை நிறுவனங்களுள் சிலவாகும். மேலும், நிதிநுட்ப நகரம், வானூர்தி / வான்வெளி மையம், பாலிமர் தொழிற் பூங்கா மற்றும் மருத்துவ பூங்கா உள்ளிட்ட முக்கிய திட்டங்களை சென்னை மாவட்டம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் டிட்கோ நிறுவனம் தற்போது செயல்படுத்தி வருகிறது.

## 3.1 தொழில்துறை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள்

### 3.1.1 நிதிநுட்ப நகரம்

உலகளவில் சிறந்த நிதிசார் மையமாக சென்னையை உருவாக்குவதற்காக சென்னை மாவட்டம், ஆலந்தூர் தாலுகா, நந்தம்பாக்கம் கிராமத்தில் ஏறக்குறைய 122.69 ஏக்கர் நிலப்பரப்பில் "நிதிநுட்ப நகரத்தை" உருவாக்குவதற்கு டிட்கோ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிதிநுட்ப நகரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகள், வங்கி சாரா நிதி சேவை நிறுவனங்கள், நிதி வணிக செயல்முறை ஒப்பந்த நிறுவனங்கள், நிதி ஒழுங்குமுறை நிறுவனங்கள், நிதி சந்தை செயல்பாட்டு நிறுவனங்கள், பயிற்சி மையங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டிருக்கும். இத்திட்டத்திற்கான சாத்தியகூறு அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது.

டிட்கோ இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு, நந்தம்பாக்கம் கிராமத்தில் உள்ள சுமார் 61.09 ஏக்கர் நிலத்திற்கான "முன்நுழைவு அனுமதி" வழங்கியுள்ளது. மேலும், சென்னை, ஆலந்தூர் தாலுகாவிலுள்ள, நந்தம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் கிராமங்களில் உள்ள சுமார் 61.60 ஏக்கர் நிலத்தை,

டிட்கோவிற்கு "உரிமை மாற்றம்" செய்து வழங்கியுள்ளது.

நிதிநுட்ப நிறுவனங்கள் தங்களது செயல்பாடுகளை நிறுவுவதற்காக, நிதிநுட்ப திட்டத்தின் ஒரு பகுதியாக, 5 லட்சம் சதுரஅடி பரப்பளவில் சர்வதேச தரநிலைகளோடு ஒரு "ஃபின்டெக் டவரை" உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்களுக்கு நிலம் மற்றும் அலுவலகத்திற்கான இடங்கள் வழங்கப்படும். மாநிலத்தில் புத்தொழில் சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்காக இந்நிதிநுட்ப நகரத்தில், புத்தொழில் மையம் அமைப்பதற்கும் பிற இதர நிறுவனங்கள் தங்கள் தொழிலை உடனடியாக தொடங்கும் வசதிக்கென ஒரு சிறப்பு வடிவமைப்புடன் கூடிய கட்டடத்தை உருவாக்கி அதில் இடமளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செயல்திட்டத்திற்கான ஒரு விரிவான பெருந்திட்டம் (மாஸ்டர் பிளான்), தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் பெருந்திட்டத்தை செயல்படுத்துவதற்கு, ஒரு "திட்ட மேலாண்மை ஆலோசகரை (PMC)" தேர்வு செய்யும் பணியில் டிட்கோ தற்போது ஈடுபட்டு வருகிறது.

### 3.1.2 டைடல் – நியோ

2000ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட டைடல் பார்க், சென்னை தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்ப புரட்சியை கொணர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் உள்ள நகரங்களில் (Tier–2 & Tier–3) தகவல் தொழில்நுட்ப புரட்சியை எடுத்துச் செல்வதற்காக இந்நகரங்களில் ஏறக்குறைய 50,000 முதல், 1,00,000 சதுரஅடி வரையிலான பரப்பளவில் சிறிய அளவிலான தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை (டைடல் நியோ), டைடல் நிறுவி வருகிறது. இந்த சிறிய அளவிலான டைடல் நியோ பூங்காக்களை உருவாக்குவதற்குத் தேவையான நிலங்களை அரசு வழங்கும். இத்திட்டத்தை செயல்படுத்தும் "சிறப்பு நோக்க அமைப்பில் (SPV), அரசின் பிரதிநிதியாக டிட்கோ செயல்படும். முதற்கட்டமாக விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர், திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்களிலும் பின்வரும் காலகட்டங்களில் அடுத்த கட்டமாக மற்ற நகரங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய நகரங்களில், விழுப்புரம், தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் இடம் கண்டறியப்பட்டு, திட்ட மேலாண்மை ஆலோசகர்கள் (PMC)

நியமிக்கப்பட்டுள்ளனர். இதை செயல்படுத்தும் ஒப்பந்ததாரரை (EPC) தேர்வு செய்யும் பணி இறுதி நிலையில் உள்ளது.

### 3.1.3 வானூர்தி மையம் (Aero Hub)

தமிழ்நாடு பாதுகாப்பு தொழிலக வழித்தடத்தின் ஒரு பகுதியாக, ஒரு **"வானூர்தி மையத்தை"** ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள வானூர்தி தொழில் பூங்காவின் அமைவிடத்திற்குள் டிட்கோ நிறுவனம், நிறுவி வருகிறது. இம்மையம், வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம், வானூர்தி மின்னணுவியல் உதிரிபாகங்கள் உற்பத்தி வளாகம், பரிசோதித்து சான்றிதழ் வழங்கும் வசதி, பொது சேமிப்பு கிடங்கு, திறன்மிகு மையம் (Centre of Excellence) மற்றும்திறன் மேம்பாட்டு மையம் (Skill Development Centre) போன்ற வசதிகளைக் கொண்டதாக அமையும். இத்திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டப் பணிகள், சுமார் 230 கோடி ரூபாய் செலவில், 3.5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பார்க் சென்னை நிறுவனத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் பிப்ரவரி 2023–க்குள் நிறைவடையும்.

### 3.1.4 சரக்கு போக்குவரத்து (லாஜிஸ்டிக்ஸ்)

### (அ) மாநில சரக்கு போக்குவரத்து கொள்கை

வளர்ச்சி பாதையில் பிற மாநிலங்களோடு போட்டியிடும் திறனை உயர்த்துவதற்கும் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருளாதாரத்தை அடைவதற்கும், சரக்கு போக்குவரத்துத் துறையின் மீது கவனம் செலுத்துவது இன்றியமையாததாக உள்ளது. இக்கொள்கையானது, மாநிலத்தில் ஒழுங்குமுறை கொள்கைகள், ஒன்றோடொன்று தொடர்புடைய உட்கட்டமைப்பு, டிஜிட்டல் மாற்றம்; பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகிய முக்கிய அம்சங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தும். மேலும், புத்தாக்கம், திறன்மிக்க மனிதவள ஆதாரம், தரம் மற்றும் புதுமையான தொழில்நுட்பங்கள் வழியாக செயல் திறன் மற்றும் நிலைப்புத்தன்மையை உருவாக்குவதோடு, தமிழ்நாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு போக்குவரத்து சூழல் அமைப்பை ஏற்படுத்தி, நமது மாநிலத்தின் போட்டித் திறனை மேம்படுத்துவது இக்கொள்கையின் முக்கிய குறிக்கோள் ஆகும். தொழில் மற்றும் வர்த்தகத்திற்கு மிகவும் விரும்பித் தேடிவரும் அமைவிடமாக, தமிழ்நாட்டின் தற்போதைய நிலையை மேலும் வலுப்படுத்துவது இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

## (ஆ) மாநில ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்து (லாஜிஸ்டிக்ஸ்) திட்டம் (SILP)

மாநிலங்களுக்குள்ளும், மாநிலங்களுக்கு இடையேயும் மற்றும் சர்வதேச அளவில் உற்பத்தி ஆலைகள், சரக்கு போக்குவரத்து, சேமிப்பு கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள் வாயிலாக, பொருட்களை பயனாளிகளுக்கு தங்கு தடையின்றி கொண்டு செல்வதற்கு உரிய இணைப்பை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம், மாநில அளவில் ஒருங்கிணைந்து மற்ற துறைகளுடன் இணைந்து செயல்படுவதால் மாநிலத்தின் பொருளாதாரம் மேம்படுவதோடு, சரக்குகளை கையாளுவதற்கான செலவும் குறையும்.

அதுமட்டுமின்றி, சரக்கு போக்குவரத்திற்கான மேம்பட்ட சூழல் அமைப்பையும் உறுதி செய்யும். சரக்கு போக்குவரத்திற்கான இடையூறுகளை கண்டறிந்து, அதை களைவதற்கும், சரக்குகளை மாநிலம் முழுவதும் கொண்டு செல்வதற்கான வசதிகளை மேம்படுத்தவும் இத்திட்டம் உதவும். இதில் ஏற்கனவே கையாளப்பட்டு வரும் சரக்கு வசதிகளில் ஏற்படும் பின்னடைவுகள், அதன் சேவை மற்றும் கையாளும் திறன் இவைகளோடு, தற்போது மாநில மற்றும் இந்திய

அளவில் முன்மொழியப்படுகின்ற இரயில் மற்றும் சாலை இணைப்புத் திட்டங்கள் அனைத்தும் கருத்தில் கொள்ளப்பட்டு இத்திட்டம் உருவாக்கப்படும். மேலும், துறைமுகங்கள், இரயில் போக்குவரத்து, விமான போக்குவரத்து மற்றும் சரக்குகளுக்கான வசதிகள் இவை அனைத்தும் தற்போதுள்ள நிலையுடன், எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப கட்டமைப்பை உருவாக்கி செயல்படும் விதத்தில் இத்திட்டம் அமையும்.

**(இ) பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா**

டிட்கோ நிறுவனம், தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம் (NHLML) மற்றும் சென்னை துறைமுக பொறுப்பு கழகம் இணைந்து திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கிராமத்தில், 158 ஏக்கர் நிலப் பரப்பில் 1200 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்காவை அமைக்க உள்ளது. இத்திட்டத்தை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் மத்திய அரசின் தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் செயல்படுத்தும். சென்னை, காமராஜர் மற்றும் காட்டுப்பள்ளி ஆகிய துறைமுகங்களை பயன்படுத்தும் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு தடையற்ற

சரக்கு போக்குவரத்திற்கு சாலை மற்றும் இரயில் போக்குவரத்து வசதிகளை இத்திட்டம் ஏற்படுத்தும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 12.10.2021 அன்று தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுக பொறுப்பு கழகம் மற்றும் டிட்கோ இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும், இரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் (RVNL) இத்திட்டத்திற்கு இரயில் இணைப்பை வழங்குவதற்காக சிறப்பு நோக்கு அமைப்பில் பங்குதாரராக இருப்பதற்கு முன்வந்துள்ளது.

### 3.1.5 பாலிமர் தொழிற் பூங்கா

டிட்கோ மற்றும் சிப்காட் இணைந்து தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் (TPIPL), என்ற ஒரு சிறப்பு நோக்கு அமைப்பை (SPV), கூட்டாண்மை நிறுவனமாக நிறுவியுள்ளன. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில் மத்திய அரசின் அனுமதியுடன் சுமார் 239.82 ஏக்கர் பரப்பளவில், 216 கோடி ரூபாய் முதலீட்டில் இப்பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது..

பாலிமர் பொருட்கள் தயாரிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்பிரிவுகள் அமைக்க ஏதுவான உட்கட்டமைப்பு வசதிகள் கொண்டதாக இப்பூங்கா இருக்கும். இப்பூங்கா, மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறையின் பிளாஸ்டிக் பூங்கா திட்டத்தின் கீழ் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில், 180.91 ஏக்கர் பரப்பளவில் முதற்கட்ட பணி (Phase–I) தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்காக இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறை ஒப்புதல் அளித்துள்ள 40 கோடி ரூபாய் மானியத் தொகையில், 22 கோடி ரூபாய் TPIPL–க்கு அளித்துள்ளது. 73.37 கோடி ரூபாய், TPIPL–ல் பங்கு முதலீடாக டிட்கோ மற்றும் சிப்காட் இதுவரை வழங்கியுள்ளன. அடிப்படை உட்கட்டமைப்பு உருவாக்கப் பணிகள், நிர்வாகக் கட்டடம், தொழில்நுட்ப மையம், பயிற்சி மையம் மற்றும் நிர்வாகப் பணிக்கான கட்டடம் ஆகியவற்றிற்கான கட்டுமான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தங்களது தொழிலகங்களை இங்கு நிறுவுவதற்காக ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கும் இரு தொழில்முனைவோர்களுக்கு சுமார் 4 ஏக்கர் நிலம், 22.09.2021 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2022 ஜூலை மாதத்திற்குள் பணிகள் நிறைவடைந்து இப்பூங்கா பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.1.6 டைடல் பார்க், பட்டாபிராம்

சென்னையின் பிற பகுதிகளில், குறிப்பாக வடமேற்கு பகுதியில் வளர்ந்து வரும் சூழலில் தொழில்நுட்ப பூங்காவின் தேவை மற்றும் அவசியத்தைக் கருத்தில் கொண்டு திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தாலுகா, பட்டாபிராம் பகுதியில் ஒரு தகவல் தொழில்நுட்ப பூங்காவை தமிழ்நாடு அரசு, டைடல் பார்க் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தி வருகிறது. சுமார் 11.41 ஏக்கர் நிலப்பரப்பில், 5.57 இலட்சம் சதுரஅடி கட்டட பரப்பளவு கொண்ட இப்பூங்கா சுமார் 278.84 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாகி வருகிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2023 பிப்ரவரி மாதத்தில் நிறைவுபெறும்.

### 3.1.7 சென்னை வர்த்தக மையம் விரிவாக்க திட்டம்

டிட்கோ (TIDCO) மற்றும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் (ITPO) இணைந்து உருவாக்கிய ஒரு கூட்டாண்மை நிறுவனமான தமிழ்நாடு வர்த்தக

மேம்பாட்டு நிறுவனம் (TNTPO), நந்தம்பாக்கத்தில் 25,455 சதுர மீட்டர் கட்டடப் பரப்பளவில் சென்னை வர்த்தக மையத்தை உருவாக்கியுள்ளது. சென்னை வர்த்தக மையம், பல தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளின் போது தேவையான கண்காட்சிகள் நடத்துவதற்கு 20,000 சதுர மீட்டர் குறைந்தபட்ச இடவசதியை பூர்த்தி செய்யும் வகையில் விரிவுபடுத்தப்படுகிறது. இந்த விரிவாக்கத் திட்டமானது சுமார் 83,746 சதுர மீட்டர் மொத்த கட்டட பரப்பளவில் உலகத் தரம் வாய்ந்த வசதிகளுடன் கண்காட்சி அரங்குகள், 4000 இருக்கைகள் கொண்ட மாநாட்டு மையம், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், உணவு வளாகம் மற்றும் இதர வசதிகளுடன் சுமார் 309 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.1.8 தரமணியில் தகவல் தொழில்நுட்ப பூங்கா

டிட்கோவுடன் DLF நிறுவனம் இணைந்து சென்னை தரமணியில் சுமார் 27.05 ஏக்கர் நிலப்பரப்பளவில் 6.8 மில்லியன் சதுர அடி கட்டட பரப்பளவில் தகவல் தொழில் நுட்ப பூங்கா ஒன்றினை சுமார் 5000 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவி

வருகிறது. இந்த கூட்டாண்மை நிறுவனத்தில் 50 கோடி ரூபாய் டிட்கோ முதலீடு செய்யும். இந்த கூட்டாண்மை நிறுவனம், முதற்கட்டமாக 1200 கோடி ரூபாய் செலவில் "டிஎல்எஃப் டௌன்டவுன்" (DLF DOWNTOWN) பேஸ்– I–ல் 2.06 மில்லியன் சதுரஅடி பரப்பளவு உள்ள கட்டட வளாகத்திற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.மேலும், 650 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டி "டிஎல்எஃப் டௌன்டவுன்" (DLF DOWNTOWN) பேஸ்– II–ல் ஒரு தனித்துவமான கட்டட வடிவமைப்புடன் ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ்(SCGBS)க்காக உலகளவில் ஒரு மிகப்பெரிய அலுவலக வளாகத்தினை சுமார் 7.7 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் கட்டுவதற்கு DLF நிறுவனம், ஸ்டான்டர்டு சார்ட்டர்டு நிறுவனத்தோடு ஒரு ஒப்பந்தத்தில் சமீபத்தில் கையொப்பமிட்டுள்ளது. 14.03.2022 அன்று டிஎல்எஃப் டௌன்டவுன் பேஸ் II–ல், ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ்–ன் இந்த மிகப்பெரிய உலகளாவிய அலுவலக வளாகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இதன் மூலம் 70,000–க்கும் அதிகமான தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும்.

### 3.1.9 மருத்துவ உபகரணங்கள் பூங்கா

டிட்கோ நிறுவனம் மற்றும் மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் இணைந்து செங்கல்பட்டு அருகில் 330.10 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு "மருத்துவ உபகரணங்கள் பூங்கா" திட்டத்தை 392 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைத்துள்ளது. இப்பூங்கா, மருத்துவ உபகரணங்கள், மருத்துவ சாதனங்கள், நோய் கண்டறிதல், மருத்துவ மென்பொருள், நுகர் பொருட்கள் மற்றும் இல்லத்தை பராமரிக்கும் சுகாதார பொருட்கள் போன்ற பிரிவுகளை கொண்டதாக இருக்கும். இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்தும் வகையில், டிட்கோ நிறுவனமே மருத்துவ உபகரண பூங்கா திட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 3.1.10 திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரி பல்பொருள் சிறப்பு பொருளாதார மண்டலத் திட்டம்

டிட்கோ, ஒரு பல்பொருள் சிறப்பு பொருளாதார மண்டலத் திட்டத்தை திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுக்காவில் 2519 ஏக்கர் நிலப்பரப்பில், ஏ.எம்.ஆர்.எல் ஹைடெக் சிட்டி லிமிடெட் என்ற கூட்டாண்மை நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தி

வருகிறது. இந்த சிறப்பு பொருளாதார மண்டலம் முதற்கட்டமாக சுமார் 350 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டு, மார்ச் 2011 முதல் செயல்பட்டு வருகிறது. இச்சிறப்பு பொருளாதார மண்டலத்தின் 135 ஏக்கர் நிலத்தில் நிறுவப்பட்ட பிரிவுகளின் மொத்த ஏற்றுமதி மதிப்பு சுமார் 700 கோடி ரூபாய் ஆகும். சிறப்பு பொருளாதார மண்டலம் அல்லாத பகுதிகளில் அதிக முதலீடுகள் ஈர்க்கப்பட்டு வருகின்றன.

### 3.1.11 தமிழ்நாட்டில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு குழாயமைப்பு மற்றும் நகர எரிவாயு விநியோக (CGD) திட்டங்கள்

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு குழாயமைப்பு திட்டத்தை எண்ணெய் நிறுவனங்களும், நகர எரிவாயு விநியோகத் திட்டத்தை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களும் செயல்படுத்துவதை உறுதிபடுத்து முகமையாக செயல்பட டிட்கோ நியமனம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் தற்போது நடைபெற்று வரும் ஐந்து பெரிய பிஎன்ஜி குழாய் அமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தை டிட்கோ கண்காணித்து வருகிறது. மேற்படி இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டத்தை இந்தியன் ஆயில் நிறுவனம் 1224 கி.மீ.

நீளத்திற்கும், கெய்ல் நிறுவனம் 319 கி.மீ. நீளத்திற்கும், பெட்ரோலிய பொருள்களுக்கான குழாய் அமைப்பு திட்டத்தை ஹெச்பிசிஎல் நிறுவனம் 700 கி.மீ. நீளத்திற்கும், பாரத் பெட்ரோலிய கார்ப்பரேசன் லிட்., 320 கி.மீ. நீளத்திற்கும், கொச்சின்–சேலம் பைப்லைன் பிரைவேட் லிட்., 210 கி.மீ. நீளத்திற்கும் செயல்படுத்தி வருகின்றன. மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களின் முதலீடு, சுமார் 14,200 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நகர எரிவாயு விநியோகத் திட்டத்திற்கான ஒரு வரைவு கொள்கையினை மாநில அளவில் டிட்கோ தயாரித்துள்ளது. மேலும் இந்நகர எரிவாயு விநியோக வலையமைப்பை தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களிலும் செயல்படுத்துவதற்கு அனுமதி பெற்றுள்ள 7 CGD நிறுவனங்களோடு டிட்கோ ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறது. சுமார் 2,785 விற்பனை நிலையங்களில் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவும், 22,794,795 வீடுகளுக்கு குழாயின் மூலம் இயற்கை எரிவாயுவும் வழங்குவதற்கான இத்திட்டம், சுமார் 35,000 கோடி ரூபாய் திட்ட முதலீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டம், சுமார் 8 ஆண்டுகளில் முழுமை பெறும்.

### 3.2 தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் வழித் தடங்கள்

உலகளவில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையில், உற்பத்தி மற்றும் சேவைக்கான பெரு மையங்களுள் ஒன்றாக தமிழ்நாட்டை மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய ஐந்து முனையங்களை "தமிழ்நாடு பாதுகாப்புத் தொழிலக வழித்தடங்களாக" அறிவித்து, தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் சார்ந்த நிறுவனங்கள், இத்திட்டத்தில் சுமார் 13,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய உறுதி வழங்கியிருக்கின்றன. இதில், சுமார் 20% ஏற்கனவே முதலீடாக பெறப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தும் உத்திகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

#### (அ) பொது பரிசோதனை மையங்கள்

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையின் வளர்ச்சிக்கு, சோதனை வசதிகளை எளிதாக அணுக வேண்டியது அவசிய தேவை ஆகும். எனவே, நான்கு பொது பரிசோதனை மையங்களை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த டிட்கோ திட்டமிட்டிருக்கிறது. மத்திய பாதுகாப்பு

அமைச்சகத்தால் "பாதுகாப்பு பரிசோதனை உட்கட்டமைப்பு" திட்டத்தின் மானிய உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**(ஆ) பொது வசதி மையங்கள்**

தனியார் தொழில் நிறுவனங்களில் இருக்கும் வசதிகளோடு கூடுதல் வசதிகள் பெறவும், அந்நிறுவனங்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறையின் ஒரு அங்கமாக தன்னை இணைத்துக் கொள்ளவும் டிட்கோ "பொது வசதி மையங்களை" அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அதன்படி டிட்கோ, "திருச்சி இன்ஜினியரிங் அண்டு டெக்னாலஜி க்ளஸ்டரில் (TREAT)" என்ற பொது வசதி மையம் அமைக்க 10 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

**(இ) உற்பத்தித் துறையில் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களுக்கேற்றவாறு திறன்மிகு மையங்கள் அமைத்தல்**

டிட்கோ, உற்பத்தி துறையில் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்றவாறு திறன்மிகு மையங்களை, பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP mode) அமைக்கவுள்ளது. வடிவமைப்பு, உற்பத்தி பொருள் மேம்பாடு, முன்மாதிரிகள், உற்பத்தி, திறன் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தல் ஆகிய

நடவடிக்கைகளை மேற்கொண்டு, தொழில் நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் இத்திறன் மிகு மையங்கள் செயல்படும். உலகளவில் பெரிய நிறுவனங்களான GE ஏவியேஷன், டஸால்ட் சிஸ்டம்ஸ் மற்றும் சீமென்ஸ் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து 3 "திறன்மிகு மையங்களை" 600 கோடி ரூபாய் முதலீட்டில் டிட்கோ அமைத்து வருகின்றது.

**(ஈ) மூல உபகரணங்கள் / கருவிகள் உற்பத்தி செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்த்தல் (Foreign OEMs)**

தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில் வழித்தடப் பகுதிக்கு வலுசேர்க்கும் வகையில், அங்கு வெளிநாட்டு உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளை அதிகளவில் நேரடியாக உற்பத்தி மற்றும் சேவை துறையில் மேற்கொள்ளவும், அவ்வழித்தடப் பகுதியில் உற்பத்தியாகும் பொருட்களை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளிலும் டிட்கோ ஈடுபட்டுள்ளது. இவ்வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் 10 பில்லியன் அமெக்க டாலர் முதலீட்டை ஈர்க்கவும், இந்நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்துதல், உற்பத்தி செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளவும், அதன்மூலம் வர்த்தக ரீதியிலான ஒரு கட்டமைப்பை /

தொடர்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் டிட்கோ ஈடுபட்டு வருகிறது.

**(உ) பாதுகாப்புத் துறையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்கு பாகங்கள் வழங்க, தொகுப்பு (Clusters) அணுகுமுறை**

தற்போது பாதுகாப்புத் துறையில் 16 பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளன. இதில் ஆர்ட்னஸ் பேக்டரி போர்டின் (Ordnance Factory Board) ஒரு அங்கமும் அடங்கும். தற்போது இது ஒரு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பெரிய அளவிலான அந்நிறுவனத்தின் ஆர்டர்களை பெறுவதற்கு, டிட்கோ ஒரு தொடர் சங்கிலி இணைப்பை நிறுவனங்களுக்கிடையே உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. மேலும், சிறு பாகங்கள் வழங்குவதற்கு பதிலாக ஒரு முழுமை பெற்ற அலகு மற்றும் துணை அலகுகளாக வழங்கும் நிறுவனங்களை ஒரு தொகுப்பின் கீழ் கொணர்ந்து, அவைகளுக்கு பணி ஆணைகளை பெற்று வழங்கும் வகையில் டிட்கோ உதவி வருகிறது.

## 3.3 தொழில் வழித் தடங்கள் (Industrial Corridors)

### 3.3.1 சென்னை–பெங்களூரு தொழில் வழித்தடம்

டிட்கோ மற்றும் தேசிய தொழில் வழித்தட மேம்பாடு மற்றும் செயலாக்க அமைப்பு (NICDIT)

இணைந்து, சென்னை–பெங்களூரு தொழில் வழித்தடப் பகுதியில் "பொன்னேரி தொழில் முனையம்" என்கிற ஒரு திட்டத்தை திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படுத்தி வருகின்றது. இம்முனையம், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள், சரக்குகள் கையாளுவதற்கான பிரத்தியேக சாலை மற்றும் இரயில் வழித்தடங்கள், சரக்கு ஆளுமை மையங்கள், மின்சாரம், பொது உட்கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் கூடிய தொழில் நகரியமாக உருவாக்கப்படும். திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, காட்டூர் மற்றும் ஏப்ரஹாம்புரம் கிராமங்களில் சுமார் 650 ஏக்கர் நிலமும், சென்னை மாவட்டம், மாதவரம் மற்றும் திருவொற்றியூர் தாலுகாக்களில் உள்ள கொசப்பூர், மாத்தூர் மற்றும் அ.முல்லைவாயில் கிராமங்களில் சுமார் 530 ஏக்கர் நிலமும் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி தாலுகா, மாணலூரில் சுமார் 2,300 ஏக்கர் நிலமும் இத்திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டு, தொழில் நகரீயங்களாக உருவாக்கப்படும். இதற்கான பெருந்திட்டம் தயாரிக்கும் பணிகள் ஆலோசகர் நிறுவனம் மூலம் நடைப்பெற்று வருகின்றன.

### 3.3.2 கொச்சி–கோயம்புத்தூர்–பெங்களூரு தொழில் வழித்தடம் – தர்மபுரியில் தொழில் உற்பத்தித் தொகுதிகளை (கிளஸ்டர்) உருவாக்குதல்

தர்மபுரியில் சுமார் 1700 ஏக்கர் நிலப்பரப்பில் "ஒருங்கிணைந்த உற்பத்தித் தொகுதி" ஒன்றினை உற்பத்திக்கான மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் "கொச்சி–கோயம்புத்தூர்–பெங்களூரு தொழில் வழித்தடங்களில்" "தேசிய தொழில் வழித்தட மேம்பாடு மற்றும் அமலாக்க டிரஸ்ட்" வழங்கும் நிதியின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வொருங்கிணைந்த உற்பத்தித் தொகுதித் திட்டத்திற்கான பெருந் திட்டத்தை (Master Plan) தயாரிக்கும் பணி, ஆலோசகரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம், மேற்கூறிய வழித்தடங்களில் உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளோடு பொருளாதார முன்னேற்றம், திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு பெருக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும்.

### 3.3.3 சென்னை–கன்னியாகுமரி தொழில் பெருவழித் திட்டம்

மாநிலத்தில் துறைமுகம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு கடற்கரை பொருளாதார பெருவழித் திட்டத்தின் ஒரு பகுதியான

சென்னை கன்னியாகுமரி பெருவழித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தபட்டு வருகின்றது. இப்பெருவழி, மாநிலத்தின் 23 மாவட்டங்களை உள்ளடக்கியது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, நிதி உதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிய வளர்ச்சி வங்கி கீழ்க்காணும் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்க அனுமதி அளித்துள்ளது:–

(i) ரூபாய் 6641 கோடி மதிப்பீட்டில் 16 மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்துதல் திட்டம்,

(ii) ரூபாய் 4526 கோடி மதிப்பீட்டில் விருதுநகரில் 765 KV துணை மின் நிலையம் மற்றும் ஒட்டப்பிடாரத்தில் 400 KV துணை மின் நிலையம் மற்றும் இணைப்பு மின் பாதைகள் அமைத்தல்,

இப்பெருவழித் திட்ட பகுதியில் தொழில் முனையங்களை அமைப்பதற்காக, மதுரை–திண்டுக்கல்–விருதுநகர்–தேனி, தூத்துக்குடி–திருநெல்வேலி, இராமநாதபுரம், கடலூர்–நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி–புதுக்கோட்டை–சிவகங்கை மற்றும் அரியலூர்–பெரம்பலூர் ஆகிய ஆறு முனையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் மதுரை–திண்டுக்கல்–விருதுநகர்–தேனி மற்றும் தூத்துக்குடி–திருநெல்வேலி

ஆகிய இரண்டு தொழில் முனையங்கள் முதல் கட்டமாக செயல்படுத்தப்படும். இம்முதற்கட்ட திட்டத்திற்கான பெருந்திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பெருவழியில் தூத்துக்குடி, விருதுநகர், தேனி, சிவகங்கை, மணப்பாறை, இராமநாதபுரம் மற்றும் கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் தொழில் பூங்காக்களை சிப்காட் நிறுவனம் சொந்த நிதியில் அமைத்து வருகிறது. இந்த தொழில் முனையங்களில், விருதுநகர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, மணக்குடி (இராமநாதபுரம்) மற்றும் சக்கரக்கோட்டை (இராமநாதபரம்) ஆகிய பகுதிகளில் பெரும்பான்மையான நில எடுப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு, தூத்துக்குடியில் பன்னாட்டு அறைகலன் பூங்கா, விருதுநகரில் பெரும் ஜவுளி பூங்கா, தேனியில் உணவுப் பூங்கா, சிவகங்கையில் பொதுத் தொழில் பூங்கா போன்ற துறை சார்ந்த தொழிற்பூங்காக்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட மேம்பாட்டிற்கு மேலும் நிதியுதவி பெற ஆசிய வளர்ச்சி வங்கியுடன் கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது.

## 3.4 தமிழ்நாட்டில் உருவாகும் வளர் துறைகளுக்கான ஊக்க நிதியம் (TNESSF)

"தமிழ்நாட்டின் தயாரிப்பு" என்ற கருத்தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழக அரசு நீண்ட காலமாக தொழில் துறை நிறுவனங்களுக்கு ஆரம்ப பங்கு முதலீடு வழங்கியும், சேவைகள் புரிந்தும் ஆதரவு அளிக்கின்ற ஒரு கொள்கையை வகுத்து, கடைபிடித்து வருகிறது. இக்கொள்கை நம் தமிழ் நாட்டை பல்வேறு துறைகளில் முதன்மை நிபுணத்துவம் கொண்டு விளங்குவதற்கும், அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளை கொண்டுள்ள முதன்மையாக சிறந்து விளங்கும் மாநிலங்களில் ஒன்றாக இருக்க காரணமாக இருக்கிறது. இப்படி தொழில்களை ஊக்குவிப்பதற்கென ஒரு தொலைநோக்கு அடிப்படையிலான தொழில் கொள்கைகளை தமிழ்நாடு அரசு கொண்டிருக்கும் நிலையில், புதிய துறைகளை ஊக்குவிப்பதற்காக நிதிநுட்பம், உயிரி தொழில்நுட்பம், மின்சார வாகனங்கள், மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு ஆகிய துறைகளுக்கும் தனிப்பட்ட கொள்கைகள் அரசால் வகுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

திறன்மிக்க பணியாளர்கள் பயனடைவதற்கும், புத்தாக்கம், புத்தொழில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடுகள்

ஆகிய துறைகளை ஊக்குவிப்பதற்கும், தமிழ்நாடு அரசு, டிட்கோ மூலமாக தமிழ்நாட்டில் உருவாகும் வளரும் துறைகளுக்கென ஒரு ஊக்க நிதியம் ஒன்றினை தொடங்கியுள்ளது. **இது செபி–ல் பதிவு செய்யப்பட்ட வகையினம் I – மூலதன நிதியம் (Venture Capital Fund)** ஆகும். மேலும், செபி இவ்வாண்டு மார்ச் மாதம் 9 ஆம் தேதி அன்று இதற்கான பதிவு சான்றிதழை வழங்கியிருக்கிறது. இந்நிதியம் "தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தால்" (TNIFMC) நிர்வகிக்கப்படும்.

தமிழ்நாட்டில் உருவாகும் புத்தொழில் நிறுவனங்களில் பங்கு முதலீடு செய்வதற்காக, அரசு 50 கோடி ரூபாய் இந்நிதியத்திற்கு வழங்கும். மீதமுள்ள 450 கோடி ரூபாய் உள்நாடு மற்றும் வெளிநாட்டு முகமைகள், நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட பெரும் முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்படும். பின்வரும் துறைகளும் இந்நிதியத்தில் இடம் பெறுகின்றன:

- வான்வெளி மற்றும் பாதுகாப்பு
- கடல் காற்றின் மூலம் மின்சாரம் தயாரிப்பு
- சோலார் செல் உற்பத்தி
- ஐசி (IC) வடிவமைப்பு மற்றும் செமிகன்டக்டர் புனைவு (பேஃப்ரிகேஷன்)

- தொழில் துறைகளுக்கான ஜவுளிகள் அதாவது மருத்துத் துறைக்கான ஜவுளிகள், பாதுகாப்புத் துறைக்கான ஜவுளிகள், ஆடைகள்
- மருத்துவம் தொடர்பான மருந்து தயாரிப்புகள்
- சிறப்பு தேவைகளுக்கான இயந்திரங்கள், அதாவது ஜவுளிகள் இயந்திரம், வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்தலுக்கான இயந்திரங்கள்
- கட்டுமான – தொழில்துறை அதாவது ப்ரீஃபேப், 3D பிரிண்டட் அமைவிடங்கள் மற்றும் தானியக்க செயல்பாடு மேலாண்மை
- இயந்திரவியல் (Robotics)
- மருத்துவ உபகரணங்கள்

கோயம்புத்தூரில் உள்ள கொடிசியா அமைப்பில் இயங்கும் 14 புத்தொழில் நிறுவனங்களுக்கு "கொடீசியா டிபன்ஸ் இன்னோவேஷன் அண்ட் அடல் இன்குபேஷன் சென்டர்" மூலம் ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்குவதற்கு இவ்வூக்க நிதியம் கொடிசியா அமைப்புடன் இணைந்து செயல்பட தொடங்கியிருக்கிறது. மேலும், இவ்வூக்க நிதியத்தில் முதலீட்டைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் / வரைவுத் திட்டங்களை சமர்ப்பிக்க புத்தொழில்கள் / மூலதன நிதி நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கின்ற விளம்பரங்களை வெளியிடும் பணியில் டிட்கோ தற்போது ஈடுபட்டிருக்கிறது.

### 3.5 தொழில்களுக்கான சூழலமைப்பு நிதியம் (IEF)

தொழில் சூழல் அமைப்புடன் சிறு உட்கட்டமைப்பு திட்டங்களை ஏற்படுத்துவதற்கு உகந்த வகையில் தமிழக அரசு 500 கோடி ரூபாயில் "தொழில்களுக்கான சூழல் அமைப்பு நிதியம்" ஒன்றினை உருவாக்குவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தும் விதமாக முதற்கட்டமாக, 95.84 கோடி ரூபாய் அரசு வழங்கியுள்ளது. இந்நிதியத்திற்கு டிட்கோ மற்றும் சிப்காட் தலா 50 கோடி ரூபாய் வழங்கும். இந்நிதியத்தை நிர்வகிக்கும் முகமையாக செயல்பட டிட்கோ நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்நிதியம் "உயர் அதிகாரக் குழுவினால்" கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்படும். சிப்காட்/ டிட்கோ/வழிகாட்டி ஆகிய நிறுவனங்கள் சார்பில் இந்நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு கோரி வரும் கருத்துருக்கள் டிட்கோவினால் பெறப்படும். இக்கருத்து களை "உயர் அதிகார குழு" பரிசீலினை செய்து, திட்ட செயலாக்க முகமைகளை தேர்வு செய்து, அப்பணிகளுக்கு நிதி வழங்க ஒப்புதல் அளிக்கும். இதுவரை உயர் அதிகாரக் குழுவின் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதில் 7 கருத்துருக்களுக்கு

இந்நிதியத்திலிருந்து 28 கோடி ரூபாய் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 3.6 சூழல் தகவமைப்பிற்கு துறை சார்ந்த நிபுணர்களின் பங்களிப்பு

பல்வேறு தொழில்கள் சார்ந்த துறைகளில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதால், அதற்கேற்ப சூழலமைப்பை தமிழ்நாட்டில் உருவாக்கும் பொருட்டு, டிட்கோ இத்துறை சார்ந்த வல்லுநர்களோடு இணைந்து பணியாற்ற முடிவெடுத்துள்ளது. இதற்கென 6 துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை பின் வருமாறு:

1. மருந்து தயாரிப்பு தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ தொழில்நுட்பம்
2. மின்சாரம் மற்றும் மின்னணுவியல் வன்பொருட்கள், தொழில்நுட்பம், வாகனங்கள் மற்றும் எரிபொருள் தொழில்நுட்பம்.
3. தகவல் தொழில்நுட்பங்களோடு "பிளாக்செயின் மற்றும் இன்டர்னெட் ஆப் திங்ஸ்"
4. வேளாண்மை பொருட்கள் மற்றும் உணவு பதப்படுத்துதல்

5. சரக்கு போக்குவரத்து துறை தொழில் நுட்பம் (லாஜிஸ்டிக்ஸ்)

6. விமான சேவை துறை தொழில் நுட்பம்

மேற்கூறப்பட்ட துறைகளில் பெறக்கூடிய திட்ட கருத்துருக்களை உரிய பரிசீலனை செய்யவும், மதிப்பீடு செய்யவும், வணிக நிபுணர், நிதிசார் நிபுணர் மற்றும் இடர்–வாய்ப்பு நிபுணர் அடங்கிய ஒரு ஆலோசகர் நிறுவனத்தை நியமனம் செய்யும் பணியில், டிட்கோ தற்போது ஈடுபட்டுள்ளது.

## 3.7 சென்னை அருகே புதிய பன்னாட்டு விமான நிலையம்

அதிகரித்து வரும் விமான பயணிகள் போக்குவரத்தை கையாளுவதற்காக, புதிய விமானநிலையம் அமைக்கும் பொருட்டு, டிட்கோ நிறுவனம் மற்றும் இந்திய விமானநிலைய ஆணையமும் இணைந்து தற்போதைய வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம், சென்னை விமானநிலையத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும், விமானப் போக்குவரத்தில் எதிர்கால தேவையென மதிப்பிட்டுள்ளதை எதிர்கொள்வதற்கும், நீண்டகால அடிப்படையில் விமானப் போக்குவரத்து

சேவைகளுக்கான உலகளாவிய தேவையை பூர்த்தி செய்வதற்கும், சென்னை அருகே ஒரு "புதிய பன்னாட்டு விமானநிலையத்தை" நிறுவ மாநில அரசு திட்டமிட்டிருக்கிறது.

இப்புதிய பன்னாட்டு விமான நிலையத்தை உருவாக்குவதற்கு சாத்தியமுள்ள இடங்களை அடையாளம் காணுவதற்கான பணியை அரசு, டிட்கோவிடம் ஒப்படைத்திருக்கிறது. இதன்படி, சாத்தியமுள்ள நான்கு இடங்களை டிட்கோ தேர்வு செய்து, இவ்விடங்களில் சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்ளுமாறு இந்திய விமான நிலைய ஆணையத்தை கேட்டுக்கொண்டது. இந்த நான்கு இடங்களையும் இந்திய விமான நிலைய ஆணைய (AAI) அதிகாரிகளின் குழு பார்வையிட்டு, அதன் சாத்தியகூறு அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையில், பொருத்தமான இடம் இறுதி செய்யப்பட்டு, புதிய விமானநிலையத்தை நிறுவுவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 3.8 தமிழ்நாட்டில் விமான நிலைய விரிவாக்கத் திட்டங்கள்

2007–ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவின்படி புதிய விமான நிலையம் அமைக்கவும், விரிவாக்கம் செய்யவும், நிலங்களை கையகப்படுத்தி, அதை இலவசமாகவும், எந்தவித வில்லங்கமும் இல்லாமல் தமிழ்நாடு அரசால் விமான நிலைய ஆணையத்திற்கு ஒப்படைக்கப்படுகிறது.

தற்போதைய திட்டங்களில், ஒட்டுமொத்த திட்டச் செலவில் நிலத்தின் விலையே பெரும் பங்காக அமைகிறது. இந்திய விமான நிலைய ஆணையம் தற்போது விமானநிலையங்களை தனியார் மயமாக்கி வருகிறது.எனவே, கையகப்படுத்தப்படும் நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு மாநில அரசு இலவசமாக மாற்றும் பட்சத்தில், இந்திய விமான நிலைய ஆணையம் / இந்திய அரசு சொத்துக்களை மூன்றாம் தரப்பினருக்கு மாற்றினால், அதன் மூலம் கிடைக்கும் ஆதாயம் / வருவாயை விகிதாச்சாரப்படி மாநில அரசுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும்,நிலம் கையகப்படுத்துவதற்கு மாநில அரசால் செய்யப்படும் பெரும் முதலீட்டை கருத்தில் கொண்டு உரிய

கட்டத்தில், விமான நிலையத் திட்ட சிறப்பு நோக்க நிறுவனத்தில், நிலங்களின் மதிப்பை மாநில அரசின் பங்குகளாக மாற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் அல்லது தனியாருக்கு சொத்து மாற்றப்படுவதற்கு முன், மாநில அரசின் முதலீட்டிற்கு ஏற்றவாறு வருவாய் பகிர்வு செய்யப்படவேண்டும்எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 3.8.1 சென்னை விமான நிலையம்

சென்னை விமான நிலைய விரிவாக்க திட்டத்திற்காக 64.57 ஏக்கர் பட்டா நிலம் கையகம் செய்யவும் மற்றும் 11.58 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை நில உரிமை மாற்றம் செய்யவும் சென்னை விமான நிலைய ஆணையம் மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளது. இதில், 30.57 ஏக்கர் பட்டா நிலம் ஏப்ரல் 2022 முடியும் முன்னதாக சென்னை விமான நிலையத்திடம் ஒப்படைக்கப்படும். நிலமாற்றம் தொடர்பான பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.மேலும், பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான 16.89 ஏக்கர் நிலத்தை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு நில மாற்றம் செய்ய இணையவழியில் பதிவேற்றம் செய்யப்பட்டு,

ஒன்றியஅரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

### 3.8.2 மதுரை விமான நிலையம்

தென் மாவட்டங்களில் உள்ள முக்கியமான விமான நிலையங்களில் ஒன்றான மதுரை விமான நிலையம், மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறது. அதன் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இந்திய விமான நிலைய ஆணையம் மதுரை விமான நிலையத்தினை விரிவாக்கம் செய்ய முடிவு செய்தது. அதன்படி 462.15 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டு இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 171.01 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில் 84.80 ஏக்கர் ஏற்கனவே நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு விட்டது. மீதமுள்ள 86.21 ஏக்கர் நில உரிமை மாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.8.3 கோயம்புத்தூர் விமான நிலையம்

கோயம்புத்தூர் விமான நிலையத்தில் ஓடுதளம் விரிவாக்கத்திற்காக 612.97 ஏக்கர் பட்டா / புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்தி / நில உரிமை மாற்றம் செய்து மேற்படி நிலங்களை இந்திய விமான நிலைய

ஆணையத்திற்கு வழங்கிட அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து 490.27 ஏக்கர் (461.90 ஏக்கர் பட்டா மற்றும் 28.37 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள்) நிலங்களுக்கு திருத்தப்பட்ட நிருவாக அனுமதி 2017–இல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 28.37 ஏக்கர் புறம்போக்கு நிலம் மற்றும் 3.3 ஏக்கர் பிற துறை சார்ந்த நிலம் போன்றவற்றை நில உரிமை மாற்றம் செய்ய கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.மேலும், 151.77 ஏக்கர் பாதுகாப்புத் துறை சார்ந்த நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு மாற்றம் செய்வதற்கு இணைய வழியில் பதிவேற்றம் செய்யப்பட்ட மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

விமான நிலைய ஓடுதள விரிவாக்க நில எடுப்பு பணியில் நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக மொத்தம் ரூ.1705.69 கோடி தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 31.03.2022 முடிய ரூ.1209.10 கோடி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலங்களை விரைவில் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.8.4 திருச்சிராப்பள்ளி விமான நிலையம்

திருச்சிராப்பள்ளி விமான நிலைய விரிவாக்கத்திற்காக, 294.06 ஏக்கர் பட்டா நிலம், 33.23 ஏக்கர் புறம்போக்கு நிலம் மற்றும் 337.49 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலம் ஆகியவற்றை கையகப்படுத்த அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 58.05 ஏக்கர் பட்டா நிலம் மட்டும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 236.01 ஏக்கர் பட்டா நிலங்களை கையகப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கை பல்வேறு நிலைகளில் உள்ளது.நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சியரின் தொடர் நடவடிக்கையில் உள்ளது.

மேலும், பாதுகாப்புத் துறைக்கு சொந்தமான நிலத்தை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு மாற்றம் செய்வதற்கு இணையவழியில் பதிவேற்றம் செய்யப்பட்டு மத்திய பாதுகாப்புத் அமைச்சகத்தின் ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

### 3.8.5 சேலம் விமான நிலையம்

சேலம் விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேவைப்படும் 535.10 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்தவும், 32.33 ஏக்கர் புறம்போக்கு

நிலங்களை நில உரிமை மாற்றம் செய்யவும் அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. விரிவாக்கத்திற்கு நில எடுப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சியரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.8.6 தூத்துக்குடி விமான நிலையம்

தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக தேவைப்படும் 605.77 ஏக்கர் நிலம்கையகப்படுத்துதல்/ நில உரிமை மாற்றம் செய்தல் போன்றவற்றிற்காக அரசு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான பணிகள் முடிவடைந்து, இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக கூடுதலாக 96.79 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.8.7 வேலூர் விமான நிலையம்

இரண்டாம் உலகப்போரின் போது இருந்த வேலூர் விமான நிலையத்தினை தற்போது விரிவுபடுத்திட

10.72 ஏக்கர் பட்டா மற்றும் 51.57 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை கையகம் / நில உரிமை மாற்றம் செய்திட தமிழக அரசின் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிலஎடுப்பு பணிகள் மற்றும் நில உரிமை மாற்றம் தொடர்பான பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றது. இவ்விமான நிலையத்திற்கு என மாநில நெடுஞ்சாலையை மாற்றியமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

மேற்படி விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கு இடையூறாக உள்ள தடைகளை அகற்ற ரூ.93.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.9 புதிய விமான நிலையங்கள்

#### 3.9.1 நெய்வேலி விமான நிலையம்

நெய்வேலி விமான நிலையத்தில் விமானங்களை இயக்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் தயாராக உள்ளன. விமான போக்குவரத்து இயக்குனரகத்தின் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விமான நிலையத்திலிருந்து விமானங்கள் விரைவில் இயக்கப்படும்.

#### 3.9.2 ஓசூர் விமான நிலையம்

தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதியில் தொழில் துறையில் வளர்ச்சி, அப்பகுதியின் பொருளாதார

வளர்ச்சி, சுற்றுலா, தனி மனித வருவாய் வளர்ச்சி விகிதம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஓசூர் பகுதியில் ஒரு புதிய விமானநிலையத்தை உருவாக்குவதற்கு தமிழ்நாடு அரசு முயற்சி எடுத்து வருகிறது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூர் பகுதி தொழிற்சாலைகளுக்கான மையமாக இருப்பதால், ஓசூரில் ஒரு புதிய விமானநிலையம் அமைப்பதற்கு இப்பகுதியை சுற்றியுள்ள விமான போக்குவரத்து மற்றும் அதன் வளர்ச்சி விகிதம், சந்தை தேவை, ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு சாத்தியகூறு உள்ள இடங்கள் ஆய்வு செய்யுமாறு டிட்கோவை அரசு பணித்துள்ளது. அரசின் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட ஆய்வை மேற்கொள்வதற்கான ஒரு ஆலோசகரை தேர்வு செய்யும் பணியில் டிட்கோ ஈடுபட்டுள்ளது.

### 3.10 டிட்கோ நிதிச்செயல்பாடு

டிட்கோ நிறுவனம், 2020–21 ஆம் நிதி ஆண்டில் 118.35 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டி, அரசுக்கு ஈவு தொகையாக (Dividend) 77.93 கோடி ரூபாய் (65.85%) அளித்துள்ளது. 2021–22ஆம் நிதியாண்டில் 263.90 கோடி ரூபாய் நிகர இலாபம் (தற்காலிகம்) ஈட்டியுள்ளது.




சென்னை தரமணியில் உள்ள டி.எல்.எப். டவுன்டவுனில், ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ் நிறுவனத்தின் மிகப்பெரிய உலகளாவிய வளாகத்துக்கு மாண்மிகு முதலமைச்சர் அவர்கள் **14.03.2022** அன்று அடிக்கல் நாட்டினார்கள்

Blnank Page



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 12.10.2021 அன்று தேசிய நெடுஞ்சாலை லாஜிஸ்டிக்ஸ் மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுகம் மற்றும் டிட்கோ ஆகியவற்றிற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

Blank Page

## 4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக 1949ஆம் ஆண்டில் இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட மாநில அளவிலான முன்னோடி தொழில் மேம்பாட்டு நிதி நிறுவனமாகும். இக்கழகம், தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு தேவையான நிதியுதவி வழங்கி வருகிறது. முக்கியமாக, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு ஊக்கமளிப்பதன் மூலம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கும் வகை செய்கிறது. இக்கழகத்தின் மொத்த நிதி உதவியில் 90 விழுக்காட்டிற்கும் மேலாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும், அதில் 40 விழுக்காடு, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

இக்கழகம், 31.03.2022 வரை 1,29,129 நிறுவனங்களுக்கு 21,231.36 கோடி ரூபாய் அளவிற்கு கடன் அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவினாலும்,

வழிக்காட்டுதலாலும், இக்கழகம் 2003–04 ஆம் ஆண்டிலிருந்து, கடந்த 19 வருடங்களாக தொடர்ந்து நிகர இலாபம் ஈட்டி வருகிறது. 2021–22 ஆம் நிதியாண்டில், 75.00 கோடி ரூபாய் அளவிற்கு நிகர இலாபம் (தற்காலிகம்) ஈட்டியுள்ளது.

TIIC 1.0 என்ற அளவில், கடந்த 72 ஆண்டுகளாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்துள்ளதுடன், இதுவரை 1.29 இலட்சத்திற்க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர்களின் கனவுகளை நனவாக்கியுள்ளது.

தற்போது, இந்நிறுவனம் மாநிலத்தின் வளர்ச்சி ஊக்கியாக தன்னை நிலை நிறுத்தி TIIC 2.0 க்கு சீர்மாற்றம் பெறுவதற்காகவும், தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தொடர்புடைய CII, TANSTIA, Friedrich Naumann Foundation (FNF) மற்றும் NIT – Trichy போன்ற பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்துள்ளது.

தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் பெருவழித்தடத்தில் அமைந்துள்ள சென்னை, ஓசூர், சேலம், கோவை மற்றும் திருச்சி ஆகிய ஐந்து முனையங்களில் உள்ள

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதுகாப்பு துறைக்கான உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், இந்திய பாதுகாப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் (SIDM) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும் இந்நிறுவனங்களுக்கு சிறப்பு மூலப்பொருள்கள் கிடைத்திடும் வகையல் தேசிய சிறு தொழில் நிறுவனம் (NSIC) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் பாதுகாப்புத் துறைக்கான பாகங்கள் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் BHEL சார்பு தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் பாரத மிகுமின் நிறுவனம் (BHEL) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையொப்பமிட்டுள்ளது மற்றும் பாதுகாப்பு துறையில் புத்தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு கோவை மாவட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் சங்கமான CODISSIA–AIM உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் சிறப்பு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. இதன் மூலம் பாதுகாப்பு துறைக்கான உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ ஏதுவாகும்.

மேலும், இக்கழகம் CII மற்றும் சில ஆர்வலர்களுடன் இணைந்து "**தொழில் நிறுவனங்கள்**

எதிர்காலத்திற்கு தயார்படுத்திக் கொள்ளல்" என்ற கருப்பொருளுடன் மண்டல அளவில் இரண்டு தொழில் வளர்ச்சி மாநாடுகளை நடத்தியுள்ளது.

## 4.1 கடன் தொகுப்பு தொகை

இந்நிறுவனத்தின் மொத்த கடன் தொகுப்பு தொகை 31.03.2022 தேதியின்படி 2042.76 (தற்காலிகம்) கோடி ரூபாயாக உள்ளது. இதன் தொழில் வாரியான விவரம் பின்வருமாறு. பொறியியல் –24%, பிளாஸ்டிக்– 15%, உணவு பதப்படுத்துதல்– 13%, காகிதம் மற்றும் காகிதப் பொருட்கள்– 10%, ஜவுளி –9%, மின் இயந்திரங்கள் –7%, மற்றவை –22%.

## 4.2 புதிய நிதி திட்டங்கள்

வாடிக்கையாளர்களின் தொடர் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இக்கழகம், கீழ்க்கண்ட திட்டங்களை 2021–2022ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது:–

### 4.2.1 தொழிற்துறை உள்கட்டமைப்பு முன்னெடுப்பு திட்டம் (Industrial Infrastructure Initiative Scheme)

இத்திட்டத்தின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது தொழில் அபிவிருத்திக்காக, சிட்கோ/சிப்காட் நிறுவனங்களிடமிருந்து தொழிற்கூடங்களுக்கான நிலம் வாங்க கடனுதவி

வழங்கப்படுகிறுது. இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில், 129 அலகுகளுக்கு 91.95 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**4.2.2 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான ரொக்க செலாவணி நிலை உயர்த்தும் திட்டம் (Liquidity Enhancement Support for MSMEs LENS for MSME)**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடன் பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கோவிட்–19 தொற்று நோயின் இரண்டாம் அலையின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவைகளின் நிதி பற்றாக்குறையினை சமாளிக்கும் வகையில் "**ரொக்க செலாவணி (Liquidity) நிலை உயர்த்தும் திட்டம்" (LENS Scheme)** என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அதன்மூலம் அதிகபட்சமாக ஒரு நிறுவனத்திற்கு ரூ.75 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021–22ஆம் ஆண்டில், 566 அலகுகளுக்கு 155.17 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.3 வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Unemployed Youth Employment Generation Programme)

மாநிலத்தில் உள்ள படித்த வேலையற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் வகையில், அவர்களிடையே தொழில் புரியும் ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருட்டு, அரசு இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி இளைஞர்களுக்கு வருமானம் ஈட்ட வழி செய்யும் வகையில் அவர்கள் உற்பத்தி சார்ந்த குறுந்தொழில்கள் தொடங்குவதற்கு இக்கழகம் கடன் வழங்குகிறது.

### 4.2.4 புத்தொழில் நிறுவன திட்டம் (Startups scheme)

புத்தொழில் நிறுவன சூழல் அமைப்பினை ஊக்குவிக்கும் தமிழ்நாடு அரசின் குறிக்கோளுக்கு இணங்க, இந்நிறுவனம் இரண்டு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, ஆரம்ப நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியளிக்க **ப்ரோட்டோ லோன்** என்ற திட்டமும், ஆரம்ப நிலையை கடந்து வணிகரீதியான செயல்பாட்டுக்கு தேவையான, அசையா சொத்துக்கள் மற்றும் நடைமுறை

மூலதனத்திற்கு தேவையான நிதியை வழங்குவதற்காக ப்ரோபெல் லோன் என்ற திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 4.2.5 எளிய நடைமுறை மூலதனத் திட்டத்தின் கீழ் தற்காலிக நடைமுறை மூலதன கடன் வரம்பு திட்டம் (Adhoc Working Capital limit under Flexi Working Capital Term Loan Scheme)

கோவிட் பெரும் தொற்றினால் பாதிப்புக்குள்ளான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை கருத்தில் கொண்டு அவைகளின் உடனடி நிதி தேவையை பூர்த்தி செய்யும் வகையில் "எளிய நடைமுறை மூலதனத் திட்டத்தின் கீழ் தற்காலிக நடைமுறை மூலதனக் கடன் வரம்பு திட்டம்" என்ற சிறப்பு திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தி மூலம், இக்கழகத்தில் ஏற்கனவே கடன் பெற்ற, கடன் பெறாத உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள் நடைமுறை மூலதனம்/ கூடுதல் நடைமுறை மூலதனக் கடன் பெற்று பயனடையலாம். இக்கழகம் இதுவரை 146 நிறுவனங்களுக்கு 85.46 கோடி ரூபாய் கடன் வழங்கி உள்ளது.

## 4.3 நடைமுறையில் உள்ள திட்டங்கள்

தொழில் முனைவோரின் பல்வேறு நிதி தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:–

### 4.3.1 பொது காலக்கடன் (General Term Loan)

இக்கழகம், புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்வதற்கும், நவீனமயமாக்குவதற்கும், உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்கும், இத்திட்டத்தின்கீழ் கடனுதவி வழங்குகிறது.

பொது / தனி நிறுவனங்களுக்கு காலக்கடன் 41 கோடி ரூபாய் வரையிலும், தனி உரிம நிறுவனங்கள் / கூட்டாண்மை நிறுவனங்கள் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டு நிறுவனங்களுக்கு காலக்கடன் 27 கோடி ரூபாய் வரையிலும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021–22ஆம் நிதியாண்டில், 292 தொழில் முனைவோருக்கு 353.87 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.3.2 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme – NEEDS)

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், தொழில் முனைவோருக்கு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம், அதிகபட்சமாக 75 இலட்சம் ரூபாய் வரை மூலதன மானியமாக மாநில அரசு வழங்குகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு 6 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உதவி பெற தொழில் முனைவோரின் சொந்த பங்களிப்பு, சிறப்பு பிரிவினருக்கு, அதாவது மகளிர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கு 5 சதவீதமாகவும், மற்ற பிரிவினருக்கு 10 சதவீதமாகவும் குறைந்த அளவிலான வரம்பு நிர்ணயித்திருப்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டம் தொடங்கப்பட்டது முதல்

31.03.2022 வரை 952 முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு 57.88 கோடி ரூபாய் மூலதன மானியத்துடன், 537.20 கோடி ரூபாய் கடன் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் ஆண்டில், 149 தொழில் முனைவோருக்கு 8 கோடி ரூபாய் மூலதன மானியத்துடன், 118.77 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.3.3 எளிய நடைமுறை மூலதனத் திட்டம் (Flexi Working Capital Term Loan)

உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களின் நடைமுறை / கூடுதல் நடைமுறை மூலதனத் தேவைகளை தொடர்ச்சியாக பூர்த்தி செய்வதை நோக்கமாக கொண்டு இந்த எளிய நடைமுறைக் காலக் கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ஒரு நிறுவனத்திற்கு 4 கோடி ரூபாய் வரை கடனுதவி வழங்கும் வகையில் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், கடன் பெற்ற நிறுவனங்கள், ஒரு வருடத்திற்குப் பிறகு மேற்படி கடனை திருப்பிச் செலுத்தவோ அல்லது புதுப்பிப்பதற்கோ வசதி உள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2021–22ஆம் ஆண்டில், 46 தொழில்

முனைவோருக்கு 34.25 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.3.4 காற்றாலை / சூரிய மின்சக்தி திட்டம் (Wind / Solar Power Project)

தொழில் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான மின்சாரத்தை தாங்களே உற்பத்தி செய்யும் பொருட்டு காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து தங்களது சுய தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விற்பனை செய்வதை ஊக்கமளிப்பதை நோக்கமாக கொண்டு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் நிலமதிப்பிற்கும், காற்றாலை / சூரிய சக்தி சார் மின் உற்பத்தி கருவிகள் வாங்குவதற்கும், காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படுகிறது.

### 4.3.5 இயந்திர நிதியுதவித் திட்டம் (Equipment Finance Scheme)

ஏற்கனவே திறம்பட செயல்பட்டு வரும் நிறுவனங்களுக்கு, மூலதனப் பொருட்கள் மற்றும் இயந்திரம் வாங்குவதற்கு, இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோரின் சொந்த முதலீட்டில் 15 சதவீதம்

கடனுதவியாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021-22ஆம் நிதியாண்டில், 76 நிறுவனங்களுக்கு 101.24 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.3.6 இயந்திர நிதியுதவி திட்டம் – துரித சேவை (Equipment Finance Scheme– Fast Track)

ஏற்கனவே நன்கு செயல்பட்டு கொண்டிருக்கும் நிறுவனங்கள் தங்களது தொழிலை விரிவாக்கம் செய்தல் / பன்முகப்படுத்துதல் / நவீனமயமாக்கம் செய்யத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு, இயந்திரத்தின் விலையில் தொழில் முனைவோரின் பங்களிப்பு 10% என்ற அளவில் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் வைப்புநிதி பிணையமாக ஏற்றுக்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 2021-22ஆம் நிதியாண்டில், 168 நிறுவனங்களுக்கு 99.40 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.3.7 சிறப்பு வாடிக்கையாளர் திட்டம் (Privileged Customer Scheme)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நிதியுதவி பெற்று நடைமுறையில் சிறப்பாக செயல்படும் வாடிக்கையாளர்களுக்கு, அவர்களது அவசர மற்றும் தொழில் ரீதியான தேவைகளை பூர்த்தி செய்யும்

வண்ணம் தொழில் முனைவோரின் சொந்த மூலதனம் இன்றி இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் நிதியாண்டில், 54 நிறுவனங்களுக்கு 22.54 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.3.8 மருத்துவர்கள் திட்டம் (Medical Practitioners Scheme)

தகுதியுள்ள மருத்துவர்களுக்கு மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு, வைப்புநிதியை பிணையமாக வைத்து விரைவாக நிதியுதவி வழங்கிட வேண்டி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்பு முறையே 10 இலட்சம் ரூபாய் மற்றும் 1 கோடி ரூபாய் ஆகும்.

### 4.3.9 பட்டி நிதியுதவித் திட்டம் (Bill Financing Scheme)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக நிறுவனம் மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஆகியவற்றின் வழங்குநர்கள் / ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி நிதியுதவியினை வழங்கும்

பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, இத்திட்டத்தின் கீழ் பிணைய சொத்து ஏதுமின்றி எளிய முறையில் கடன் வழங்கி வருகிறது. 2021-22ஆம் நிதியாண்டில், 101 ஒப்பந்ததாரர்களுக்கு 354.32 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை மெட்ரோ குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் வழங்குநர்கள் / ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி மீதான கடனுதவி வழங்கவும் அந்நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

### 4.4 மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொழில் மேம்பட்டிற்காக அரசு வழங்கும் பல்வேறு மானியங்களுக்கான முகவராக செயல்பட்டு வருகிறது:

#### 4.4.1 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வட்டி மானிய திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திடமிருந்து கடன் பெறும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறும் பொருட்டு 3 % வட்டி மானிய திட்டத்தை, தமிழ்நாடு அரசு 2012ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்

கீழ், இந்நிறுவனம் இதுவரை 4059.27 கோடி ரூபாய் கடன் அனுமதி அளித்துள்ளது. இதற்கான வட்டி மானியமாக மாநில அரசு இதுவரை 138.14 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து 01.04.2019 முதல் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வட்டி மானியத்தை 3 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக உயர்த்தி மாநில அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி 6 சதவீதம் வட்டி மானிய சலுகையின் கீழ் இதுவரை, 1654.52 கோடி ரூபாய் கடன் அனுமதி வழங்கப்பட்டு, இதற்கான வட்டி மானியமாக 33.64 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

### 4.4.2 பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிப்காட் / சிட்கோ தொழிற்பேட்டைகளில் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும், முன்னுரிமை பொருள்கள் உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திர மதிப்பீட்டில் 25 சதவீதம், அதிகபட்சமாக 150 இலட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2021–22ஆம் நிதியாண்டில், 178 பயனாளிகளுக்கு,

மாநில அரசின் மூலதன மானியமாக (State Capital Subsidy) 26.88 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

## 4.5 புதிய கிளை அலுவலகங்கள் திறப்பு

வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான முறையில் சேவையாற்றும் பொருட்டு 01.10.2021 அன்று காரைக்குடியிலும், 11.02.2022 அன்று பூவிருந்தவல்லியிலும் இரண்டு புதிய கிளைகள் திறக்கப்பட்டுள்ளன.

## 4.6 செயல்பாடு

இக்கழகத்தின் 2021–22ஆம் நிதியாண்டின் செயல்பாடுகள் (தற்காலிகம்) குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:–

| விபரம் | சாதனை (Provisional) 2021 – 22 (ரூபாய் கோடியில்) |
|---|---|
| கடன் அனுமதி தொகை | 1,789.43 |
| கடன் வழங்கிய தொகை | 1,509.96 |
| கடன் நிலுவைத் தொகை | 2,042.76 |
| மொத்த வாராகடன் (%) | 1.95 |
| இயக்க இலாபம் (தற்காலிகம்) 31.3.2022 அன்றுள்ளபடி | 105.00 |
| நிகர இலாபம் (தற்காலிகம்) 31.3.2022 அன்றுள்ளபடி | 75.00 |

**ஈவுத்தொகை**

இக்கழகம் 2015-16ஆம் ஆண்டு முதல் ஈவுத்தொகை வழங்கி வருகிறது. கடந்த 2020-21 ஆம் நிதியாண்டின் ஈவுத் தொகையான ரூபாய் 3.03 கோடியினை தமிழ்நாடு அரசிடம் இக்கழகம் வழங்கியுள்ளது.

## 4.7 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளுக்கான இலக்கு

(ரூபாய் கோடியில்)

| வருடம் | கடன் அனுமதி தொகை | வழங்கக்கூடிய தொகை | கடன் தொகுப்பு |
|---|---|---|---|
| 2022-23 | 1,870 | 1,450 | 2,660 |
| 2023-24 | 2,244 | 1,740 | 3,192 |

Blank page




டிக், சிட்கோ மற்றும் தாய்கோ வங்கியுடன் **08.12.2021** அன்று, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

Blank Page

## 5. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு அரசு, கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிப்பதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை, 1979 ஆம் ஆண்டு நிறுவியது. ஆண்டொன்றுக்கு 90,000 டன் காகித உற்பத்தித் திறனுடன், 1985 ஆம் ஆண்டு கரூர் மாவட்டம் புகளூரில் இதன் ஆலை (அலகு–I) துவக்கப்பட்டது. தற்போது ஆலையின் காகித உற்பத்தி திறன், நான்கு கட்டங்களில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகித கூழ் உற்பத்தியும், நாளொன்றுக்கு 250 டன்னிலிருந்து, 1,180 டன் உற்பத்தி திறனுடையதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம், ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் ஆலையை (அலகு–II) 2016 ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவியது. இந்நிறுவனத்தின் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு

6,00,000 டன் ஆகும். இதன் மூலம், இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மூன்றாம் இடம் வகிக்கிறது.

பயனாளர்களின் தேவைகளுக்கேற்ப பல்வகை உயர் ரக காகிதங்கள் மற்றும் அடுக்கு காகித அட்டைகளை இந்நிறுவனம் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம், தனது உற்பத்திப் பொருள்களை, இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் 20 சதவீதத்தை, உலகளவில் சுமார் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம் இந்திய அளவில், அதிக அளவிலான அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதி செய்யும் நிறுவனமாக திகழ்கிறது.

காகித தயாரிப்பின் போது உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்பு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, இந்நிறுவனம் நாளொன்றுக்கு 900 டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவியுள்ளது.

தனது மரக்கூழ் உற்பத்திக்கு தேவைப்படும் கூழ் மரங்களின் சுயதேவையை பூர்த்தி செய்வதற்கு, பண்ணைக் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட காடுகள் வளர்ப்பு திட்டங்களை இந்நிறுவனம் அறிமுகம்

செய்துள்ளது. இந்த திட்டங்களில் கூழ்மர வளர்ப்பினை விவசாயிகளின் பங்கேற்புடன் இந்நிறுவனம் செயல்படுத் வருகிறது. இத்திட்டங்களின் மூலம் 2022 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 31 நாளது வரையில், தமிழகம் முழுவதும், 2,11,280 ஏக்கர் நிலப்பரப்பில் கூழ் மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 40,379 விவசாயிகள் பங்கு பெற்றுள்ளனர்.

இந்நிறுவனம், மின் உற்பத்தியில் தன்னிறைவினைப் பெற்றுள்ளது. ஆலையின் சுய தேவைக்காக, 103.62 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும் மற்றும் 50 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினை அடுக்கு காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது. மேலும், 35.5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப் பின் மீதமுள்ள உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மாநில தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிறுவனத்தில், தமிழக அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழக அரசு சார்ந்த நிறுவனங்கள் 4.06 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி

நிறுவனங்கள், பரஸ்பரநிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் வசம் உள்ளன.

### 5.1 உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு –2021–22ஆம் ஆண்டு

| | | |
|---|---|---|
| காகித உற்பத்தி | : | 3,88,881 டன் |
| பயன்பாட்டளவு | : | 97 சதவீதம் |
| காகித அட்டை உற்பத்தி | : | 1,83,769 டன் |
| பயன்பாட்டளவு | : | 92 சதவீதம் |
| சிமெண்ட் உற்பத்தி | : | 2,93,370 டன் |
| பயன்பாட்டளவு | : | 98 சதவீதம் |

2021–22ஆம் நிதியாண்டு, முதல் காலாண்டில் கோவிட் பெருந்தொற்று நோயினால், உற்பத்தி மற்றும் விற்பனை வெகுவாக பாதிக்கப்பட்டது. இருப்பினும், 2021–22ஆம் நிதியாண்டின், 4வது காலாண்டில், நிறுவனத்தின் செயல்பாட்டில் ஏற்பட்ட நல்ல முன்னேற்றத்தின் காரணமாக காகிதத்தி இருப்பு இல்லை என்ற நிலையையும், காகித அட்டையில் எப்போதும் இல்லாத மிகக் குறைந்த அளவாக 1849 டன் கையிருப்பும் இருந்தது. (முந்தைய 2020–21 நிதியாண்டில் முழுமையடைந்த சரக்கின் கையிருப்பு 2351 டன்). 2021–22 ஆம் நிதியாண்டில் 4,38,011 டன்

காகிதமும், 1,84,250 டன் காகித அட்டையும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 5.2 விற்று முதல் இலாபம்

2021–22 ஆம் நிதி ஆண்டின் மொத்த வருவாய் 3,530 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரிக்கு முன் இலாபம் 2.78 கோடி ரூபாயாகவும், வரிக்கு பின் இலாபம் 1.85 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோவிட் பெருந்தொற்று நோயினால் இந்நிறுவனத்தின் இலாபம் வெகுவாக பாதிக்கப்பட்டது.

## 5.3 ஈவுத்தொகை

இந்நிறுவனம் 2020–21ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகையாக, 30 விழுக்காடு, அதன் பங்குதாரர்களுக்கு வழங்கியுள்ளது. இதன்படி, இந்நிறுவனம், 2020–21ஆம் ஆண்டு ஈவுத் தொகையாக தமிழ்நாடு அரசுக்கு 7.33 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

## 5.4 ஏற்றுமதி

2021–22ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 1,44,000 டன் காகிதத்தை ஏற்றுமதி செய்துள்ளது. இதுவே 2021–22ஆம் ஆண்டில், இந்தியாவில் காகித

நிறுவனத்தின் அதிகபட்ச காகித ஏற்றுமதியாகும். மேலும், இந்நிறுவனம் 2021-22 ஆம் ஆண்டில் 21,599 டன் காகித அட்டைகளை ஏற்றுமதி செய்துள்ளது.

**5.5 வேலை வாய்ப்பு**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுமார் 2,440 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும், ஏறத்தாழ 3,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் அளித்து வருகிறது.

**5.6 திட்டங்கள்**

**5.6.1 நிறுவனத்தின் இரண்டாம் அலகு – ஆலை விரிவாக்கத் திட்டம்**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அலகு-II ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, ஆலை விரிவாக்க திட்டத்தை 2520 கோடி ரூபாய் மூலதன முதலீட்டில் இரண்டு கட்டங்களாக செயல்படுத்த திட்டமிட்டது. முதல் கட்டமாக 1,250 கோடி ரூபாய் முதலீட்டில், நாள் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரசாயன மீட்பு முறையுடன் மரக்கூழ் தயாரிக்கும் ஆலை மற்றும் 20 மெகா வாட் திறன் கொண்ட மின்னாக்கி பிரிவு ஆகியவைகளுக்கு. இயந்திரங்கள் நிறுவும் பணிகள்

நிறைவுப் பெற்றுள்ளது. மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவு ஆகியவைகள் நிறுவப்பட்டு, உற்பத்திக்கான சோதனை முறையில் உற்பத்தி, நடைபெற்று வருகின்றது.

1270 கோடி ரூபாய் முதலீட்டில், புதிய காகித அட்டை தயாரிக்கும் இயந்திரம் / புதிய காகிதம் தயாரிக்கும் இயந்திரம் நிறுவும் திட்டம், இரண்டாம் கட்ட விரிவாக்கத் திட்டமாக செயல்படுத்தப்படும். முதல் கட்ட விரிவாக்க உற்பத்தி ஓட்டம் முழுமையாய் நிலைபடுத்தப்பட்ட பின் மற்றும் நிதி இறுதியாக்கம் செய்யப்பட்ட பின், இரண்டாம் கட்ட விரிவாக்க திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம், சுமார் 2000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

### 5.6.2 மணப்பாறை வட்டம், சித்தாநத்தம் ஊராட்சியில் ஒரு ஆரம்ப பள்ளியை நிறுவுதல்

இந்நிறுவனம், ஆலை–2–ன் அருகில் முன்மாதிரி ஆரம்பப் பள்ளியை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், சித்தாநத்தம் ஊராட்சியில் 3.7 கோடி ரூபாய் மூலதன செலவில் நிறுவ திட்டமிட்டுள்ளது. இந்தப் பள்ளியில் சுமார் 300 மாணவர்களுக்கு எல்.கே.ஜி முதல் 5ஆம் வகுப்பு

வரை கல்வி கற்பிக்க 14 வகுப்பறைகள் அமைக்கப்படும். இத்திட்டத்தின், முதல் கட்டமாக கட்டட (Civil) கட்டுமானப்பணிகள் மற்றும் மின்சாரப் பணிகள் (electrical works) நடைபெற்று வருகின்றன.

## 5.7 நிறுவன சமூகப் பொறுப்பு

நிறுவன சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக, சுகாதார முகாம்கள், கல்வி, தொழிற்கல்வி, பயிற்சி நிகழ்ச்சிகள், ஆலைக்கு அருகில் உள்ள பகுதிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல் போன்ற சமுதாய நலப் பணிகளை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்நிறுவனம் முந்தைய 3 நிதியாண்டுகளின் சராசரி நிகர இலாபத்தில், 2 சதவீத இலாபத் தொகையினை நிறுவன சமூகப் பொறுப்புப் பணிகளுக்காக செலவழித்து வருகிறது. இந்நிறுவனம் 2021–22ஆம் ஆண்டில் நிறுவன சமூகப் பொறுப்புப் பணிகளுக்காக 3.07 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

நிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரூரில் உள்ள கொரோனா சிகிச்சை மையத்திற்கு சுமார் 150 இலட்சம் ரூபாய் செலவளித்துள்ளது.

## 5.8 விருதுகள்

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் புதுமையான நிறுவன சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளில், கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பிரிவில் "8–வது CSR இந்திய விருது 2021" என்ற தேசிய விருதை, புதுடெல்லி, திருவாளர் க்ரீன்டெக் பவுண்டேஷன் நவம்பர் 2021–ல், வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, "திறன்மிகு தொழில் நிறுவனத்திற்கான விருது 2021" என்ற விருதை கொல்கத்தா, இந்திய பொறியாளர்கள் நிறுவனம், டிசம்பர் 2021–ல் வழங்கியுள்ளது.

Blank



திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அலகு–II ல் உள்ள காகித அட்டை ஆலையின் வான்வழி காட்சி

Blank Page

## 6. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த சிமெண்டின் பயன்பாடு இன்றியமையாதது என்பதால் நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு சிமெண்ட் உற்பத்தி துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை கருத்தில் கொண்டு, சந்தையில் போட்டித் திறனுடன் தனது இருப்பை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு, சிமெண்ட் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்வதற்காக, 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாளன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு (டிட்கோ) முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) நிறுவப்பட்டது. 1994 முதல் இந்நிறுவனம் தனி பொதுத்துறை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. 21 பெரிய சிமெண்ட் ஆலைகள் தனியார் துறையின் மூலமும், 4 சிமெண்ட் ஆலைகள் பொதுத்துறை நிறுவனங்கள் மூலமும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 50 மில்லியன் மெ.டன் உற்பத்தி அளவுடன் இந்தியாவில் அதிக சிமெண்ட் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் ஐந்தாவது மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. 1969 ஆம் ஆண்டு ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நிறுவியதன் மூலம்

இந்தியாவில் அரசுத் துறையின் கீழ் சிமெண்ட் உற்பத்தி செய்யும் முதல் மாநிலமாக விளங்குவதில் தமிழ்நாடு பெருமை கொள்கிறது. மேலும், 1979 ஆம் ஆண்டு உலர்பத தொழில்நுட்பத்தில் அரியலூரில் ஆண்டொன்றிற்கு 5 இலட்சம் மெ.டன் உற்பத்தி அளவுடன் கூடிய மற்றொரு சிமெண்ட் ஆலை அமைக்கப்பட்டது.

டான்செம் நிறுவனம் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட மற்றொரு அதி நவீன சிமெண்ட் ஆலையை அரியலூரில் நிறுவி, 2019 ஆம் ஆண்டில் உற்பத்தியினை தொடங்கியது. இதன் காரணமாக, டான்செம் நிறுவனத்தின் மொத்த உற்பத்தி அளவு, ஆண்டு ஒன்றுக்கு 17 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும், வெளிசந்தையில் டான்செம் நிறுவனத்தின் பங்கு சுமார் 8 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. முன்னதாக டான்செம் நிறுவனமானது, பிரதானமாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கும் பிற மத்திய அரசுத்துறைகளுக்கும் மாநில அரசுகளினால், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு, அரசு நிர்ணயித்த குறைந்த விலையில் சிமெண்ட் வழங்கி வந்தது. தற்போது,

டான்செம் நிறுவனமானது வெளிச்சந்தையிலும், தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களின் விலையைவிட குறைவான விலையில் சிமெண்ட் விற்பனை செய்து வருகிறது. இதன்மூலம், வெளிச்சந்தையில் சிமெண்ட் விலையை கட்டுபடுத்துவதில் முக்கிய கருவியாக டான்செம் நிறுவனம் விளங்குகிறது.

## 6.1 டான்செம் நிறுவனத்தின் செயல்திட்டங்கள்

டான்செம் நிறுவனம், ஆண்டு ஒன்றிற்கு மொத்தம் 17 இலட்சம் மெ.டன் சிமெண்ட் அரவை உற்பத்தி திறன் கொண்ட கீழ்கண்ட மூன்று ஆலைகளை கொண்டுள்ளது:

(1) அரியலூர் சிமெண்ட் ஆலை – அலகு–1, அரியலூர் மாவட்டம்– 5 இலட்சம் மெ.டன்

(2) அரியலூர் சிமெண்ட் ஆலை – அலகு–2, அரியலூர் மாவட்டம்– 10 இலட்சம் மெ.டன்

(3) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை – விருதுநகர் மாவட்டம்– 2 இலட்சம் மெ.டன்

பின்தங்கிய மாவட்டங்களான, அரியலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் டான்செம் நிறுவனத்தின் ஆலைகள் அமைந்துள்ளதால், டான்செம் நிறுவனம், அப்பகுதி மக்களுக்கு குறிப்பிடத்தக்க அளவில்

வேலைவாய்ப்புகளை வழங்கி வருகிறது. தற்போது டான்செம் நிறுவனம் 1400 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 3000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் வழங்கி வருகிறது.

### 6.2 அரியலூர் சிமெண்ட் ஆலை – அலகு – 1 (பழைய ஆலை)

அரியலூர் சிமெண்ட் ஆலை (அலகு–1), 4 நிலை ப்ரி–ஹீட்டர் (pre–heater) கிளிங்கர் சூளை உலர்பத தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் மிகப்பழமையான காரணத்தினாலும், அதிக உற்பத்தி செலவினங்களினாலும் ஆலையில் இரண்டு கிளிங்கர் சூளைகளின் இயக்கம் 2021 ஜனவரி முதல் நிறுத்தப்பட்டுள்ளது. எனினும், புதிய ஆலையிலிருந்து கிளிங்கர் கொண்டு செல்லப்பட்டு, சிமெண்ட் அரவை ஆலையாக இது செயல்பட்டு வருகிறது.

### 6.3 அரியலூர் சிமெண்ட் ஆலை – அலகு – 2 (புதிய ஆலை)

அரியலூர் சிமெண்ட் ஆலையின் புதிய சிமெண்ட் ஆலை (அலகு–2), நவீன தொழில் நுட்பத்தில் 5 நிலை ப்ரி–கால்சைனர் (pre–calciner) தொழில்நுட்பத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்த புதிய

ஆலையில் கிளிங்கர் உற்பத்தி 01.11.2019 அன்று தொடங்கப்பட்டு, வர்த்தகரீதியிலான சிமெண்ட் உற்பத்தி 21.03.2020 அன்று துவக்கப்பட்டது.

### 6.4 ஆலங்குளம் சிமெண்ட் ஆலை

இயந்திரங்கள் மிகப்பழமையான காரணத்தினாலும், உற்பத்தி செலவினம் அதிகரித்துள்ளதாலும் குறிப்பாக சுரங்கப்பணிகளுக்கு மிக அதிக அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், இந்த ஆலையின் கிளிங்கர் சூளை இயக்கம் 2017 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், அரியலூர் சிமெண்ட் ஆலையிலிருந்து கிளிங்கர் பெற்று, ஆலங்குளம் சிமெண்ட் ஆலை தற்போது சிமெண்ட் அரவை ஆலையாக இயங்கி வருகிறது.

### 6.5 தயாரிப்புகள்

டான்செம் நிறுவனம் தனது முக்கிய தயாரிப்புகளான, போர்ட்லாண்ட் போசலானா சிமெண்ட் (PPC) மற்றும் சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்ட் (OPC) போன்றவற்றை "அரசு" என்ற வணிக முத்திரையுடன் விற்பனை செய்து கொண்டிருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.11.2021 அன்று "வலிமை" என்ற வணிக முத்திரையின்கீழ் தயாரிக்கப்பட்ட மலிவு விலையில்

உயர் ரக சிமெண்டினை அறிமுகப்படுத்தியபின், டான்செம் நிறுவனம் தற்போது, வெளிச்சந்தையில் "அரசு" மற்றும் **"வலிமை"** என்ற இரண்டு வணிக பெயர்களில் சிமெண்டினை விற்பனை செய்து வருகிறது. 16.11.2021 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட "வலிமை" சிமெண்டானது, 31.03.2022 வரை 39,239 மெட்ரிக் டன் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**6.6 சுரங்கப்பணிகள்**

சிமெண்ட் உற்பத்திக்கு தேவையான சுண்ணாம்புக்கல் டான்செம் நிறுவனத்தின் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. மேலும், 1,300 ஹெக்டேர் பரப்பளவுள்ள சுரங்கங்களிலிருந்து சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்க சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு மூலம் பெறப்பட்ட குத்தகை உரிமையின்படி கல்லங்குறிச்சி சுண்ணாம்புக்கல் சுரங்கத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 13.40 இலட்சம் மெ.டன் சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்க சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும், ஆனந்தவாடி சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் தற்போதைய உற்பத்தி

ஆண்டொன்றுக்கு 2.6 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவினை, ஆண்டொன்றுக்கு 15 இலட்சம் மெட்ரிக் டன் என்று உயர்த்தவும் சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

## 6.7 சாதனைகள்

- ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, 2020–21–ஆம் நிதியாண்டில் 1.65 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் உற்பத்தி செய்து, 1.60 இலட்சம் மெ.டன் விற்பனை செய்ததன் மூலம் 9.09 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டியது. 2021–22 நிதியாண்டில், ஆலையின் சிறப்பான செயல்பாட்டினால் 2.76 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்து, 2.80 இலட்சம் மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்ததன் மூலம் 16.19 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 2021–22ஆம் ஆண்டில் இந்த ஆலை ஈட்டிய நிகர இலாபமானது, ஆலை தொடங்கப்பட்டதிலிருந்து, எந்த ஒரு நிதியாண்டிலும் இல்லாத அளவுக்கு ஈட்டிய அதிகபட்ச இலாபம் ஆகும்.

- அரியலூர் சிமெண்ட் ஆலையின் பழைய ஆலை, 2020–21–ஆம் நிதியாண்டில் 3.52 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்து, 3.51 இலட்சம் மெ.டன் விற்பனை செய்து, 3.02 கோடி ரூபாய் நட்டத்தை சந்தித்தது. எனினும், ஆலையின் சிறப்பான செயல்பாட்டினால், 2021–22ஆம் நிதியாண்டில், 4.69 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்து, 4.72 இலட்சம் மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்ததன் மூலம் 36.32 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. இது, கடந்த 2020–21ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, 2021–22ஆம் ஆண்டில் இந்த ஆலை நட்டத்திலிருந்து மீண்டு, ஆலை தொடங்கப்பட்டதிலிருந்து எந்த ஒரு நிதியாண்டிலும் இல்லாத அளவுக்கு ஈட்டிய அதிகபட்ச இலாபம் ஆகும்.

- அரியலூர் சிமெண்ட் ஆலையின் புதிய ஆலை கடந்த 2020–21ஆம் ஆண்டில் 57.30 கோடி ரூபாய் நட்டம் அடைந்திருந்ததை ஒப்பிடும்போது, 2021–22ஆம் நிதியாண்டில், 7.30 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்து,

7.33 இலட்சம் மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்ததன் மூலம், 75.33 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

- டான்செம், 2020–21ஆம் ஆண்டு 4.71 இலட்சம் மெ.டன் சிமெண்ட் திறந்த வெளிச்சந்தையில் விற்பனை செய்துள்ளது. ஆனால், 2021–22–ஆம் நிதியாண்டில் 12.23 இலட்சம் மெ.டன் சிமெண்டினை வெளிசந்தையில் விற்பனை செய்துள்ளது. கடந்த 2020–21ஆம் நிதியாண்டை ஒப்பிடும்போது 2021–22ஆம் நிதியாண்டில் டான்செம் நிறுவனத்தின் வெளிச்சந்தை விற்பனை 160 விழுக்காடு அதிகரித்துள்ளது. இதனால் 2020–21–ஆம் ஆண்டில் சிமெண்ட் சந்தையில் டான்செம் நிறுவனத்தின் பங்கு 3 விழுக்காடு என்ற அளவிலிருந்து 2021–22ஆம் ஆண்டில் 8 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

- கடந்த 2020–21ஆம் நிதியாண்டில், டான்செம் நிறுவனம் 53.05 கோடி ரூபாய் நட்டத்தை சந்தித்தது. எனினும் 2021–22ஆம் நிதியாண்டில், நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டினால்

126.18 கோடி ரூபாய் நிகர இலாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

- கடந்த 2021–22–ஆம் நிதியாண்டில், டான்செம் நிறுவனம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு 2.7 இலட்சம் மெ.டன் சிமெண்ட் வழங்கியது. எனினும் வரும் 2022–23 ஆம் நிதியாண்டில் மாநில அரசால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் மூலம் செயல்படுத்தப்படவுள்ள **அண்ணா மறுமலர்ச்சி திட்டம்** மற்றும் **கலைஞர் வீடு வழங்கும் திட்டம்** உள்ளிட்ட பல்வேறு வீட்டு வசதி திட்டங்களுக்கு, குறைந்தபட்சம் 6 இலட்சம் மெ.டன் சிமெண்ட் வழங்க டான்செம் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மேலும், 2023–24 ஆம் நிதியாண்டில், டான்செம் நிறுவனம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு குறைந்தபட்சம் 8 இலட்சம் மெ.டன் சிமெண்ட் வழங்க உத்தேசித்துள்ளது.

## 6.8 2022–23 மற்றும் 2023–2024ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்

2022–23 மற்றும் 2023–24–ஆம் நிதி ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனை குறியீடுகளின் விபரம் கீழ்வருமாறு:

(மெட்ரிக் டன் இலட்சத்தில்)

| விபரம் | 2022–23 | | 2023–24 | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| கிளிங்கர் | 13.66 | – | 15.00 | – |
| சிமெண்ட் | 20.68 | 20.68 | 22.68 | 22.68 |

- கரியமில வாயுவின் வெளியீட்டை குறைத்து சுற்றுச்சூழல் மாசுபடுவதை குறைக்கும் பொருட்டு, டான்செம் நிறுவனம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்தி பசுமை மின் திட்டங்களை நிறுவி, அதன்மூலம் டான்செம் ஆலைகளின் மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக, ஆலங்குளம் சிமெண்ட் ஆலை வளாகத்தில் 65 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 10 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின்சக்தி ஆலை (Solar Power Plant) ஒன்றை நிறுவ உத்தேசித்துள்ளது.

- டான்செம் நிறுவனம், அரியலூர் புதிய ஆலையில் 30 கோடி ரூபாய் செலவில் மாற்று எரிபொருள் எரிவூட்டும் அமைப்பை (Alternate Fuel Feeding System) நிறுவ திட்டமிட்டுள்ளது.

## 6.9 2021–2022 ஆம் ஆண்டிற்கான செயல்பாடுகள்

2019–2020 ஆம் ஆண்டில் 31.26 கோடி ரூபாய் நட்டமும், 2020–2021–ஆம் ஆண்டில் 53.05 கோடி ரூபாய் நட்டமும் அடைந்திருந்த டான்செம் நிறுவனம், 2021–2022ஆம் ஆண்டில் 14.75 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் உற்பத்தி செய்து, 14.85 மெட்ரிக் டன் சிமெண்ட் விற்பனை செய்துள்ளதன் மூலம் 126 கோடி ரூபாய் (தோராயமாக) நிகர லாபம் ஈட்டியுள்ளது.

## 2020–21 மற்றும் 2021–22ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் நிதிச் செயல்திறன்

| ஆலையின் பெயர் | 2020– 21 | | | 2021 – 22 (தோராயமாக) | | |
|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தி (மெ.டன்) | விற்பனை (மெ.டன்) | நிகர இலாபம்/ நட்டம் (ரூ. இலட்சம்) | உற்பத்தி (மெ.டன்) | விற்பனை (மெ.டன்) | நிகர இலாபம்/ நட்டம் (ரூ. இலட்சம்) |
| அரியலூர் சிமெண்ட் ஆலை – பழைய ஆலை | 3,51,544 | 3,51,122 | –302.03 | 4,69,230 | 4,71,969 | 3,631.66 |
| அரியலூர் சிமெண்ட் ஆலை – புதிய ஆலை | 2,97,799 | 2,96,506 | –5,730.37 | 7,29,997 | 7,32,896 | 7,533.29 |
| ஆலங்குளம் சிமெண்ட் ஆலை | 1,64,520 | 1,60,290 | 909.06 | 2,76,100 | 2,79,826 | 1,619.14 |
| ஆலங்குளம் கல்நார் தகடு ஆலை | – | 29 | –10.21 | – | – | -9.27 |
| விருத்தாசலம் கற்குழாய் ஆலை | – | 2 | –38.32 | – | 0.24 | -35.29 |
| நியாய விலை சிமெண்ட் வழங்கும் திட்டம் | 2,30,046 | 2,34,094 | –133.12 | 2,55,414 | 2,55,586 | –121.45 |
| மொத்தம் | | | –5,304.99 | | | 12,618.08 |




புதிய ரக உயர்தர வலிமை சிமெண்டை **16.11.2021** அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்

Blank Page

## 7. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

இந்திய அளவில் உப்பு உற்பத்தியில் இரண்டாவது மிகப்பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இந்தியாவில் ஆண்டொன்றுக்கு சுமார் 300 இலட்சம் மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த உப்பு உற்பத்தியில் சுமார் 8 விழுக்காடு, அதாவது 24 இலட்சம் மெட்ரிக் டன் உப்பு, தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் மட்டுமே, இந்திய அளவில் மாநில அரசுக்கு சொந்தமான உப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனமாகும்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், 1974 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இந்நிறுவனம் உப்பு மற்றும் உப்பின் உடன் விளை பொருட்களை உற்பத்தி செய்து, நியாயமான விலையில் விற்பனை செய்யவும், வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கிலும் துவக்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த 5,236 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு, தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. அதனை தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர்

வட்டத்தில் 3,010 ஏக்கர் நிலத்தை நீண்ட கால குத்தகைக்கு தமிழ்நாடு அரசு வழங்கியது.

இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டு முதல், இராமநாதபுரம் மாவட்டத்தில் வணிக அடிப்படையில் உப்பு உற்பத்தியினைத் துவக்கியது. இதில் தொழிலக தரமுடைய உப்பு, அயோடின் உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு ஆகியவை அடங்கும். இத்திட்டம் 1,250 நபர்களுக்கு நேரடியாகவும், 300 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது. இதனைச் சுற்றியுள்ள 15 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

**7.1 உற்பத்தி நடவடிக்கை**

**7.1.1 தொழிலக தரமுடைய உப்பு**

**(அ) மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகம், இராமநாதபுரம் மாவட்டம்**

மாரியூர் – வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 1.75 லட்சம் மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், 2021–22ஆம் ஆண்டு ஏற்பட்ட தொடர்ச்சியான மற்றும் பருவம் தவறிய மழையினால் மொத்தம்

71,600 மெட்ரிக் டன் அளவிற்கு மட்டுமே உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. எனினும், 2022–23ஆம் ஆண்டில் இந்த வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் 2.30 இலட்சம் மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**(ஆ) திருப்போரூர் உப்பு உற்பத்தி, செங்கல்பட்டு மாவட்டம்**

முதற்கட்டமாக 500 ஏக்கரில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் உப்பளம் அமைத்து வருகின்றது. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் உப்பு உற்பத்தியினை துவங்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் 2022–23ஆம் ஆண்டு 10,000 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மனித உழைப்புக்கு பதிலாக ஒரு பகுதியில் இயந்திரங்களைக் கொண்டு உப்பு அறுவடை செய்யும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது.

### 7.1.2 செறிவூட்டப்பட்ட உப்பு

மாரியூர்–வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் செறிவூட்டப்பட்ட உணவு உப்பு வகைகளான அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவை உற்பத்தி

செய்யப்படுகின்றது. இதில் பெருமளவு, பொது விநியோக திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆண்டு மொத்த உற்பத்தியில் சுமார் 30 விழுக்காடு உப்பு, பொது விநியோக திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. அதன்படி, 2021–22ஆம் ஆண்டில் 14,236 மெட்ரிக் டன் உப்பு, பொது விநியோக திட்டம் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இரும்பு மற்றும் அயோடின் கலந்த இருவித செறிவூட்டப்பட்ட உப்பு, மதிய உணவு திட்டத்திற்கும், அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்படுகின்றது.

### 7.1.3 இயந்திரம் மூலம் உப்பு உற்பத்தி

தொழிலாளர் பற்றாக்குறையை சமாளித்திடவும், உப்பு உற்பத்தியை பெருக்கவும், இயந்திரங்களைக் கொண்டு பகுதி உப்பு அறுவடை செய்யும் முறை 2020–21ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக 30 ஏக்கரில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2021–22ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, மேலும் 80 ஏக்கரில் இயந்திரங்களைக் கொண்டு பகுதி உப்பு அறுவடை செய்யும் பணி வாலிநோக்கம் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த

முறைப்படி வாலிநோக்கத்தில் 20,000 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதே போல திருப்போரூர் உப்பு திட்டத்தில், இவ்வாண்டு 10,000 மெட்ரிக் டன் உப்பு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.1.4 உப்பு சுத்திகரிப்பு நிலையம்

சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்திட, டாடா அறக்கட்டளையின் நிறுவன சமூக பொறுப்புத் திட்ட நிதியுதவியுடன், மணிக்கு 7 மெட்ரிக் டன், திறன் கொண்ட உப்பு சுத்திகரிப்பு நிலையத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனம் அமைத்துள்ளது. 2021–22–ஆம் ஆண்டில் இச்சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் 12,943 மெட்ரிக் டன் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த உப்பு மற்றும் 329 மெட்ரிக் டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு, மாதம் ஒன்றுக்கு 4,000 மெட்ரிக் டன் அளவிற்கு உப்பு உற்பத்தியை உயர்த்திட செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.1.5 புரோமின் உற்பத்தி

உப்பு உற்பத்தி செய்த பின் வெளியேற்றப்படும் கழிவு நீரிலிருந்து திரவ புரோமின் உற்பத்தி செய்யப்படுகின்றது. உப்பு உற்பத்தி வளாகங்களிலிருந்து வெளியேற்றப்படும் பிட்டனிலிருந்து (Bittern) புரோமின் உற்பத்தி செய்ய தூத்துக்குடி, சௌத் இந்தியா புரோமின் மற்றும் அல்லைய்டு கெமிக்கல் என்ற நிறுவனத்துடன் தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதன்படி ஆண்டிற்கு 90,000 கியூபிக் மீட்டர் பிட்டன், சிபாக் நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் தமிழ்நாடு உப்பு நிறுவனம் 10 இலட்சம் ரூபாய் முதல் 15 இலட்சம் ரூபாய் வரை வருவாய் ஈட்டி வருகின்றது.

### 7.1.6 தரச்சான்றிதழ்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை IS 7224: 2006 மற்றும் IS 16232: 2014 ஆகிய தரத்தின்படி உற்பத்தி செய்ய தரச்சான்றிதழ் பெற்றுள்ளது. அதே போல அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்திட இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) உரிமத்தையும் பெற்றுள்ளது.

மேலும், ISO 9001:2015 தரச்சான்று பெற்ற நிறுவனமாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் விளங்குகின்றது.

## 7.2 விற்பனை நடவடிக்கை

| வ. எண் | விவரம் | விற்பனை (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1 | தொழிலக தரமுடைய உப்பு | 31,310 |
| 2 | அயோடின் கலந்த கல் உப்பு | 10,341 |
| 3 | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு | 3,895 |
| 4 | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலக்காத தூள் உப்பு | 9,048 |
| 5 | இருவித செறிவூட்டப்பட்ட உப்பு | 329 |

இதன் மூலம் தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2021–22ஆம் நிதியாண்டில் 19.64 கோடி ரூபாய் விற்றுமுதல் செய்துள்ளது.

## 7.3 தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் மற்றும் அடிப்படை வசதிகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், செயல்படுத்தி வரும் தொழிலாளர்களுக்கான நலத்திட்டம் மற்றும்

அடிப்படை வசதிகளின் விவரம் பின்வருமாறு:–

(i) அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஊதியம்.
(ii) சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய நன்மைகளான ஊதியத்துடன் கூடிய விடுப்பு, பணிக்கொடை, ஊழியர் வருங்கால வைப்பு நிதி போன்றவை.
(iii) பணிக்காலத்தில் தொழிலாளர்கள் எதிர்பாராமல் மரணமடைந்தால், அன்னாரின் வாரிசுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக 1 இலட்சம் ரூபாய்.
(iv) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள்.
(v) தொழிலாளர் பாதுகாப்பிற்காக கருப்பு நிற மூக்குக்கண்ணாடிகள், காலணிகள் மற்றும் மேல்துண்டு.
(vi) குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவ முகாம்கள்.

## 7.4 தமிழ்நாடு உப்பு நிறுவனம் – மாநில அளவிலான ஒருங்கிணைப்பு அமைப்பு

தமிழ்நாட்டில் 9 கடலோர மாவட்டங்களில் உப்பு உற்பத்தி நடைபெறுகின்றது. மாநிலத்தில் சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவில் என 4,100 க்கும் மேற்பட்ட உப்பு உற்பத்தியாளர்கள் இதில்

ஈடுபட்டுள்ளனர். மாநிலத்தில் 48,000 ஏக்கருக்கும் அதிகமான அரசு மற்றும் தனியார் நிலங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. உப்புத் தொழிற்சாலைகளுடன் கலந்தாலோசிக்கவும், உப்பு உற்பத்தி தொடர்பான பிரச்சனைகளை கவனித்திடவும் உப்புத் தொழிலில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முகமையாக தமிழ்நாடு உப்பு நிறுவனத்தினைத் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

## 7.5 2022–23 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

### (i) உற்பத்தி

(அ) வாலிநோக்கம் திட்டம்– 2,30,000 மெட்ரிக் டன்

(ஆ) திருப்போரூர் திட்டம்– 10,000 மெட்ரிக் டன்

### (ii) விற்பனை

| வ. எண் | விவரம் | விற்பனை (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1 | தொழிலக தரமுடைய உப்பு | 1,88,000 |
| 2 | அயோடின் கலந்த கல் உப்பு | 28,000 |
| 3 | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு | 12,000 |
| 4 | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலக்காத தூள் உப்பு | 9,600 |
| 5 | இருவித செறிவூட்டப்பட்ட உப்பு | 2,400 |
| | **மொத்தம்** | **2,40,000** |

2022 – 2023 ஆம் நிதியாண்டில் 60 கோடி ரூபாய் விற்று முதல் எய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.6 2021–22ஆம் ஆண்டிற்கான நிதிநிலை செயல்பாடுகள்

| வ. எண் | விவரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **வரவு** | |
| 1 | இயக்க பணி மூலம் கிடைத்த வருவாய் | 1,964.03 |
| 2 | இதர வருவாய் | 51.07 |
| 3 | உப்பு மற்றும் பண்டகசாலை இருப்பு மதிப்பு | 293.29 |
| | மொத்தம் | 2,308.39 |
| | **செலவு** | |
| | இயக்க பணிக்கான செலவுகள் | 2,290.92 |
| | செயல்பாட்டு லாபம் | 17.47 |
| | தேய்மானம் | 137.56 |
| | வட்டி | 15.71 |
| | நிகர இலாபம் / நட்டம் | (–) 135.80 |



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் உள்ள தமிழ்நாடு உப்பு நிறுவன வளாகத்தின் வான்வழி தோற்றம்

Blank Page



இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் உள்ள தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பு சுத்திகரிப்பு ஆலை

213

Blank Page



இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்தில் உள்ள தமிழ்நாடு உப்பு நிறுவன வளாகத்தின் வான்வழி தோற்றம்

215

Blank Page

## முடிவுரை

தாராளமயமாக்கல் நிகழும் வரை, தொழிலகங்களுடன் ஈடுபடுவதில் அரசு ஒழுங்குபடுத்துபவராகவே (Regulator) இருந்தது. 1990–களில் மேற்கொள்ளப்பட்ட தாராளமயமாக்குதலுக்குப் பிறகு, தொழிலகங்களை பொறுத்தவரை அரசின் அணுகுமுறை என்பது வசதிகள் அளித்து ஊக்குவிப்பவர் (Facilitator) என்ற வகையில் மாறியுள்ளது. இணக்கங்களை வெகுவாகக் குறைத்தல் மற்றும் எளிமைப்படுத்துதல், முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன் சிறப்பான கொள்கைகள் வடிவமைத்தல் மற்றும் வணிகம் புரிதலை எளிதாக்குதல் மூலம் மாநிலத்தில் முதலீட்டிற்கு சாதகமான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அரசு, முதலீட்டாளர்களின் வசதிகள் அளிப்பவராக விளங்குகிறது.

வலுவான தொழில் வளர்ச்சி மற்றும் சேவைத்துறை சார்ந்த வளர்ச்சி ஆகியவை மூலம், தமிழ்நாடு தனது பொருளாதார முக்கியத்துவத்தை நன்கு வெளிப்படுத்தி வருகிறது. மேற்கூறிய சேவை கலந்த தொழில் வளர்ச்சி மூலம், வேலை வாய்ப்பு

மற்றும் தனிநபர் வருமானம் உயர்வு போன்ற காரணிகளால், தமிழ்நாடு, பொருளாதார வளர்ச்சியில் மேலும் பலன் அடைந்துள்ளது. அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்திய காரணத்தால், நாட்டில் ஏற்பட்ட நுகர்வு சார்ந்த வளர்ச்சியை, இம்மாநிலத்தால் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.

திட்டமிடுதலைப் பொறுத்த வரையில், தொழில்துறை உற்பத்தியை அதிகப்படுத்துதல், மதிப்புக் கூட்டல் மற்றும் மாநிலத்தில் உள்ள திறன்மிகு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் போன்றவைகளில், தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. தற்போதுள்ள தொழிற்சாலைகளில் தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல், புதிய உயர் மதிப்புக் கூட்டல் தொழில்களை ஈர்த்தல் மற்றும் வளர்ந்து வரும் துறைகளான, மின் வாகனங்கள், நிதி நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள் உற்பத்தி, Industry 4.0 ஆகியவற்றை ஆதரித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம், இந்த இலக்குகளை அடைய இயலும். வேகமாக மாறி வரும் பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் உற்பத்தித் துறை

எதிர்கொள்ளும் சவால்கள், ஆகியவற்றை சமாளித்திட, தமிழ்நாட்டில் இயங்கிடும் தொழிலகங்களின் போட்டித்தன்மையை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு அரசு முனைப்புடன் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சியோடு, நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியடைய வேண்டும் என்ற இலக்கை அடைவற்கு தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது.

**தங்கம் தென்னரசு**
தொழில் துறை அமைச்சர்